பக்கங்கள்: 20

விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 02 வள்ளுவர் ஆண்டு 2049 மாசி 29 செவ்வாய்க்கிழமை 13.03.2018 கதிர் 128

## சமூக ஊடக தடையை உடன் நீக்குக!

### ஆஸி. கோரிக்கை

கொழும்பு, மார்ச் 13
சமூக ஊடகங்கள் மீதான தடை நீக்கப்படவேண்டுமென ஆஸ்திரேலியா கோரியுள்ளது.

பக்கம் 03

## முஸ்லிம் பிரமுகர்கள் பலர் கோட்டா பின் அணி திரள்வு

### புலனாய்வுத் தகவல்களினால் ஆடிப் போயிருக்கின்றது அரசு

கொழும்பு, மார்ச் 13
கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது கடைசி நேரத்தில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தரப்பைக் கழற்றிவிட்டு, அப்போதைய கூட்டு எதிரணி வேட்பாளர் மைத்திரிபால சிறிசேன பக்கம் சாய்ந்த முஸ்லிம் வர்த்தகர்கள், பிரமுகர்கள் பலர், அண்மைக்கால வன்முறைச் சம்பவங்களை அடுத்து, கோட்டாபய ராஜபக்ஷ பின்னால் அணி திரளத் தொடங்கியுள்ளனர் என்ற புலனாய்வுத் தகவல்கள் அரசுத் தலைமைக்குக் கிடைத்துள்ளனவாம்.
இந்தத் தகவல்களால் அரசுத் தலைமை ஆடிப்போயிருப்பதாகக் கொழும்பு வட்டாரங்கள் சில தெரிவித்தன.

பக்கம் 03

## மஹிந்த தலைமையில் விரைவில் புதிய அரசு

### ஜி.எல்.பீரிஸ் நேற்று சூளுரை



கொழும்பு, மார்ச் 13
வெகுவிரைவில் ஆட்சியைக் கைப்பற்றி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் புதிய அரசை நிறுவுவோம். மஹிந்த பலம் வாய்ந்த தலைவர். அவரால் நிச்சயம் அதைச் செய்ய முடியும்.
இவ்வாறு சூளுரைத்துள்ளார் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைவர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ்.
இலங்கையில் ஆட்சியைக் கைப்பற்றுவது இரா. சம்பந்தனால்

பக்கம் 18

## கண்டி இன வன்முறைகளுக்கு சமூக ஊடகங்கள் காரணமல்ல!

### அடித்துக் கூறுகிறது அமெரிக்கா



கொழும்பு, மார்ச் 13
இலங்கையில் ஏற்பட்ட அமைதியற்ற நிலைக்குச் சமூக வலைத்தளங்கள் காரணமல்ல என இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அதுல்கெசாப்தெரிவித்துள்ளார்.

பக்கம் 04

## சாவகச்சேரியில் புலிச் சீருடை !

சாவகச்சேரி, மார்ச் 13
சாவகச்சேரிப் பகுதியில் நேற்று விடுதலைப் புலிகளின் சீருடை ஒன்றும் வெடித்த வெடிபொருள்களும் மீட்கப்பட்டுள்ளன.
நேற்றுத் திங்கட் கிழமை மாலை

பக்கம் 18

## கடும் வேலைப்பளுவால் ஜெனீவா செல்லவில்லை

### வடக்கு முதலமைச்சர் தெரிவிப்பு



கிளிநொச்சி, மார்ச் 13
எனக்கு உள்ள வேலைப் பளு காரணமாக நான் ஜெனீவாவுக்குச் செல்லவில்லை. இருப்பினும், எமது உறுப்பினர்கள் சகல விடயங்களையும் அங்கு எடுத்துரைப்பார்

பக்கம் 04

## ஊடக சுதந்திரத்தைச் சிலர் தவறாகப் பாவிக்கின்றனர்

### அமைச்சர் துமிந்த குற்றச்சாட்டு



கொழும்பு, மார்ச் 13
சில இணைய ஊடகங்கள் தமது பெயரைப் பயன்படுத்திப் பொய்யான செய்திகளை உருவாக்கிப் பின்னர் மாதாந்த விளம்பரத்தைக் கேட்டுச் சமரசம் செய்து கொள்ளும் ஒழுக்கக்கேடான ஊடகப்பயன்பாட்டில் ஈடுபட்டு வருகின்றன என அமைச்சர்துமிந்ததிஸாநாயக்க குற்றம் சுமத்தியுள்ளார்.

பக்கம் 03

## மன்னார் மாவட்ட அரச அதிபருக்கு இடமாற்றம்



மன்னார், மார்ச் 13
மன்னார் மாவட்ட அரச அதிபராக கடந்த நான்கு வருடங்களுக்கு

பக்கம் 18

## மகாநாயக்கர்கள் சொற்படி நடப்பதே அரசுக்கு நல்லது

### கோட்டாபய ஆலோசனை



கொழும்பு, மார்ச் 13
அரச சார்பற்ற நிறுவனங்களின் ஆலோசனையை அரசு பின்பற்றுவதே நாட்டில் அதிகளவான பிரச்சினைகள் எழுவதற்கு காரணமென முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.
மகாநயக்கர்களின் ஆலோசனையைக் கேட்டு நடந்தால் பிரச்சினைகள் ஏற்படாது என்றும் அவர் கூறினார்.
நாட்டில் தற்போது

பக்கம் 18

## சமூக ஊடகத் தடையால் பொருளாதாரம் பாதிப்பு

### அமைச்சர் ஹர்ஷா எடுத்துரைப்பு

கொழும்பு, மார்ச் 13
சமூக ஊடகங்களை முடக்கிவைத்துள்ளமையால் நாட்டின் பொருளாதாரத்துக்குப் பாதக நிலை ஏற்படும் எனப் பொருளாதர இராஜாங்க அமைச்சர் ஹர்ஷா டி சில்வா, ஜனாதிபதியின் செயலாளரும் தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்

பக்கம் 18

## யாழ். இந்தியத் துணைத் தூதராக பொறுப்பேற்றார் பாலச்சந்திரன்

யாழ்ப்பாணம், மார்ச் 13
யாழ். இந்தியத் துணைத் தூதரகத்தின் புதிய தூதுவராக நியமிக்கப்பட்ட சங்கர் பாலச்சந்திரன், நேற்றுத் திங்கட் கிழமை தனது கடமைகளைப் பொறுப்பேற்றார்.
இந்த நிகழ்வு, யாழ்ப்பாணம் மருதடி வீதியில் அமைந்துள்ள இலங்

பக்கம் 03

## விமான உதிரிப்பாகங்கள் பாணந்துறையில் சிக்கின!

கொழும்பு, மார்ச் 13
பாணந்துறை – அளுபோமுல்ல பிரதேசத்தில் விமானம் ஒன்றின் உதிரிப்பாகங்கள் சிலவற்றைப் பொலிஸார் கண்டுபிடித்துள்ளனர்.
கிடைக்கப் பெற்ற இரகசியத் தகவலையடுத்து நேற்றுத் திங்கட் கிழமை பகல் சம்பவ இடத்

பக்கம் 04

## இரு சிறுமிகளை வன்புணர்ந்த இருவருக்குக் கடூழியச் சிறை!

### நீதிபதி இளஞ்செழியன் தீர்ப்பு

(எஸ்.நிதர்ஷன்)
யாழ்ப்பாணம், மார்ச் 13
யாழ்ப்பாண மேல் நீதிமன்ற நியாயாதிக்க எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் இடம்பெற்ற இரு வேறு பாலியல் வன்புணர்வுச் சம்பவங்களில் ஈடுபட்டவர்கள் என்று கூறப்படும் இரண்டு பேருக்கு யாழ்.மேல் நீதிமன்றம் நேற்றுக் கடூழியச் சிறைத் தண்டனை விதித்

பக்கம் 18

## யாழ்.பல்கலை செயற்பாடுகளை முற்றாக முடக்கிப் போராட்டம்!

### கல்விசாரா ஊழியர்கள் இன்று ஆரம்பிப்பர்



யாழ்ப்பாணம், மார்ச் 13
தொடர் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுவரும் யாழ்ப் பாணப் பல்கலைக்கழகக் கல்விசாரா ஊழியர்கள், பல்கலைக்கழகத்தை முற்றாக

பக்கம் 18

## ஜப்பானில் மைத்திரி

ரோக்கியோ, மார்ச் 13
ஜப்பான் மற்றும் இலங்கைக்கு இடையிலான நீண்டகால இருதரப்பு உறவுகளை மேலும் பலப்படுத்தும் நோக்குடன் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அரச முறைப் பயண

பக்கம் 18

### இனிது ரகசியம் அல்ல!

தமிழரசுக் கட்சியின் உள்வீட்டு விவகாரம் குறித்து நேற்று இப்பத்தியில் எழுதினேனோ இல்லையோ, தொடர்ந்து அக்கட்சியின் அதிருப்தியாளர்கள் பலரிடமிருந்தும்தொ(ல்)லைபேசி அழைப்புகள் வந்தன. தங்களுக்குத் தெரிந்த – அறிந்த – பல விடயங்களை வெளியே கொண்டு வர இப்பத்தி உதவுமோ என்ற நப்பாசை போலும் அவர்களுக்கு.

பக்கம் 03

# ஒரு சிலரின் இழிவான செயல்கள் காரணமாக முழு உலகமும் சிங்கள இனத்தை குற்றம் சுமத்துகிறது!

ஒரு சிலரின் இழிவான செயல்கள் காரணமாக முழு உலகிலும் சிங்கள இனம் குற்றச்சாட்டை எதிர்நோக்கி இருக்கிறது என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

வெல்லம்பிட்டி பிரதேசத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற சமய நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு பேசும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இந்தச் சம்பவங்கள் ஊடாக உலகில் ஏனைய நாடுகளுடன் இலங்கையை ஒப்பிட்டுப்பார்க்கும் நிலைமை ஏற்பட்டுள்ளது. அது மாத்திரமல்ல தெற்காசியாவில் வாழும் ஏனைய பௌத்த மக்களுக்கு இது பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

வன்முறை அழிவு தொடர்பான செய்தி மிக விரைவில் உலகம் முழுவதும் பரவியுள்ளது. கொழும்புக்கு அடுத்து அதிகளவான சுற்றுலாப் பயணிகள் வரும் நகரம் கண்டி.

மேலும் சுற்றுலாப் பயணிகளாக வரும் அரேபியர் அதிகளவில் கண்டிக்கு பயணம் மேற்கொள்கின்றனர்.

எனினும், அண்மையில் கண்டியில் ஏற்பட்ட நிலைமைகள் சுற்றுலாத் தொழிற்றுறைக்கும் பெரிய பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்தப் பிரச்சினை குறித்து உடனடியாக கவனம் செலுத்தி கண்டி நகரின் நிலைமையை துரிதமாக வழமை நிலைமைக்குக் கொண்டு வருமாறு ஓட்டோக்களை ஓட்டும் தொழிலில் ஈடுபட்டுள்ள பல இளைஞர்கள் என்னிடம் கூறினர்.



ரணில் விக்ரமசிங்க தெரிவிப்பு

சுற்றுலாப் பயணிகளின் வருகை குறைந்துள்ளதால், வருமானம் இன்றி எப்படி வாழ்க்கை நடத்துவது எனவும் அவர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர். இந்தச் சம்பவங்கள் காரணமாக பெரிய நட்டம் ஏற்பட்டுள்ளதை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

சிங்கள சாரதியை மது போதையில் தாக்கிய சம்பவம் காரணமாக இந்தப் பிரச்சினை ஆரம்பமானது.

இந்தச் சம்பவங்களுடன் தொடர்புடைய குற்றவாளிகளை உடனடியாக சட்டத்திற்கு முன் கொண்டுவருமாறு நான் பொலிஸ் மா அதிபருக்கு உத்தரவிட்டேன்.

குற்றவாளிகளுக்கு தண்டனை வழங்கும் செயற்பாடுகளை துரிதப்படுத்த வேண்டும். சம்பவங்களை பரவச் செய்த நபர்கள் தொடர்பிலும் சட்டத்தை அமுல்படுத்த வேண்டும்.

எவ்வாறாயினும் இந்த நெருக்கடியான நிலைமை கண்டியுடன் முடிவடைந்து விட்டது. கண்டியில் ஆரம்பித்த வன்முறை நாடு முழுவதும் பரவுமோ என்ற அச்சம் பலருக்கு இருந்தது.

எனினும், அப்படியான நிலைமை ஏற்படவில்லை. அதனைத் தடுத்து நிறுத்த எம்மால் முடிந்தது எனவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டுள்ளார்.

## சைக்கிளில் சென்றவர் விபத்தில் சிக்கி காயம்



வவுனியா, மார்ச் 13

வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலைக்கு அருகே யுள்ள சுற்றுவட்ட வீதியில் பாரவூர்தி - சைக்கிள் மோதி விபத்துக்குள்ளானதில் ஒருவர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

நேற்றுக் காலை 5.30 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

ஹொரவப்பொத்தானை வீதியூடாக வவுனியா புதிய பஸ் நிலையம் நோக்கி பயணித்துக் கொண்டிருந்த சைக்கிளின் மீது கண்டி வீதியூடாக யாழ்ப்பாணம் நோக்கி பயணித்த பாரவூர்தி மோதியதில் அதில் பயணித்தவர் காயமடைந்த நிலையில் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்த விபத்துச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வவுனியா போக்குவரத்து பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(க -100)

## வவுனியா பிரதேச செயலகத்தில் 17 கிராம அலுவலர் வெற்றிடம்

வவுனியா பிரதேச செயலகத்தில் 17 கிராம அலுவலர் வெற்றிடங்கள் காணப்படுகின்றன என பிரதேச செயலாளர் கா.உதயராசா தெரிவித்துள்ளார்.

வவுனியா பிரதேச செயலகத்தில் நேற்று இடம் பெற்ற பிரதேச அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

வவுனியா பிரதேச செயலக பிரிவில் ஆளணிப் பற்றாக்குறை காணப்படுகின்றது.

குறிப்பாக, எமது பிரதேச செயலகத்தில் 17 கிராம அலுவலர் வெற்றிடங்கள் காணப்படுகின்றன.

இந்த ஆளணி நிரப்பப்படாமையால் எமது சேவைகளை இலகுவாக செயற்படுத்த முடியாத நிலை காணப்படுகின்றது. இதனைக் கருத்தில்



கொண்டு பிரதேச அபிவிருத்திக் குழுவின் இணைத் தலைவர்கள், கிராம அலுவலர் வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்கவேண்டும் எனத் தெரிவித்தார்.

100

### வவுனியாவில் நேற்று கடும் காற்று, மழை :

## வீதி அபி.அதிகாரசபை அலுவலகம் மேல் பாறி வீழ்ந்த மரம்!



வவுனியாவில் நேற்றுப் பெய்த மழை மற்றும் கடும் காற்றுடனான காலநிலை காரணமாக பெரிய மரம் ஒன்று சரிந்து வீழ்ந் துள்ளது. இதில் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் அலுவலகத்திற்குச் சேதம் ஏற்பட்டுள்ளது.

நேற்று மதியம் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வவுனியா, கண்டி வீதியிள்ள வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பிரதம பொறியியலாளர் அலுவலக வளாகத்தின் அலுவலகக் கட்டடத்தின் மீதே இந்த மரம் பாறி வீழ்ந்துள்ளது.

இதனால், அலுவலகத்தின் கூரைப் பகுதி மற்றும் சுவர் என்பன பாதிப்படைந்துள்ளன. தெய்வாதீனமாகக் கடமையில் இருந்த உத்தியோகத்தர் எவருக்கும் எந்தப் பாதிப்பும் ஏற்படவில்லை.

(க-100)

# வடக்கு முதலமைச்சரின் பணிப்பை அடுத்து வவுனியாவில் பாதசாரிகள் கடவை அமைப்பு



வவுனியா, மார்ச் 13

வடமாகாண முதலமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க வவுனியா புதிய பஸ் நிலையம் முன்பாக பாதசாரிகள் கடவை அமைக்கப்பட்டுள்ளது.

வடமாகாண முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரன் முன்வைத்த கோரிக்கைக்கு அமைவாக வவுனியாவில் 195 மில்லியன் ரூபா செலவில் புதிதாக நிர்மாணிக்கப் பட்ட பஸ் நிலையம் முன்பாக வீதி அபிவிருத்தி அதிகார சபையின் வவுனியா நிறைவேற்று பொறியியலாளரின் மேற் பார்வையின் கீழ் புதிய பாதசாரிகள் கடவை அமைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இந்தப் பகுதியில் பாதசாரிகள் கடவை இல்லாமையால் பயணிகள் பல்வேறு சிரமங்களை எதிர் நோக்கியிருந்தமையும், விபத்துக்கள் ஏற்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

(க-100)

# தெரிவான உறுப்பினர்களின் விவரம் வர்த்தமானியில்!

யாழ்ப்பாணம், மார்ச் 13

நடந்து முடிந்த உள்ளூராட்சிச் சபைத் தேர்தல்களில் வெற்றி பெற்ற மற்றும் விகிதாசாரப் பட்டியல் மூலம் சபைக்கு நியமனம் பெற்ற உறுப்பினர்களின் பெயர் விவரங்களைத் தேர்தல் ஆணைக்குழு அங்கீகரித்து, வர்த்தமானியில் பிரசுரிப்பதற்காக அரச அச்சகத்துக்கு அனுப்பி விட்டது எனக் கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

வர்த்தமானியில் இன்று அது பிரசுரமாகும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

தெரிவான உறுப்பினர்களின் விவரப்பட்டியல் வர்த்தமானியில் பிரசுரமாகி ஒரு மாத காலத்துக்குள் சம்பந்தப்பட்ட சபைகள் கூட வேண்டும் என்பது உள்ளூராட்சி சட்ட விதியாகும்.

அதன்படி சம்பந்தப்பட்ட சபைகளை உடன் கூட்டுவதற்கான ஏற்பாடுகளை சம்பந்தப்பட்ட மாவட்டங்களின் உள்ளூராட்சி ஆணையாளர் முன்னெடுப்பார் என்பது குறிப்பிடத்தக்கது. (உ)

# கூட்டமைப்பு உறுப்பினர்கள் சனியன்று பதவியேற்பர்

## இளங்கலைஞர் கலா மண்டபத்தில் நிகழ்வு

நடந்து முடிந்த உள்ளூராட்சித் தேர்தலில் தமிழ்க் கூட்டமைப்பின் சார்பில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வீட்டுச் சின்னத்தில் போட்டியிட்டு வட்டார ரீதியில் தெரிவான உறுப்பினர்களும், விகிதாசாரப் பிரதிநித்துவப் பட்டியலிலிருந்து கட்சியினால்சம்பந்தப்பட்ட சபைகளுக்கு உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டவர்களும் எதிர்வரும் சனிக்கிழமை தத்தமது உறுப்பினர் பதவிகளை ஏற்றுக் கொள்வர் எனத் தெரிகின்றது.

வடக்கு மாகாணத்தின் சகல உள்ளூராட்சி சபைகளுக்கும் தமிழரசுக் கட்சியின் வீட்டுச் சின்னத்தில் தெரிவான கூட்டமைப்பு உறுப்பினர்கள் அனைவருக்கும் எதிர்வரும் சனிக்கிழமை காலை 10 மணிக்கு யாழ்ப்பாணம், நல்லூர் இளங்கலைஞர் கலா மண்டபத்தில் ஒன்றுகூடி, சத்தியப்பிரமாணம் செய்து தமது சபை உறுப்பினர் பொறுப்புகளை ஏற்றுக் கொள்வர்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா முன்னிலையில் இந்தப் பதவியேற்பு நிகழ்வு இடம்பெறும். (உ)








இலங்கையில் இடம்பெற்ற தமிழ் இன அழிப்பிற்கு நீதி கோரி மாபெரும் போராட்டம் ஒன்று ஜெனீவாவில் நேற்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இந்தப் போராட்டம் ஜெனீவா ரயில் நிலையத்திற்கு அருகாமையில் உள்ள பூங்காவில் நேற்றுப் பிற்பகல் 2.00 மணியளவில் ஆரம்பமாகியது. அப்போது எடுக்கப்பட்ட படங்கள் சில.

### யாழ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கைக்கான இந்தியத் துணைத் தூதரகத்தில் நேற்றுக் காலை இடம்பெற்றது.

யாழ். இந்தியத் துணைத் தூதரகத்தின் துணைத் தூதுவராகக் கடந்த 4 வருடங்களுக்கு மேலாகக் கடமையாற்றிய ஆறுமுகம் நடராஜன் தனது சேவைக் காலத்தை நிறைவு செய்து டில்லிக்குப் பயணமாகிய நிலையிலேயே, புதிய தூதுவராகச் சங்கர் பாலச்சந்திரன் நியமிக்கப்பட்டுள்ளார். (ஐ)

# இந்தியாவிடம் நேற்று தோற்றது இலங்கை

இலங்கையின் 70 ஆவது சுதந்திர தினத்தையொட்டி நடைபெற்ற நான் காவது 20 ஓவர் கிரிக்கெட் போட்டியில் இந்தியா அணி 6 விக்கெட்களால் வெற்றி பெற்றுள்ளது.

நேற்று நடைபெற்ற போட்டியில் இலங்கை – இந்தியா அணிகள் மோதிக்கொண்டன. இந்தப் போட்டியின் நாணய சுழற்சியில் இந்தியா அணி வெற்றி பெற்று முதலில் பந்துவீசத் தீர்மானித்தது.

இதன்படி, முதலில் துடுப்பெடுத் தாடிய இலங்கை அணி 19 ஓவர்கள் முடிவில் 9 விக்கெட்களை இழந்து 152 ஓட்டங்களை பெற்றது.

153 எனும் வெற்றி இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய இந்தியா அணி 17.3 ஓவர்களில் 4 விக்கெட்களை இழந்து 153 ஓட்டங்களை பெற்று போட்டியில் வெற்றி பெற்றது.

நேற்றைய போட்டி தாமதமாக ஆரம்பித்த காரணத்தால் 19 ஓவர்களுக்கு அது மட்டுப்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

### இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அப்படி முன்வைக்கப்பட்ட கருத்துக்களில் ஒன்றை மட்டும் இங்கு பிரஸ்தாபிப்பது இப்போதைக்குப் பொருத்தமானது என நினைக்கிறேன். அந்தத் தொலைபேசி அழைப்பை எடுத்தவர் தமிழரசுக் கட்சியின் மூத்த ஆதரவாளர். முதலில் தொலைபேசியில் பேசினார். பிறகு நேரில் அலுவலகத்துக்கே வந்தார்.

*“தம்பி தமிழரசைக் காப்பாற்ற வேணும். நீங்கள் போட்டு அடிக்கிறது கட்சியை வளர்க்க உதவப் போவதில்லை. திருத்திற வழிகளிலை அவையளுக்கு ஆலோசனைசொல்லுங்களேன்”*–என்று முதலில் எனக்கு *‘அட் வைஸ்’ தந்தார்.*

*ஆனாலும், அவர் சொன்னவையும் இன்னும் தமிழரசுக் கட்சியை தாக்குவன போலவே காணப்பட்டன.*

*“தம்பி தமிழரசுக் கட்சியை தந்தை செல்வா தொடங்கின காலத்திலை ஆரம்பத்தில்தான் கட்சிக்கு அவர் தலைவராக இருந்தவர். பிறகு கட்சித் தலைவர் பதவியை மாறி மாறி மற்றத் தலைவர்களுக்குக் கையளித்து அவர்களையும் மக்களை வழிகாட்டக் கூடியதாக வளர்த்துத்தான் விட்டவர்.*

*“கு.வன்னியசிங்கம், எஸ்.எம். இராசமாணிக்கம், இ.மு.வி.நாகநாதன் எண்டு அஞ்சாறு பேர் தந்தையின் காலத்திலேயே கட்சியின் தலைவர்களாக வந்து விட்டனர்.*

*“ஏன் 2010 இலும், 2012 இலும் கட்சி மாநாடுகளில் தலைவராகத் தெரிவு செய்யப்பட்ட சம்பந்தனும் கூட மெல்ல அந்தப் பொறுப்பை மாவை சேனாதிராசாவிடம் ஒப்படைச்சுப் போட்டு பார்த்து இரசிக்கின்றார்.*

*“2014 இலிலை வவுனியா மாநாட்டில் கட்சித் தலைவராகப் பதவியேற்ற மாவையர் இப்ப நான்கு வருடமாகியும் அடுத்த மாநாட்டுக்கு இன்னும் ஏற்பாடுகள் கூடச் செய்யவில்லை.*

*“சம்பந்தன் மாதிரி அடுத்த தலைவரைக் கைகாட்டுற பொறுப்பு மாவையருக்கும் இருக்கு. பிற்காலத்திலை குழப்பம் வராம இருக்கிறத்துக்கு இப்பவே அவர் காரியம் பார்க்க வேணும் தம்பி. இருக்கும் வரைதான் இருந்திட்டுப் போக வேணும் எண்டு அவர் நினைக்கக்கூடாது. தந்தை செல்வா மாதிரி அடுத்த தலைவர்களையும் அடையாளப் படுத்தி முன்னுக்குக் கொண்டு வரவேணும் பாருங்கோ...*

*“இல்லாட்டிக்குப் பிறகு கட்சி வந்தார், வரத்தார் கைகளிலை, நேற்று வந்தவையளின்ர பிடியிலை சிக்கிச் சின்னாபின்னமாகிவிடும் அவலம் வந்துவிடும்.”*

– இப்படி அவர் நேரிலை வந்து தெரிவித்த எச்சரிக்கையில் ஏதோ அர்த்தம் புதைந்து கிடப்பதாக எனக்குத் தோன்றியது.

*“நாலு வருசம் உவர் தலைவராய் இருந்து போட்டார்தானே. இப்ப தேர்தலிலையும் பின்னடைவு. அதுக்கும் பொறுப்பேற்று அடுத்த தலைமையிடம் உதை ஒப்படைக்கிறதுதான் உவர் செய்யக்கூடிய சரியான காரியம் பாருங்கோ...!*

*“பல வருசங்களுக்கு ஒருக்கா தேசிய மாநாடு எண்டிறதையும், கட்சியின் யாப்புக்கு மாறாகத்தான் எழுதி எடுத்திட்டு வருகிற கட்சிப் பதவிப் பட்டியலை, ஏதோ ஜனநாயக ரீதியிலை தெரிவு செய்யிற மாதிரி மாவையர் அறிவிக்கிறதையும் இந்த முறையாவது அவர் நிப்பாட்ட வேணும். கட்சி அடி மட்டங்களில் இருந்து ஜன நாயக முறையிலை தேர்வுகள் நடக்க வேணும். தனக்குப் பிடிச்ச ஆள்களை, ஆளுக்கொரு பதவி கொடுத்து அறிவிக்கிறதையும், அதை ஜனநாயகத் தெரிவு எண்டு பூச்சாண்டி காட்டுறதையும் அவர் நிப்பாட்டினா கட்சி வளரும் பாருங்கோ...*

*“கட்சியை ஜனநாயக விரோதமாக நடத்தி, வேட்பாளர் தெரிவிலை இருந்து எல்லாத்திலையும் குளறுபடி செய்ததாலைதான் முடிஞ்ச தேர்தலிலை உந்த அடி மக்கள் கொடுத்தவை. இனி யாவது உவை திருந்த வேணும்.*

*“கட்சி மாநாட்டை உடன் கூட்டி, ஜனநாயக முறையிலை அதை நடத்திக் காட்டினால்தான் கட்சி இனித் தப்பும் .*

*“இல்லாட்டி தந்தை செல்வா சொன்ன மாதிரி தமிழரை மாத்திரமல்ல, தமிழரசுக் கட்சியையும் கூட கடவுள் வந்துதான் இனிக் காப்பாற்ற வேண்டியிருக்கும்.*

*“தன்ரை காலத்தோடை தமிழரசுக் கட்சியின்ரை காலத்தையும் முடிக்கிறதோ அல்லது தந்தை வழியிலை அதை செழுமைப் படுத்திறதோ எண்டதை மாவையர் தீர்மானிக்க வேண்டிய வேளை வந்திட்டுது எண்டுதான் நான் நினைக்கிறேன்..” –என்றார் அந்தப் பெரியவர்.*

*“மகனை மெல்ல நுழைச்சுப் போட்டார். மகனை அடுத்த தலைவரா வளர்க்கும் வரை நான்தான் தலைவர் எண்டு அவர் அடம்பிடிக்க மாட்டார் எண்டு நம்புறன்..”*–என்று முத்தாய்ப்பு வைத்தார் அவர்.

அவர் கூறிய கூற்றுகளுக்கு நடுவிலே பல விடயங்கள் அர்த்த புஷ்டியாகப் பொதிந்து கிடக்கின்றன என எனக்குத் தோன்றியது. அதனால் அந்தக் கிழவரின் நீண்ட விளக்கத்தைச் சுருக்கி இங்கு தந்துள்ளேன். புரிந்து கொள்வதும், புரிந்து கொள்ளாததும், இதில் இருக்கும் நல்ல விடயங்களை கவனத்தில் எடுப்பதும் எடுக்காமல் விடுவதும் சம்பந்தப்பட்டோரைப் பொறுத்தது.

மாவைக் கந்தா... நீதான் தமிழரை மட்டுமல்ல, தமிழரசையும் காப்பாற்ற வேண்டும்...! செய்வாயா.....?

-மின்னல்-

### சமூக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கைக்கான ஆஸ்திரேலியத் தூதுவர் பிறைஸ் ஹட்சிசன் இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

நாட்டில் சமூக ஊடகங்கள் மீதுபிறப்பிக்கப்பட்டுள்ளதடையை நீக்குவதற்கான காலம் இது வென அவர் தெரிவித்துள்ளார்.

அண்மையில் கண்டியில் இடம்பெற்ற வன்முறைகளைத் தொடர்ந்து இலங்கையில் சமூக ஊடகங்கள் தடை செய்யப்பட்டன.

சமூக ஊடகங்கள் மீதான தடைக்கு அமெரிக்கத் தூதுவர் அதுல் கெசாப்பும் எதிர்ப்பை வெளியிட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

### முஸ்லிம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உள்ளூராட்சித் தேர்தல் சமயத்தில் வெளிநாடு சென்றிருந்த முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷ நாடு திரும்பிவிட்டார்.

அண்மையில் கண்டியில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களை அடுத்து பெரும் முஸ்லிம் வர்த்தகர்கள் மற்றும் பிரமுகர்கள் கோட்டாபய ராஜபக்ஷவைச் சந்தித்து அல்லது அவருடன் தொடர்பு கொண்டு அவருக்குத் தமது ஆதரவைத் தெரிவித்து வருகின்றார்களாம்.

அடுத்த வருட இறுதியில் நடைபெறப் போகும் ஜனாதிபதித் தேர்தலில் கூட்டு எதிரணி வேட்பாளராகக் கோட்டாபய ராஜபக்ஷ நிறுத்தப்படலாம் என எதிர்பார்க்கப்படும் பின்புலத்தில், அவருக்குத் தமது முழு ஆதரவை வழங்குவதற்கு அவர்கள் விருப்பமும் இசைவும் தெரிவித்து வருகின்றார்கள் என்றும் –

முஸ்லிம்களின் வாக்குப்பலமும், பெரும் வர்த்தகர்களின் நிதிப் பலமும் கூட, இப்போதே கோட்டாபய ராஜபக்ஷ பக்கம் திரும்பத் தொடங்கி விட்டன என்றும் –

அரசுத் தலைமைக்குப் புலனாய்வுப் பிரிவினர் அறிக்கைகள் மூலம் தகவல்கள் தெரிவித்திருக்கின்றனர் என்று தெரிய வருகின்றது.

இது ஏற்கனவே பிளவுபட்டு நிற்கும் நல்லாட்சி அரசுத் தரப்புக்குள் பெரும் குழப்பத்தை உண்டு பண்ணியிருப்பதாகவும் கூறப்படுகின்றது.

நல்லாட்சி அரசின் கீழும் தாங்கள் மோசமாக நடத்தப்படுகின்றோம் எனக் கருதும் முஸ்லிம் பெருவர்த்தகர்கள், நேரத்துடன் கோட்டாபய ராஜபக்ஷவுடன் தாங்கள் அணி சேர்ந்து அடையாளப்படுத்திக் கொண்டால், அவரது நிர்வாகக் காலத்தில் சிக்கலின்றி தாங்கள் காரியங்களைக் கொண்டு போகலாம் என்ற சிந்தனையில் உள்ளனர் எனவும் கருதப்படுகின்றது.

அண்மைக் காலத்தில் கோட்டாபய மற்றும் அவருக்கு நெருக்கமான தரப்புகளுடன் திடீர்த் தொடர்புகளைப் பெருக்கிக் கொண்ட முஸ்லிம் வர்த்தகர்கள் மற்றும் பிரமுகர்களின் பட்டியல் ஒன்றும் அரசுத் தலைமையின் பார்வைக்கு வந்திருப்பதாகத் தெரிகின்றது.

இவர்களில் பலர் ஏற்கனவே நல்லாட்சி அரசுத் தரப்பின் முக்கியஸ்தர்களுடனும் நெருங்கிய சகவாசம் கொண்டுள்ளனர் என்றும் சுட்டப்படுகின்றது. (உ)

### ஊடக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பில் ஊடகங்களிடம் பேசும்போதே அமைச்சர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:–

எழுத்து மற்றும் பேச்சுச் சுதந்திரம் என்ற போர்வையில் இப்படியான மோசடிகளைச் செய்ய இடமளிக்க முடியாது. அரசு வழங்கிய ஊடக சுதந்திரத்தைத் தவறாகப் பயன்படுத்துவதைக் கண்டிக்கின்றோம்.

சமூக வலைத்தளங்களைத் தொடர்ந்தும் தடை செய்யும் தேவை அரசுக்கு இல்லை. அதனை இனவாதத்தைத் தூண்டும் கருவியாக பயன்படுத்துவோருக்கு எதிராகச் சட்டம் கடுமையாக அமுல்படுத்தப்படும்.

ஒரு நபரின் பேச்சுச் சுதந்திரத்துக்காக ஊடகங்களைத் தவறாகப் பயன்படுத்த இடமளித்து இரண்டு கோடிக்கும் மேற்பட்ட மக்களின் அடிப்படை மனித உரிமைகளை ஆபத்தில் தள்ள அரசால், இடமளிக்க முடியாது. – என்றார். (ஐ)

# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## ஜெனீவா மேடையை தமிழர்கள் ஒன்றுபட்டு அணுக வேண்டும்

யுத்த காலத்தில் இடம்பெற்றவிடயங்கள், யுத்தக் குற்றங்கள், மனித உரிமை மீறல்கள், மனித குலத்துக்கு எதிரான நடவடிக்கைகள் போன்றவை தொடர்பில் பொறுப்புக்கூறல், உண்மைகளைக் கண்டறிதல், மீள நிகழாமையை உறுதிப்படுத்தல், நல்லிணக்கத்தை ஏற்படுத்துதல் போன்றவற்றில் இலங்கை குறிப்பிடத்தக்க - காத்திரமான முன்னேற்றம் எதனையும் காட்டவில்லை. ஆகையால் இலங்கை தொடர்பாக சர்வதேச சட்டங்களையும் அதிகாரங்களையும் செயற்படுத்தக் கூடிய வகையில் பிரேரணை ஒன்றை முன்வைக்கும்படி ஐக்கிய நாடுகள் சபையின் உறுப்பு நாடுகளுக்குத் தான் அழுத்தம் கொடுக்கவிருக்கின்றார் என ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நாயகம் செய்த் ராட் அல் ஹுசைன் தெரிவித்திருக்கின்றார்.

ஜெனீவாவில் தற்போது நடைபெற்று வரும் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் 37 ஆவது கூட்டத் தொடரையொட்டி கடந்த வாரம் இந்தத் தகவலை வெளியிட்டிருக்கின்றார் அவர்.

இந்த விடயம் தொடர்பாக 21 ஆம் திகதி - அடுத்த வாரம் - அவர் மனித உரிமைகள் கவுன்ஸிலுக்கு விளக்கமளிக்க உள்ளார். அந்த விளக்கத்தின் நடுவே இத்தகைய பிரேரணை ஒன்றைக் கவுன்ஸிலுக்குக் கொண்டு வருவதன் மூலம் இலங்கைக்கு அழுத்தம் தரக் கோரும் பரிந்துரையை அவர் முன்வைப்பார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அவரது பரிந்துரையின் அடிப்படையில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் இந்தக் கூட்டத் தொடரிலேயே இத்தகைய பிரேரணை ஒன்று மேலதிகமாக முன்வைக்கப்படுவதற்கும் வாய்ப்புகள் இருக்கின்றன என ஜெனீவாத் தகவல்கள் கூறுகின்றன.

உண்மைகளைக் கண்டறிதல், பொறுப்புக் கூறல், நல்லிணக்கத்தை ஏற்படுத்துதல், இனங்களுக்கிடையில் சமாதானத்தையும் சகவாழ்வையும் நிலைநிறுத்துதல் ஆகியன தொடர்பில் இலங்கை இன்னும் வலிமையான - காத்திரமான - திட மான - அர்த்தமுள்ள - விரைவான - நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என வலியுறுத்தும் விதத்திலான பிரேரணை ஒன்று, முன் மொழியப்படுவதற்கான சாத்தியங்கள் தென்படுகின்றன என்றும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

அத்தகைய பிரேரணை வடிவமைக்கப்பட்டு, பிரேரிக்கப்பட்டு, நிவைேற்றப்படுவதற்கான முழு நடவடிக்கைகளும் இந்தத் தொடரில் ஒப்பேறாவிட்டாலும் கூட, அத்தகைய பிரேரணையை சமர்ப்பித்து தொடர் நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கான அழுத்தம் ஒன்று ஜெனீவாவில் கருக்கட்டியிருப்பதாகத் தெரிகின்றது.

இந்தச் சந்தர்ப்பத்தை, இவ்விவகாரத்தில் பாதிக்கப்பட்ட பக்கமான தமிழர் தரப்பு சரியான தந்திரோபாயங்களுடன் அணுகிக் கையாள வேண்டும்.

அதற்கு முக்கியமானது தமிழர் தரப்பில் ஒற்றுமையான அணுகுமுறையாகும்.

இலங்கையில் சிறுபான்மையினருக்கு எதிரான வன்முறை விடயங்களில், குற்றமிழைப்போர் தண்டிக்கப்பட மாட்டார்கள் என்ற தண்டனை விலக்களிப்புப் போக்குத் தொடர்வதே - பொறுப்புக் கூறல் நிலை நாட்டப்பட மாட்டாது என்ற நிலைமை நீடிப்பதே - இங்கு, யுத்தம் முடிவடைந்த பின்னரும் கூட இன வன்முறை, அதுவும் சிறுபான்மையினருக்கு எதிரான இன வன்முறைகள் விடாமல் தொடர்வதற்குக் காரணமாகும். இது பல தரப்புகளினாலும் அவதானிக்கப்பட்டுள்ள உண்மையாகும்.

யுத்த காலக் குற்றங்களுக்குப் பொறுப்புக் கூறும் விடயத்தில் காட்டப்படும் மெத்தனப் போக்கும், தற்போது இலங்கையில் தொடர்ந்தும் சிறுபான்மையினத்தவருக்கு எதிராகக் கட்டவிழும் இனவன்முறைகளும் பொறுப்புக் கூறல் விவகாரத்தில் இலங்கைக்கு எதிராகத் தீவிரமான நிலைப்பாடொன்றை எடுப்பது அவசியமானது - தவிர்க்க முடியாதது - என்ற கருத்து நிலைப்பாட்டை சர்வதேச சமூகத்திடம் ஏற்படுத்தி வருகிறது.

இந்தச் சந்தர்ப்பத்தைச் சரியாகப் பயன்படுத்தவும் ஜெனீவா மனித உரிமைகள் கவுன்ஸிலின் தளத்தையும் சந்தர்ப்பத்தையும் உரிய வகையில் உபயோகப்படுத்திக் கொள்ளவும் தமிழர் தரப்பு முன்வர வேண்டும்.

ஒன்றுக்கொன்று முரண்பட்ட - எதிரெதிரான - கருத்து நிலைப்பாட்டில் நின்று கொண்டு, இலங்கை தொடர்பான சர்வதேச மனித உரிமைகள் விவகாரங்களையும் மனித உரிமைகள் கவுன்ஸிலின் நடவடிக்கைகளையும் கையாளாமல் -

தங்களின் துருவமயப்பட்ட கொள்கை நிலைப்பாட்டை வெளிப்படுத்தி, ஒரே பிடியாக அதில் நின்று பிரயோகிக்கும் மேடையாக ஜெனீவாக் களத்தை பயன்படுத்தாமல் -

பொறுப்புக் கூறல் விடயத்தில் இலங்கை தப்பிக்காத வகையில் சிக்க வைக்கும் முறையில் - இவ் விவகாரத்தை ஒற்றுமைப்பட்ட இராஜதந்திரத்துடன் அணுகுவதற்கு பல்வேறு தமிழர் தரப்புகளும் ஒன்றிணைய வேண்டும்.

செய்யுமா தமிழர் தலைமைகள்?

# மயானங்களின் எல்லைகள் தெளிவில்லை; அவற்றை புனரமைப்பதில் தாமதம்

வவுனியா, மார்ச் 13

வுனியா பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் காணப்படும் பல மயானங்களின் எல்லைகள் தெளிவாக இல்லாமையினால் புனரமைப்பு நடவடிக்கைகளில் தாமதம் ஏற்பட்டுள்ளது என வவுனியா தெற்கு பிரதேச செயலாளர் திருமதி சுகந்தி கிசோர் தெரிவித்தார்.



வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் ந.சிவசக்தி ஆனந்தன் மயானங்களின் புனரமைப்பு தொடர்பில் வவுனியா பிரதேச செயலக அபிருத்திக் குழுக் கூட்டத்தில் கேள்வி எழுப்பிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்–

வவுனியா பிரதேச சபைக்குட்பட்ட பகுதியில் 67 மயானங்கள் காணப்படுகின்றன. அவற்றில் பல மயானங்களின் எல்லைகள் தெளிவாக இல்லை.

இந்த நிலையில் எல்லை தெளிவுபடுத்தப்பட்டுள்ள மயானங்களை நாம் கட்டம் கட்டமாகப் புனரமைத்து வருகின்றோம்.

இதுதவிர, சில மயானங்களுக்குப் பாதைகள் இல்லாத நிலை காணப்படுகின்றது.

இதனால் பாதைகளைச் சீர் செய்யும் நடவடிக்கைகள் தற்போது இடம்பெறுகின்றன எனவும் அவர் தெரிவித்தார். (க-100)

# கண்டி மாவட்ட பாடசாலைகள் நேற்று முதல் இயங்குகின்றன



கண்டி நிர்வாக மாவட்ட பாடசாலைகள் நேற்று மீண்டும் திறக்கப்பட்டுள்ளன என மத்திய மாகாண அமைச்சர் சரத் ஏக்கநாயக்க தெரிவித்தார் .

கண்டியில் ஏற்பட்ட குழப்பநிலை காரணமாக கடந்த 7ஆம் திகதி கண்டி நிர்வாக மாவட்டத்திலுள்ள அனைத்து பாடசாலைகளும் மறு அறிவித்தல் வரை மூடப் பட்டன.

தற்பொழுது குழப்பநிலை முழுமையாக கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்ட நிலையில் பாடசாலைகள் நேற்று மீண்டும் திறக்கப்பட்டுள்ளன.

# வவுனியா ரயில் நிலைய வீதியில் போக்குவரத்து பொலிஸார் மீது தாக்கு!

வவுனியா, மார்ச் 13

வவுனியா, ரயில் நிலைய வீதியில்வைத்து போக்குவரத்து பொலிஸார் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இரவு 9 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வவுனியா நகரப் பகுதியில் இருந்து வைரவபுளியங்குளம் நோக்கிச் சென்ற மோட்டார் சைக்கிள் ஒன்றை வீதிக் கடமையில் நின்ற போக்குவரத்து பொலிஸார் மறித்து சோதனை செய்ய முற்பட்டுள்ளனர்.

இதன்போது குறித்த மோட்டார் சைக்கிள் நிறுத்தாது சென்றதால் அதனை விரட்டிச் சென்ற போக்குவரத்து பொலிஸார் வவுனியா, ரயில் நிலைய வீதியில் உள்ள பூங்கா வீதிச் சந்தியில் அந்த மோட்டார் சைக்கிளைத் தடுத்து நிறுத்தியுள்ளனர்.

இதன்போது மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞன் பொலிஸார் மீது தாக்குதல் மேற்கொண்டுள்ளார். பொலிஸாரும் அதனைத் தடுத்து அவரைக் கைது செய்ய கடும் பிரயத்தனம் செய்தனர்.

சுமார் 10 நிமிடங்களாக அந்தப் பகுதியில் போக்கு வரத்து பொலிஸாரும் அந்த இளைஞரும் கைகலப்பில் ஈடுபட்டு முரண்பட்ட நிலையில் சம்பவ இடத்திற்கு மேலதிக போக்குவரத்து பொலிஸார் வருகை தந்து அந்த இளைஞரை கைது செய்து வவுனியா பொலிஸ் நிலையத்திற்குக் கொண்டு சென்றனர்.

இதேவேளை, இச்சம்பவம் இடம்பெற்று சிறிது நேரத்தில் வேறு மூன்று மோட்டார் சைக்கிளில் பயணித்த ஆறு இளைஞர்கள் வவுனியா மணிக்கூட்டு கோபுர சந்தியில் கடமையில் நின்ற போக்குவரத்து பொலிஸார் வீதிச் சோதனை செய்ய நிறுத்திய போது நிறுத்தாது அந்த பொலிஸாரை சீண்டும் வகையில் தமது மோட்டார் சைக்கிளில் பல தடவைகள் சந்திக்கு அண்மையில் வருவதும் திரும்பி தப்பி ஓடுவதும் போன்ற செயற்பாடுகளில் ஈடுபட்டிருந்தனர் என்றும் அறிய முடிகிறது. (க-100)

## விமான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துக்கு விரைந்த பொலிஸார் அவற்றை மீட்டனர்.

முன்னாள் விமானப்படைச் சிப்பாய் ஒருவரது இல்லத்தில் மறைக்கப்பட்டிருந்த நிலையிலேயே இவை மீட்கப்பட்டுள்ளன எனப் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்தது.

– இவ்வாறு கைப்பற்றப்பட்டுள்ள விமான உதிரிப் பாகங்கள் பயன்பாட்டுக்கு உகந்தவை அல்ல என்று ஆரம்பகட்ட விசாரணைகளில் இருந்து தெரிய வந்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பாணந்துறைப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ஐ)

## கடும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கள் என வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வீ. விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

நேற்றுக் கிளிநொச்சி, உருத்திரபுரம் சிவநகர்ப் பகுதியில் மூத்தோர் சங்கக் கட்டடத்தைத் திறந்து வைத்த பின் ஊடகவியலாளர்களின் கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் –

ஜெனீவாவுக்கு அமைச்சர் அனந்தி சசிதரன், உறுப்பினர் சிவாஜிலிங்கம் ஆகியோர் சென்றிருக்கின்றார்கள். வேறு யார் யார் செல்கின்றார்கள் என்பது எனக்குத் தெரியவில்லை. அனைத்து விடயங்களையும் எமது பிரதிநிதிகள் அங்கு எடுத்துரைப்பார்கள். – என்றார். (ஐ)

## கண்டி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கண்டியில் இனங்களுக்கிடையில் மோதல் ஏற்படுவதற்குச் சமூக வலைத்தளங்களே காரணமெனப் பலரால் விமர்சிக்கப்படுகின்றமை தொடர்பில் நேற்று அவர் தனது டுவிட்டர் பதிவில் கருத்து வெளியிட்டுள்ளார்.

அதில், பகைமை உணர்வுகள் கொண்டவர்களே புதிய முறையில் வன்முறைகளைத் தூண்டி வருகின்றனர். சமூக வலைத்தளங்கள் மனித உணர்வுகளை பிரதிபலிப்பனவாகவே அமைந்துள்ளன. – எனக் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

## நாளை

14.03.2018
புதன்கிழமை
நட்சத்திரம் : திருவோணம் பி.ப. 3.29 வரை
திதி : துவாதசி பி.ப. 4.13 வரை
சுபநேரம் : 04.51 –06.21 வரை
இராகுகாலம் : 12.21– 1.51 வரை

வடமாகாணத்தில் வீடுகளற்ற குடும்பங்களுக்காக

# 150 வீடமைப்பு மாதிரிக் கிராமம்



கொழும்பு, மார்ச் 13

வட மாகாணத்தில் இந்த வருடம் வீடுகளற்ற குடும்பங்களுக்காக 150 வீடமைப்பு மாதிரி கிராமங்கள் ஸ்தாபிக்கப்படும் என்று தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் எல்.எஸ்.பலன்சூரிய தெரிவித்தார்.

இந்த மாதிரி வீடமைப்பு கிராம நிர்மாண வேலைகளுக்கான ஆரம்ப ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன என அவர் மேலும் குறிப்பிட்டார்.

கடந்த வருடம் வட மாகாணத்தில் நிர்மாணிக்கப்பட்ட 48 வீடமைப்பு கிராமங்களை நேரில் சென்று பார்வையிடுவதற்காக பலன்சூரிய வடமாகாணத்திற்கு விஜயம் செய்துள்ளார்.

வடமாகாணத்தை பிரதி நிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் பன்முகப்படுத்தப்பட்ட நிதியொதுக்கீட்டின் மூலம் புதிய வீடமைப்பு கிராமங்களுக்கான உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# அதிகரிக்கப்படவுள்ளது ஏற்றுமதி நடவடிக்கை

கொழும்பு, மார்ச் 13

ஏற்றுமதி நடவடிக்கைகள் இந்த வருடத்தில் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது என இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை தெரிவித்துள்ளது.

வர்த்தக விற்பனை பொருள்களின் ஏற்றுமதி வளர்ச்சி 12 சதவீதத்தால் அதிகரிப்பதற்கான வாய்ப்புக்கள் உள்ளதாக சபையின் தலைவர் இந்திரா மல்வத்த தெரிவித்துள்ளார்.

இதற்கமைய இந்த வருடத்திற்காக நிர்ணயிக்கப்பட்ட ஏற்றுமதி வருமானமான பதினாறாயிரத்து 631 அமெரிக்க டொலர் ஏற்றுமதியினை இலக்குவாக எட்ட முடியும் என்றும் சபையின் தலைவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

# அடுத்த ஜனாதிபதிப் பதவிக்கு கோட்டாவே பொருத்தமானவர்!



கொழும்பு, மார்ச் 13

இலங்கையின் அடுத்த நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி பதவிக்கு போட்டியிடுவதற்கான அனைத்து தகைமைகளும் முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷவிற்கு காணப்படுகின்றது.

மேலும், எதிர்வரும் 2020 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் பெரும் மாற்றங்கள் உருவாகுவதற்கான சாத்தியக் கூறுகள் காணப்படுகின்றன என தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் குணதாச அமரசேகர தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட கூட்டு எதிர்க்கட்சியின் பொது வேட்பாளராக கோட்டாபயவை கூட்டு எதிரணியின் பெரும்பான்மை உறுப்பினர்கள் ஆதரிக்கின்றமை தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

## தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் கூறுகிறார்

இலங்கையில் 1978 ஆம் ஆண்டு ஜெ.ஆர் ஜெயவர்தனவால் அறிமுகம் செய்யப்பட்ட நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையானது அமெரிக்க ஜனாதிபதிக்கு நிகரான அதிகாரங்களை கொண்டதாகவே காணப்பட்டது.

அரசியல் விவகாரங்களில் நாட்டு தலைவருக்கே சர்வ வல்லமை பொருந்திய அதிகாரங்கள் காணப்பட்டன. 1978 தொடக்கம் 2014 வரை இவ்வதிகாரம் நடை முறையில் பின்பற்றப்பட்டு வந்தது.

நல்லாட்சி அரசில் ஜனாதிபதி பதவி வெறும் அலங்கார பதவியாகவே காணப்படுகின்றது. நிறைவேற்று அதிகாரத்தை தற்போதைய ஜனாதிபதி இதுவரை பயன்படுத்தாமல் பிரதமருக்கு தனது நிறைவேற்று அதிகாரத்தை தாரை வார்த்துக் கொடுத்துள்ளார். 19 ஆவது அரசியல் திருத்தத்தின் படி ஜனாதிபதிக்கு நிறைவேற்று அதிகாரம் பெயரளவிலும், பிரதமருக்கு மறைமுகமாகவும் பலம் பெறுவதாக காணப்படுகின்றது.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் கூட்டு எதிர்க்கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தும் பொது வேட்பாளராக கோட்டா பய போட்டியிடவுள்ளமை வரவேற்கத்தக்கது. கடந்தகாலத்தில் அவர் மீது சுமத்தப்பட்ட பொய் குற்றச்சாட்டுக்கள் எதையும் நல்லாட்சி அரசால் நிரூபிக்கமுடியவில்லை. நீதித்துறையும் உண்மையினையே நிலை நாட்டியுள்ளது.

கூட்டு எதிர்க்கட்சியை ஆதரிக்கின்ற தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களின் ஆதரவும் கிடைக்கப்பெறும். ஐக்கிய தேசிய கட்சியின் உறுப்பினர்கள் தற்போது நிலையற்ற அரசாங்கத்தில் இருந்து விலகி நிலையான அரசாங்கத்தை உருவாக்க முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர். அதன் வெளிப்பாடாகவே பிரதமருக்கு எதிராக ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கிய உறுப்பினர்கள் சிவப்புக் கொடி காட்டிவருகின்றனர்.

நாட்டின் நிர்வாகத்தை மிதவாத முறையில் மாத்திரம் ஒழுங்காக நிர்வகிக்க முடியாது. மக்களின் நலனுக்காக ஆட்சியாளர் அதிரடியான போக்குகளையும் கடைப்பிடிக்கலாம் .

அதுவே, அரசியல் சித்தாந்தம். இவற்றை நல்லாட்சி அரசு கடைப்பிடிக்க தவறவிட்டமையின் காரணமாகவே கடந்த காலங்களில் சிறு பிரச்சினைகளுக்கு கூட தொடர்ச்சியான போராட்டங்கள் இடம் பெற்றன. இதன் காரணமாக அப்பாவி பொது மக்களே பாதிக்கப்பட்டனர்.

ஆகவே, இலங்கையின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி பதவிக்கு கோத்தபாய ராஜபக்ஷ பொருத்தமானவராகவே காணப்படுகின்றார் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# பாஹியன்கல குகை, அதனை அண்மித்த பிரதேசங்களை பாதுகாக்க நடவடிக்கை!



களுத்துறை, மார்ச் 13

சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த பாஹியன்கல குகை மற்றும் அதற்கு அண்மித்த பிரதேசங்களை பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்தப் பிரதேசத்தில் கடந்த காலங்களில், தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் மேற்கொண்ட ஆய்வின் அடிப் படையிலேயே இந்த பாதுகாப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன என தொல்பொருள் ஆராய்ச்சி நிலையத்தின் ஆணையாளர் நாயகம் பேராசிரியர் பி.வி. மந்தாவெல தெரிவித்தார்.

இதுவரை இந்த குகையால் பிரதேசத்திற்கு பாதிப்பும் ஏற்படவில்லை என்று ஆய்வுகளிலிருந்து தெரியவந்துள்ளது. இப்பினும் , இந்த குகையையும் அதனை அண்டிய பிரதேசங்களையும் பாதுகாக்க வேண்டிய தேவை தற்சமயம் ஏற்பட்டுள்ளது என பி.வி.மந்தாவெல சுட்டிக்காட்டினார்.

மத்திய கலாசார நிதியம் இதற்கான நிதி உதவியை வழங்குகிறது. இந்தக் குகை, சுமார் 58 ஆயிரம் வருடங்களுக்கும் மேலாக பழைமை வாய்ந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

# களுத்துறை வீடு நிர்மாணிக்கும் பணிகள் 90 சதவீதம் பூர்த்தியடைந்துள்ளன!

கொழும்பு, மார்ச் 13

களுத்துறை மாவட்டத்தில் கடந்த வருடம் ஏற்பட்ட இயற்கை அனர்த்தத்தால் வீடுகளை இழந்த 645 குடும்பங்களுக்கான வீடுகளை நிர்மாணிக்கும் பணிகள் துரிதமாக இடம்பெற்று வருகின்றன என மாவட்ட செயலாளர் சந்தன ஜயலால் தெரிவித்தார்.

இவர்களுக்கான வீடுகளை அமைக்கும் பணிகள் 90 சதவீதம் பூர்த்தி அடைந்துள்ளன என்றும் அவர் குறிப்பிட்டார். இந்த வேலைத் திட்டம் களுத்துறை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிறுவனத்தின் ஒத்துழைப்புடன் அமுலாக்கப்பட்டுள்ளது என்றும் மாவட்ட செயலாளர் மேலும் தெரிவித்தார்.




# தூய்மைப்படுத்துதல்

*“உங்களைக் கழுவித் தூய்மைப் படுத்துங்கள். உங்கள் தீச்செயலை என் திருமுன்னிருந்து அகற்றுங்கள். தீமைசெய்வதைவிட்டொழியுங்கள். நன்மை செய்யக் கற்றுக்கொள்ளுங்கள். நீதியை நாடித் தேடுங்கள். ஒடுக்கப்பட்டோருக்கு உதவி செய்யுங்கள்.” (எசாயா 1:16 - 17).*

நாம் எப்பொழுதும் எம்மனத்தைத் தூய்மையாக வைத்திருக்க வேண்டும். மனம் தூய்மை இழக்கும்போது மனம் பல்வேறுபட்ட பாதிப்புக்களுக்கு உள்ளாகும். உடல் அழுக்கினை நீரினால் நீக்கலாம். ஆனால் உள்ளத்தைத் தூய்மைப்படுத்துவது கடினம்.

அகத்தூய்மையும் புறத்தூய்மையும் இணைந்திருக்கும் பொழுது மனத்தூய்மை பளிங்குபோல் துலங்கும். அப்போது பேச்சும் மூச்சும் மேலான அன்புக்குச் சான்று பகர்ந்திருக்கும். உள ஓசையும் உதட்டசைவும் இணைந்திருக்கும். சலனங்கள் சடுதியாகக் குறைந்திருக்கும்.

தூய்மையுள்ளம் கொண்டோர் தீமையை முற்றுமுழுதாய் தகர்ப்பர். துணிச்சலோடு நன்மைத்தனத்தின் பக்கம் சார்ந்து கொண்டு சான்றுபகர்வர்.

“தூய்மையுள்ளம் கொண்டோர் பேறுபெற்றோர். ஏனெனில் அவர்கள் கடவுள்களைக் காண்பர்.” (மத்தேயு 5:6). என்று இயேசு மனப்பொழிவில் மொழிந்து தூய்மையுள்ளம் கொண்டோரின் பேறுபெற்றதன்மையினை உறுதிப்படுத்தினார்.

அருட்கலாநிதி வின்சன் பற்றிக் அ.ம.தி.

காலைக்கதிர் Kalaikkathir



# அரசியல் சுயநலத்திற்கு மக்களை பகடைக்காயாக்குவதை ஏற்கமுடியாது

## வியாழேந்திரன் எம்.பி. தெரிவிப்பு

மட்டக்களப்பு, மார்ச்13

ஒரு சில அரசியல்வாதிகள் தங்களின் அரசியல் சுயநலத்திற்காக மக்களை பகடைக்காய்களாக்குவதை ஒருபோதும் ஏற்றுக்கொள்ளமுடியாது என நாடாளு மன்ற உறுப்பினர் எஸ்.வியாழேந்திரன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பில் உள்ள அவரது அலு வலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற விசேட செய்தியாளர் சந்திப்பின் போதே இதனை கூறியுள்ளார்.

தொடர்ந்தும் அவர் கருத்து தெரிவிக் கையில்,

சட்டம், ஒழுங்கு சிறந்த முறையில் கையாளப்படுமானால் இனவாத பிரச்சினைகள் முளையிலேயே கிள்ளி யெறிந்துவிடமுடியும். இனரீதியான, மதரீதி யான வன்முறைகளை தூண்டுபவர்கள் சரியான முறையில் இனங்காணப்பட்டு கைதுசெய்யப்படவேண்டும்.

முஸ்லிம் மக்கள் மீது மேற்கொள்ளப் பட்ட வன்முறைகள் மீள நிகழாமையை உறுதிப்படுத்த அரசாங்கத்துடன் இருக் கும் முஸ்லிம் தலைமைகள் தமது பணியை மேற்கொள்ளவேண்டும். ஒரு இனம் இன்னுமோர் இனத்தைப் பாதிக் கும் வகையில் செயற்படக்கூடாது என்ற ஒருமித்த கருத்தில் மிகக் கவனமாக அரசியல்வாதிகள் உள்ள நிலையில் அந்தக் கரிசனை தமிழ் மக்கள் மீதும்




அவர்களுக்கு இருக்கவேண்டும்.

இந்த நாட்டில் உள்ள மக்களுக்கு எதிரான நடவடிக்கைகள் மேற்கொள் ளப்படும்போதெல்லாம் அதற்கு எதிராக போராடியவர்கள் தமிழ் தலைவர்களாகும். இதனை யாரும் மறுக்கமுடியாது.

ஒரு சில அரசியல்வாதிகள், இனவாதி கள் தங்களின் அரசியல் சுயநலத்திற் காக மக்களை பகடைக்காய்களாக்கு வதை நாங்கள் ஏற்றுக்கொள்ள முடியாது என்று தெரிவித்துள்ளார்.

# பால்நிலை அறிவூட்டல் பகுதி நூலகத்தில் திறந்து வைப்பு

மட்டக்களப்பு,மார்ச்.13

பால்நிலை அறிவூட்டல் பகுதி நேற்று முன்தினம் மட்டக்களப்பு பொது நூலகத்தில் திறந்து வைக்கப்பட்டுள்ளது

கிழக்கு பல்கலைக்கழகத்தின் பால்நிலை ஒப்புரவு மற்றும் சமத் துவ அலகின் யுனெஸ்கோ நிறு வன பங்குபற்றல் நிகழ்ச்சித் திட் டத்தின்கீழ் பால்நிலை அறிவூட்டல் பகுதிகள் மட்டக்களப்பு பொது நூலகத்திலும் , கிழக்கு பல்கலைக் கழகத்திலும் திறந்து வைக்கப்பட வுள்ளன.

இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் முதற்கட்டமாக மட்டக்களப்பு பொது நூலகத்தின் உசாத்துணைப் பிரிவில் உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்பட்டது

இந்நிகழ்வு யுனெஸ்கோ உப



நிகழ்ச்சி திட்ட ஒருங்கிணைப்பா ளர் த .ரமணன் ஒழுங்கமைப்பில் பால்நிலை அறிவூட்டல் பகுதி மட்டக்களப்பு பொது நூலகத்தின் உசாத்துணைப் பிரிவில் திறந்து வைக்கப்பட்டது .

பால்நிலை தகவல் பகுதியை நூலகங்களில் ஸ்தாபித்தல் முக் கிய நோக்கம் பால்நிலை அறி வூட்டலை மாணவர்கள் மற்றும் பொது மக்களிடம் மேம்படுத்து வதற்கே எனத் தெரிவிக்கப்பட்டது.

# திருமலையில் ஸ்தம்பித்த மக்களின் இயல்பு வாழ்க்கை

திருகோணமலை மாவட்டத்தில் நேற்று அதிகாலை முதல் பெய்துவரும் கடும் காற்றுடன் கூடிய மழை காரணமாக அப்பகுதி மக்கள் பெரும் பாதிப்பிற்கு உள்ளாகியுள்ளனர்.

அத்துடன் திருகோணம லை நகரசபைக்கு உட்பட்ட கரையோர கிராமங்களில் பெரிய மரங்கள் சாய்ந்து போக்குவரத்திற்கும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.



இந்த நிலையில் நகரசபை யின் தீயணைப்பு பிரிவின் ஊழியர்கள் சாய்ந்த மரங் களை வெட்டி பாதையை சீர் செய்துள்ளனர்.

தற்போது தொடர்ந்து பெய்துவரும் காற்றுடன் கூடிய காலநிலை காரணமாக மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

மேலும், திருகோணமலை நகரில் வீசிய கடும் காற்றால் கூரைகள் கழற்றி வீசப்பட்டிருக்கின்றன. அதனால் மக்களின் வாழ்க்கை ஸ்தம்பித்துள்ளது.

# காட்டு யானைகள் அட்டகாசம்



மட்டக்களப்பு,மார்ச்.13

மட்டக்களப்பு - வாகரை, குகனேச புரத்தில் நேற்று முன்தினம் நள்ளிரவு காட்டு யானைகள் ஊருக்குள் புகுந்து அட்டகாசத்தில் ஈடுபட்டுள்ளன எனப் பிரதேச பொதுமக்கள் கவலை தெரி வித்துள்ளனர்.

அத்துடன், தமது வளவில் இருந்த தென்னை மரங்கள், கனி தரும் மரங்களான மா, பலா மற்றும் கொய்யா போன்றவற்றை உணவுக்காக உட் கொண்டு விட்டு சேதத்தையும் ஏற்ப டுத்தியுள்ளன.

இந்தப் பிரதேசத்தில் யானை வேலிகள் இடப்பட்டுள்ளன. அவை கடந்த சில மாதங்களாக சேதமடைந்து காணப்படுகின்றன. வேலிகளைத் திருத்தி அமைப்பதன் மூலம் யானைகள் ஊருக்குள் வருவதைத் தடுக்க முடியும். இரவானதும் அச்சத்துடன் தூக்கமின்றி இருக்க வேண்டியுள்ளது.

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இது தொடர்பாக நடவடிக்கை எடுக்க முன் வர வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# வாகன விபத்து இருவர் பலி

திருகோணமலை,மார்ச் 13

திருகோணமலை – தம்பலகாமம் பிரதான வீதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் இருவர் உயிரிழந்துள்ள னர் எனப் பொலிஸார் தெரிவித்துள் ளனர்.

இந்த விபத்து நேற்றுக் காலை இடம்பெற்றுள்ளது. டிப்பர் ரக வாகனம் ஒன்றும் மோட்டார் சைக்கிள் ஒன்றும் மோதிக்கொண்டதில் இந்த விபத்துச் சம்பவித்துள்ளது.

இந்த சம்பவத்தில் 21 மற்றும் 22 வயதான இளைஞர்கள் இருவர் உயி ரிழந்துள்ளமையுடன், சம்பவம் தொடர் பில் டிப்பர் சாரதி கைது செய்யப்பட்டுள் ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.


சடலம் தம்பலகாமம் பிரதேச வைத் தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன், மேலதிக விசாரணைகளை பொலி ஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# அம்பாறையில் அடைமழை

அம்பாறை மாவட்டத்தில் கடந்த இரு தினங்களாக காற்றுடன்கூடிய அடைமழை பெய்து வருகின்றது.

கரையோரப் பிரதேசமெங்கும் காற்றால் தகரக்கூரைகள் தூக்கி வீசப்பட்டுள்ளன.

தொடரும் அடைமழையினால் அறுவடை பாதிக்கப்பட்டுள்ளதுடன் மக்களின் இயல்பு வாழ்க்கையும் பாதிக்கப்பட்டுள் ளது.



காற்றால் மரங் கள் முறிந்து வீழ்ந் துள்ளன. மீனவர் கள் தொழிலுக்கு செல்லவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.




# முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைகளை கண்டிக்கிறார் ஐ.நா. உதவிச் செயலர் ஜெப்ரி

கொழும்பு, மார்ச் 13

இலங்கையில் முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைகளை ஐ.நாவின் அரசியல் விவகாரங்களுக்கான உதவிச் செயலர் ஜெப்ரி பெல்ட்மன் கண்டித்துள்ளார்.

இலங்கைக்கான விஜயத்தை மேற்கொண்டுள்ள அவர், முஸ்லிம்களின் பள்ளிவாசல்கள், வணிக நிலையங்களை இலக்கு வைத்து நடத்தப்பட்ட தாக்குதல்களைக் கண்டித்து நேற்று



முன்தினம் கருத்து வெளியிட்டுள்ளார்.

அத்துடன், வன்முறைகளில் ஈடுபட்ட, வெறுப்புணர்வுக் கருத்துக்களை வெளியிட்ட குற்றவாளிகளை நீதி யின் முன் நிறுத்துமாறும் அவர் இலங்கை அரசிடம் கோரியுள்ளார்.

இலங்கையின் முஸ்லிம் அரசியல் தலைவர்கள், ஐ.நாவின் அரசியல் விவகாரங்களுக்கான உதவிச் செயலர் பெல்ட்மனைச் சந்தித்தபோது, இலங்கையில் சட்டம் ஒழுங்கு மீறப்பட்டதையும், முஸ்லிம்கள் மற்றும் அவர்களின் வாணிபங்களைக் குறிவைத்து நடத்தப்பட்ட தாக்குதல்களையும் கண்டித்துள்ளார் என்று ஐ.நா அறிக்கை ஒன்றில் கூறப்பட்டுள்ளது.

அத்துடன், இதுபோன்ற சம்பவங்கள் மீள நிகழாமல் தடுப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டியது அரசின் பொறுப்பு என்றும், சட்டத்தின் ஆட்சியை பாகுபாடு இன்றி நடைமுறைப்படுத்த வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

## சட்ட விரோத துப்பாக்கி, ஆயுதங்களுடன் இருவர் கைது!

கொழும்பு, மார்ச் 13

சட்டவிரோத துப்பாக்கி உள்ளிட்ட ஆயுதங்களை வைத்திருந்த இருவர் வெலிகம மிதிகம பிரதேசத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஒழுங்குபடுத்தப்பட்ட குற்றங்கள் ஒழிப்பு பிரிவு அதிகாரிகளுக்கு கிடைக்கப் பெற்ற தகவலை அடுத்து மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போதே இந்த நபர்கள் கைது செய்யப்பட்டார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த நபர்கள் கைது செய்யப்பட்ட வேளையில் அவர்களிடமிருந்து ரி 56 ரக துப்பாக்கி, கைக்குண்டு ஒன்று, மூன்று போலி தேசிய அடையாள அட்டைகள் மற்றும் 14 கிராம் 500 மில்லி கிராம் ஹெரோயின் ஆகியனவும் கைப்பற்றப்பட்டுள்ளன.



சந்தேக நபர்கள் 28 மற்றும் 31 வயதுகளையுடைய மிதிகம பகுதிகளைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் மாத்தறை நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டமையை அடுத்து தடுப்புக் காவல் உத்தரவின் படி ஒழுங்குபடுத்தப்பட்ட குற்றங்கள் ஒழிப்பு பிரிவினால் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

## அடுத்துவரும் 48 மணித்தியாலங்களுக்கு மீனவர் கடலுக்கு செல்வதை தவிர்க்கவும்!

### வளிமண்டலவியல் திணைக்களம் அறிவிப்பு

கொழும்பு, மார்ச் 13

இடியுடன் கூடிய மழையின் போது தற்காலிகமாக கடல் மிகவும் கொந்தளிப்பாகக் காணப்படுவதுடன் காற்றின் வேகமானது சடுதியாக அதிகரித்து வீசக்கூடும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

எனவே, மீனவர்கள் அடுத்த 48 மணித்தியாலங்களுக்கு இக்கடற்பகுதிகளுக்கு செல்வதை தவிர்த்துக் கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகின்றார்கள். மேலும் கடலில் பயணம் செய்வோரும் இவ்விடயத்தில் அவதானமாக இருக்குமாறு திணைக்களம் கேட்டுக் கொண்டுள்ளது.

இலங்கையைச் சூழவுள்ள வளிமண்டலத்தில் ஏற்பட்ட ஓர் அலை போன்ற தளம்பல் நிலை ஒரு தாழமுக்கப் பரப்பாக தீவிரமடைந்துள்ளதுடன் மேலும் வலுவடையுமென்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இது இலங்கையின் தென் பகுதியில் மையம் கொண்டிருப்பதுடன் மேற்கு- வட மேற்கு திசையில் நகரக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. இதன் தாக்கம் காரணமாக நாட்டின் பல பாகங்களிலும் மேகக்கூட்டங்களுடன் வானமும்



மழையுடன் கூடிய வானிலையும் தொடருமென்று எதிர்பார்க்கப்படுகின்றது.

காலியிலிருந்து அம்பாந்தோட்டை, மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை ஊடாக முல்லைத்தீவு வரையான கரையோரத்திற்கு அப்பாற்பட்ட கடற்பகுதிகளில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்வதற்கான சாத்தியம் உயர்வாகக் காணப்படுவதுடன் அவ்வேளைகளில் காற்றின் வேகமானது சடுதியாக மணித்தியாலத்துக்கு 70-80 கிலோ மீற்றர் வரை அதிகரித்து வீசக்கூடும்.

காலியிலிருந்து அம்பாந்தோட்டை, மட்டக்களப்பு மற்றும் திரு கோணமலை ஊடாக முல்லைத்தீவு வரையான கரையோரத்திற்கு அப்பாற்பட்ட கடற்பகுதிகளில் மழை பெய்யும் சாத்தியம் காணப்படுகின்றது. ஏனைய கடற்பரப்புகளில் பல இடங்களில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக் கூடும்.

கடற்பிரதேசங்களில் காற்று மணித்தியாலத்துக்கு 30 - 40 கிலோ மீற்றர் வேகத்தில் வடகிழக்கு திசையில் இருந்து வீசும் என்றும் திணைக்களம் மேலும் குறிப்பிட்டுள்ளது.

## 15 வயதிற்கு மேற்பட்ட மாணவருக்கு தே.அ.அட்டை!

15 வயதிற்கு மேற்பட்ட அனைத்து பாடசாலை மாணவர்களுக்கும் தேசிய அடையாள அட்டைகளை விநியோகிக்க இலங்கை ஆட்பதிவு திணைக்களம் திட்டமிட்டுள்ளது.

ஒவ்வொரு வருடமும் ஜனவரி மாதமளவில் அடையாள அட்டைகளை விநியோகிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தேசிய அடையாள அட் டையை பெற்றுக்கொள்வதற்கான குறைந்த மட்ட வயதெல்லை 16 இல் இருந்து 15 இற்கு குறைப்பதற்கான திருத்தங்கள் அறிமுகப்படுத்தப்பட்டதனால் இந்த விடயத்தை முன்னெடுக்கக் கூடியதாக உள்ளது என்று திணைக்களம் தெரிவித்துள்ளது.

2019 ஆம் ஆண்டு க.பொ.த. சாதாரணதர பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் தேசிய அடையாள அட்டைக்காக தற்சமயம் விண்ணப்பிக்கலாம் என்றும் திணைக்களத்தின் இயக்க செயற்பாடு மற்றும் தகவல் தொழில்நுட்ப ஆணையாளர் தெரிவித்தார்.

மாணவர்கள் தமது விண்ணப்பங்களை உரிய பாடசாலை அதிபரின் ஊடாக அனுப்பி அடையாள அட்டைகளை பெற்றுக்கொள்ள முடியும்.

## இலவச வகுப்புக்கள் விரைவில் குப்பிளானில்

குப்பிளான், மார்ச் 13

குப்பிளான் விக்னேஸ்வரா சனசமூக நிலையத்தில் இலவச வகுப்புக்கள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன. இக்கிராம மாணவர்களின் நலன் கருதி பிள்ளைகளின் கல்வித் திறனை மேம்படுத்தும் முகமாக இலவசமாக கணிதம், ஆங்கிலம், விஞ்ஞானம், தமிழ், வரலாறு, சங்கீதம், நடனம் மற்றும் கணினி வகுப்புக்கள் என்பன நடத்தப்படவுள்ளன. அத்துடன் சுய கற்றல் வகுப்புக்களும் ஆரம்பிக்கப்படவுள்ளன. (இ)

## ஆஸியிலிருந்து இலங்கை வந்த விமானத்தில் பயணி ஒருவர் திடீர் சாவு!

கொழும்பு, மார்ச் 13

ஆஸ்திரேலியாவிலிருந்து இலங்கையை நோக்கிப் பயணித்த நபர் ஒருவர் நடுவானில் திடீர் மரணத்தைச் சந்தித்துள்ளார் என தகவல் கிடைத்துள்ளது. குருநெனிய பிரதேசத்தை சேர்ந்த 60 வயதான யூ.ஏ.ஜயதிஸ்ஸ என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

ஆஸ்திரேலியாவின் மெல்போர்ன் நகரில் வசிக்கும் இவர், இலங்கையில் நடை பெற்ற திருமண நிகழ்வு ஒன்றில் கலந்து கொள்வதற்காக வருகை தந்த போதே இந்த அனர்த்தம் இடம்பெற்றுள்ளது.

நீர்கொழும்பு திடீர் வைத்திய அதிகாரியினால் இந்த சம்பவம் தொடர்பில் மரண விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதன்படி, குறித்த பயணி மாரடைப்பு ஏற்பட்டு விமானக் கழிப்பறையில் உயிரிழந்துள்ளார் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

உயிரிழந்தவரின் சடலம் சற்று பெரியதாக இருந்தமையால் கழிப்பறையில் இருந்து வெளியே எடுப்பதற்கு ஐந்தரை மணித்தியாலங்கள் செலவிடப்பட்டுள்ளன என்றும், கட்டுநாயக்க விமான நிலையத்தில் பயணியின் உடலை எடுக்க கடுமையான சிரமங்கள் ஏற்பட்டன என்றும் கூறப்பட்டது.

இதேவேளை, மரண விசாரணை மற்றும் சாட்சிகளுக்கமைய அவர் ஆஸ்திரேலியாவில் நிரந்தர குடியுரிமை



பெற்றுள்ளார் எனத் தெரியவந்துள்ளதுடன் இரண்டு பிள்ளைகளின் தந்தை எனவும் தெரியவந்துள்ளது.

பாடசாலை ஒன்றின் ஆசிரியையாக விளங்கும் தனது மனைவியுடன் இலங்கைக்கு வருகைதந்த அவர், நேற்று முன்தினம் ஆஸ்திரேலியாவில் இருந்து விமானம் மூலம் இலங்கைக்கு வருகை தந்துள்ளார்.

விமானத்தில் பயணமாகிக் கொண்டிருந்த போது அவர் விமான கழிப்பறைக்கு சென்று வெகு நேரமாகத் திரும்பி வரவில்லை. பின்னர் விமான ஊழியர்கள் கழிப்பறையை திறப்பதற்கு முயற்சித்த போதிலும், அது தோல்வியில் முடிவடைந்ததாகக் கூறப்பட்டது.

இதேவேளை, பெரும் போராட்டத்தின் பின்னரே அவரது சடலம் விமானக் கழிப்பறையிலிருந்து வெளியே எடுக்கப்பட்டுள்ளது. (க)

# யாழ். மாவட்ட பிரதேச செயலக அபிவிருத்திக் குழுக் கூட்டங்கள்

யாழ்ப்பாணம், மார்ச்13

யாழ். மாவட்டத்திலுள்ள ஐந்து பிரதேச செயலகப் பகுதிகளுக்கான அபிவிருத்திக் குழுக் கூட்டங்கள் தற்போது நடைபெற்று வருகின்றன.

நேற்று திங்கட்கிழமை தெல்லிப்பழை மற்றும் உடுவில் பிரதேச செயலகங்களுக்கான கூட்டம் இடம்பெற்றது. இன்று செவ்வாய்க்கிழமை கரவெட்டி மற்றும் பருத்தித்துறை பிரதேச செயலகங்களுக்கான அபிவிருத்திக் குழுக் கூட்டமும்–

நாளை மறுதினம் வியாழக்கிழமை கோப்பாய்ப் பிரதேச செயலகத்துக்கான அபிவிருத்திக் குழுக் கூட்டமும் இடம்பெறும்.

இந்தக் கூட்டங்களின் போது பிரதேச செயலகத்திற்குட்பட்ட பிரச்சினைகள் குறித்து எடுத்துரைக்கப்பட்டு முடிவுகள் எட்டப்படும் என்று செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (இ)

# தினசரி ராசி பலன்
## (13.03.2018)

*2018 ஆம் ஆண்டு ஏவிளம்பி வருடம் மாசித்திங்கள் 29ஆம் நாள் செவ்வாய்க்கிழமை ஏகாதசித்திதி.பகல் 11.41 மணி வரை பின்னர் துவாதசி. நட்சத்திரம் உத்தராடம் பகல் 12.30 மணி வரை பின்னர் திருவோணம். மரணயோகம்பகல் 12.30 வரை பின்னர் சுபயோகம்.*

**ராகுகாலம்** - *மாலை 3.19 மணி முதல் 4.50 மணி வரை*

**சுபநேரம்** - *பகல் 10.44 மணி முதல் 12.14 மணி வரை*

*இன்று ஏகாதசி விரதம்.*

**'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி**

**மேஷம்**: சமபலன்கள் காணப்படுகின்றன. பொருளாதாரம் சுமாராக இருக்கும். செலவுகள் அளவுக்கதிகமாகும். தேகசுகம் பாதிப்படையும். வியாபாரத்தில் சுமாரான லாபம் கிடைக்கும். வீண் அலைச்சல்கள் உண்டாகும்.

**ரிஷபம்**: ஆக்கபூர்வமான நாள். பணப்புழக்கம் சரளமாக இருக்கும். குடும்ப ஒற்றுமை பலப்படும். வர்த்தகத்தில் ஏற்றுமதி, இறக்குமதியால் ஆக்கபூர்வ முன்னேற்றம் உண்டாகும். திடீர்ப் பயணம் உண்டாகும்.

**மிதுனம்**: கவலையான நாள். வருமானம் குறைவடையும். குடும்பப் பிரச்சினைகள் அதிகரிக்கும். வியாபாரம் பெரும் நட்டமடையும். விவசாயத்தில் பயிர்கள் அழிந்து சேதமுண்டாகும். மாணவர்களுக்கு ஞாபக மறதி உண்டாகும்.

**கடகம்**: மத்திமமான நாள். பொருள் வரவு ஏற்றமும் இறக்கமுமாக இருக்கும். வியாபாரத்தில் புதிய முதலீடுகளைத் தவிர்ப்பது நன்று. செய்யும் தொழிலில் கடின உழைப்பு இருக்கும். உறவினர்கள் ஓரளவு உதவுவார்கள்.

**சிம்மம்**: மேன்மையான நாள். பொருளாதாரம் ஏற்றமடையும். குடும்பத்தில் ஒற்றுமையுணர்வு அதிகரிக்கும். ஆன்மிக நாட்டம் உண்டாகும். சகோதர உறவு பலப்படும். பிரிந்திருந்த உறவினர்கள் மீண்டும் இணைவார்கள்.

**கன்னி**: அனுகூலமான நாள். பணப்புழக்கம் சரளமாக இருக்கும். எடுக்கும் முயற்சிகள் வெற்றியடையும். புதிய தொழில் வாய்ப்புக்கள் கிடைக்கும். பெண்களுக்கு அரச வழியால் தொழில் பயிற்சிகள் கிடைக்கும்.

**துலாம்**: சஞ்சலமான நாள். பணவரவு குறையும். குடும்பத்தில் சிறுசிறு உம்பூசல்கள் காணப்படும். சுயதொழிலில் அலைச்சலும் ஆதாயமும் குறையும். மனைவி வழியால் மருத்துவச் செலவுகள் உண்டாகும்.

**விருச்சிகம்**: சமபலன்கள் காணப்படுகின்றன. வரவும் செலவும் சமமாக இருக்கும். வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் குறையும். வேலைச் சுமை அதிகரிக்கும். வழக்குகள் இழுபறி நிலையில் இருக்கும்.

**தனுசு**: நன்மையான நாள். பணப்புழக்கம் திருப்தியைத் தரும். வியாபாரத்தில் அதிரடி லாபம் உண்டாகும். உறவினர்கள் உதவுவார்கள். உத்தியோகத்தில் அதிகாரிகள் மட்டத்தில் செல்வாக்குக் கூடும்.

**மகரம்**: மேன்மையான நாள். பணப்புழக்கம் தாராளமாக இருக்கும். சகோதர உறவு வலுவானதாக இருக்கும். இதுவரை பகையாய் இருந்தவர்கள் நட்புடன் பழகுவார்கள். உத்தியோகத்தில் கௌரவப் பதவி கிடைக்கும்.

**கும்பம்**: துயரமான நாள். வருமானம் பற்றாக்குறையாக இருக்கும். செலவுகள் அதிகரிப்பால் கடன்பட நேரும். செய்யும் தொழில் நட்டம் உண்டாகும். மாணவர்கள் தேர்வில் தோல்வி அடைவார்கள்.

**மீனம்**: அதிஷ்டமான நாள். பணபலம் அதிகரிக்கும். குடும்பத்தில் அன்னியோன்யம் அதிகரிக்கும். சொந்த வீடு வாங்கும் எண்ணம் நிறைவேறும். இதுவரை இழுபறியால் இருந்த சொத்துக்கள் கைக்கு வந்து சேரும்.

**சந்திராட்டம நாள்: மிருகசீரிடம் 3ஆம், 4ஆம் பாதங்கள் திருவாதிரை, புனர்பூசம் 1ஆம், 2ஆம், 3ஆம் பாதங்களில் பிறந்தோர் சுபகருமங்கள் தொடங்குவதைத் தவிர்க்கவும்.**

# முஸ்லிம்கள் மீதான தாக்குதல்கள்; ஐக்கிய அரபு இராச்சியம் எச்சரிக்கை!

கொழும்பு, மார்ச் 13

இலங்கையில்இடம்பெற்ற வன்முறைகளையடுத்து ஐக்கிய அரபு இராச்சியம் தனது பிரஜைகளுக்கு அவசர எச்சரிக்கை ஒன்றை விடுத்துள்ளது. இலங்கைக்கு சுற்றுலா செல்லும் பயணிகளுக்கே இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மத்திய மாகாணம் கண்டி நகரத்தை அடிப்படையாக கொண்டு மேற்கொள்ளப்பட்ட வன்முறைகள் காரணமாக, இலங்கைக்கு சுற்றுலாப் பயணம் மேற்கொள்ளும் போது அதிக அவதானமாக இருக்குமாறு ஐக்கிய அரபு அரசு தன்னாட்டுப் பிரசைகளுக்கு அறிவித்துள்ளது.

சுற்றுலா ஆலோசனை அறிக்கை ஒன்றினை கொழும்பில் அமைந்துள்ள ஐக்கிய அரபு இராச்சிய தூதரக அலுவலகம், டுவிட்டர் பதிவினூடாக வெளியிட்டுள்ளது.

அதன்படி, இலங்கைக்கு சுற்றுலாப் பயணம் மேற்கொள்ளும் ஐக்கிய அரபு இராச்சிய பிரஜைகள், மக்கள் அதிகமாகக் கூடும் இடங்களைத் தவிர்க்குமாறு குறிப்பிட்டுள்ளது.

அத்துடன், ஏதாவது ஒரு சந்தர்ப்பத்தில் உதவி தேவைப்பட்டால் தூதரகத்திற்கு விரைவாக தொலைபேசி அழைப்பு மேற்கொள்ளுமாறு தூதரக அதிகாரிகள் தங்கள் மக்களிடம் கேட்டுக்கொண்டுள்ளனர்.

இதேவேளை, இலங்கையில் பாதுகாப்பை உறுதிப்படுத்த அவசரகால சட்டம் அமுல் படுத்தப்பட்டுள்ளதால் இதுகுறித்து அச்சம் கொள்ளத் தேவையில்லை என ஐக்கிய அரபு இராச்சியத்திற்கான இலங்கைத் தூதுவர் தெரிவித்துள்ளார்.

# பார்வையாளர்களைக் கவர்ந்த வள்ளிபுனம் மாற்றுத்திறனாளி மாணவரின் விளையாட்டுப் போட்டி!





முல்லைத்தீவு, மார்ச் 13

முல்லைத்தீவு வள்ளிபுனம் பகுதியில் அமைந்துள்ள மாற்றுத்திறனாளிகளுக்கான இனிய வாழ்வு இல்ல மாணவர்களின் விளையாட்டுப் போட்டி நேற்றுமுன்தினம்மாலை இடம்பெற்றது.

இனியவாழ்வு இல்ல தலைவர் எஸ்.நாகரட்ணம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக முல்லை வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி உமாநிதி புவனராஜாவும், சிறப்பு விருந்தினர்களாக புதுக்குடியிருப்பு கோட்டக் கல்வி அதிகாரி சி.சுப்பிரமணியேஸ்வரன், ஓய்வு நிலை உதவிக்கல்விப் பணிப்பாளர் வே.சுப்பிரமணியம்,மற்றும் பாடசாலை அதிபர்கள்வள்ளிபுனம் சிவில் பாதுகாப்புநிலைய பொறுப்பதிகாரி லெப்ரினன் கேணல் கணேகொட, இலங்கை வங்கி புதுக்குடியிருப்பு கிளை முகாமையாளர் த. கபிலன் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்துள்ளதுடன் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசில்களையும் வழங்கி மதிப்பளித்துள்ளனர்.

மாணவர்களின் பல்வேறுபட்ட விளையாட்டுப் போட்டிகள் சிறப்பாக இடம்பெற்றமையுடன், வினோத உடைப் போட்டியில் பொலித்தீன் என்ற கருப்பொருளிலும் காணாமற் போனவர்களை தேடும் பெற்றோர்கள், கசிப்பிற்கு அடிமையாகும் குடும்பங்கள், டெங்கு தொற்று நுளம்பு போன்ற உடை நடை பாவனைகளுடன் விநோத உடைகளை அணித்து அதன் விளக்கங்களை கொடுத்திருந்தனர்.

அத்துடன், இந்த நிகழ்வில் பல்கலைக்கழகம் தெரிவான மூன்று மாணவர்களுக்கு மதிப்பளிக்கப்பட்டது.

கட்புலன், செவிப்புலன், பாதிக்கப்பட்ட மாற்றுத்திறன் கொண்ட சிறுவர்களைக் கொண்ட இனியவாழ்வு இல்லத்தில் கல்விபயின்ற மாணவர்களில் இதுவரை பத்துப்பேர் பல்கலைக்கழக பட்டப்படிப்பை முடித்துள்ளதுடன் ஐந்து பேர் பட்டப்படிப்பை தொடர்ந்து வருகின்றனர்.

இதேவேளை, கடந்த ஆண்டு ஒரு மாணவன் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இதேவேளை, இந்த இல்லத்தில் கல்வி கற்கும் மாணவர்களில் கடந்த 2011 ஆம் ஆண்டு விசேட தேவைக்குட்பட்ட பிள்ளைகளுக்கான விளையாட்டுப்போட்டியிலும் 16 பதக்கங்கள் பெற்றுள்ளார்கள். (கு)

# சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் நாளை சைவசமய பரிசில் நாள்

தென்மராட்சி கல்வி வலய சைவசமய ஆசிரிய ஆலோசகர், சைவ சமய ஆசிரியர் ஆகியோர் ஒழுங்கு செய்துள்ள சைவசமய பரிசில் நாள் நிகழ்வுகள் நாளை புதன்கிழமை பிற்பகல் 2 மணி முதல் சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.சுந்தரசிவம் தலைமையில் நடைபெறும்.

பிரதமவிருந்தினராக வடமாகாண கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார், சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண மேலதிக கல்விப் பணிப்பாளர்கு.பிறேமகாந்தன், தென்மராட்சிகல்விவலய ஓய்வுநிலை பிரதிக் கல்விப்பணிப்பாளர் (நிர்வாகம்) ஆ.ஸ்ரீஸ்கந்தமூர்த்தி, சாவகச்சேரி பிரதேச செயலக இந்து கலாசார உத்தியோகத்தர் திருமதி ம.விஜயகுமார்,தென்மராட்சி கல்வி வலய ஓய்வுநிலை கோட்டக்கல்விப் பணிப்பாளர் கு.சிவானந்தன், சாவகச்சேரி மகளிர் கல்லூரி அதிபர் திருமதி ல.முகுந்தன் ஆகியோர் கலந்து கொள்வர்.

மாணவர்கள் பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளனர். தென்மராட்சிகல்விவலய ஆசிரியர்களின் 'பக்தி' என்னும் தலைப்பில் வில்லுப்பாட்டுநிகழ்வும் இடம்பெறும்.

# மின் தடை

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை புதன் கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணி வரை - **யாழ் பிரதேசத்தில்** - A9 வீதியில் (புங்கங்குளத்திலிருந்து கச்சேரி நல்லூர் வீதி சந்தி வரை), பாரதி லேன், புங்கன்குளம் வீதி ரயில் கடவை வரை, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, பேரின்பநாயகம் வீதி, காட்டுக்கந்தோர் வீதி, அச்செழு, மாசிவன் ஆகிய பிரதேசங்களிலும்- மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார். (இ)



- சுபத்ரா -

## அரசுக்கு ஆயுள் காலம் இன்னும் 20 மாதங்களே!

# ஜெனீவாவில் சமாளித்து நழுவும் போக்கில் இம்முறையும் 'ஜாலம்'!

மனித உரிமைகள் பேரவையின் 37 ஆவது கூட்டத்தொடர் நடந்து கொண்டிருக்கும் போதே, கண்டியில் இனவன் முறைகள் தலைவிரித்தாடியுள்ளன.

இம்முறை ஜெனீவா கூட்டத்தொடரைச் சமாளிப்பதற்காக, அரசாங்கம் அவசர அவசரமாக, காணாமற்போனோர் பணியகத்துக்கான உறுப்பினர்களை நியமித்தது. காணாமற் போவதில் இருந்து பாதுகாப்பு அளிக்கும் சர்வதேச பிரகடன சட்டத்தை நிறைவேற்றியது.

இந்த இரண்டையும் வைத்துக் கொண்டே இம்முறை ஜெனீவா கூட்டத் தொடரைச் சமாளித்து விட எண்ணியிருந்த அரசாங்கத்துக்கு, ஜெனீவா அமர்வு கடுமையான அழுத்தங்களைக் கொடுக்கலாம் என்ற எதிர்பார்ப்பு எழுந்திருக்கிறது. எதிர்வரும் 21ஆம் திகதி ஐ.நா. மனித உரிமை ஆணையாளரின், இலங்கை தொடர்பான வாய்மொழி அறிக்கை வெளியிடப்படவுள்ளது. அதற்குப் பின்னர் இலங்கை குறித்த விவாதம் இரண்டு கட்டங்களாக வெவ்வேறு தலைப்புகளின் கீழ் நடக்கவுள்ளது.

அரசாங்கத்தைப் பொறுத்தவரையில், 30/1 தீர்மானத்தை நடை முறைப் படுத்துவதற்கு, 2016ஆம் ஆண்டு மார்ச் மாதம், இரண்டு ஆண்டுகள் கால அவகாசத்தைப் பெற்ற பின்னர், அதனை நடைமுறைப்படுத்துவதற்கான எந்த முயற்சிகளையும் முன்னெடுத்திருக்கவில்லை.

பொறுப்புக்கூறல் பொறிமுறைகளுக்கான கலந்தாய்வு செயலணி ஒன்று அமைக்கப்பட்டு, அதன் அறிக்கை பெறப்பட்டிருந்த போதிலும், அந்தச் செயலணியின் பரிந்துரைகளை கவனத்தில் எடுத்துக் கொள்ளக்கூட இல்லை.

கடந்த ஓர் ஆண்டில் பொறுப்புக் கூறல் பொறிமுறைகளையோ, ஐ.நா.

> "அரசாங்கத்தைப் பொறுத்தவரையில், 30/1 தீர்மானத்தை நடைமுறைப் படுத்துவதற்கு, 2016ஆம் ஆண்டு மார்ச் மாதம், இரண்டு ஆண்டுகள் கால அவகாசத்தைப் பெற்ற பின்னர், அதனை நடைமுறைப்படுத்து வதற்கான எந்த முயற்சிகளையும் முன்னெடுத்திருக்கவில்லை."

குறிப்பிடும், நிலைமாறு கால நீதி செயல் முறைகளையோ முன்னெடுத்துச் செல்வதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்காமல், அலட்சியமாகவே அரசாங்கம் இருந்தது,

### அலட்சியப் போக்கு

இரண்டு ஆண்டுகள் காலஅவகாசம் பெற்றுக் கொண்டு விட்டதால், அதுபற்றி உடனடியாகக் கவனத்தில் கொள்ள வேண்டிய அவசியமில்லை என்ற போக்கு அரசாங்கத்தின் செயற்பாடுகளில் அப்பட்டமாகவே தெரிந்தது.

தமக்குச் சார்பான அரசாங்கத்துக்கு அடிக்கடி ஜெனீவாவில் அழுத்தங்களைக் கொடுத்து தொந்தரவு கொடுக்கக் கூடாது என்பதால் தான், கோரப்பட்ட காலஅவகாசத்தை விட மேலதிக கால அவகாசத்தை ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் வழங்கும் வகையில் கடந்த ஆண்டு தீர்மானத்தை முன்வைத்திருந்தது அமெரிக்கா. அரசாங்கத்துக்கு அதிகளவு நெருக்கடியைக் கொடுக்காமல் இருப்பதற்காக நீண்டதொரு கால அவகாசம் கொடுக்கப் பட்டதால், அரசாங்கம் அலட்சியமாகச் செயற்படத் தொடங்கியிருந்தது.

கடந்த ஒரு வருட காலத்தில், அரசாங்கத்தின் பொறுப்புக்கூறல் மற்றும் நல்லெண்ண நடவடிக்கைகளில் எந்தப் பெரிய முன்னேற்றமும் ஏற்படவில்லை, எல்லாமே மிக மெதுவாகவே தான் நடந்து கொண்டிருக்கின்றன என்ற குற்றச் சாட்டை ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் கடந்த வாரம் மீண்டும் குறிப்பிட்டிருக்கிறார்.

### வழக்கமான இழுத்தடிக்கும் அரசியல் தந்திரோபாயம்

அதுபோல பல்வேறு நாடுகளின் பிரதிநிதிகளும், பொறுப்புக்கூறல் செயற்பாடுகளில் அரசாங்கம் போதிய வேகத்தைக் காண்பிக்கவில்லை. அலட்சியமாகவே நடந்து கொள்கிறது என்பதை வெளிப்படுத்தியிருக்கிறார்கள். அரசாங்கம் விரைவாகவும், வேகமாகவும் செயற்பட வேண்டிய காலகட்டத்தில், இருந்தாலும், அரசியல் நலன்களைக் கருத்தில் கொண்டு காலத்தை இழுத்தடிக்கும். வழக்கமான அரசியல் தந்திரோபாயத்தையே கையாண்டு வருகிறது.

இந்த அரசாங்கம் பதவிக்கு வந்து மூன்று ஆண்டுகளாகி விட்ட நிலையில் இன்னும் இரண்டு ஆண்டுகள் கூடத் தாக்குப் பிடிக்கப்போவதில்லை. தற்போதைய நாடாளுமன்றத்தின் ஆயுள் காலம், 2020 ஒகஸ்ட் வரை இருந்தாலும், 2020 ஜனவரிக்கு முன்னர் நடத்தப்படும் ஜனாதிபதித் தேர்தலுக்குப் பின்னர் என்ன நடக்கும் என்று எவராலும் எதிர்வு கூற முடியாது.

ஏனென்றால், ஜனாதிபதித் தேர்தலில், எதிரணி வெற்றி பெறுமானால், நாடாளுமன்றம் உடனடியாக கலைக்கப்படவோ அல்லது இந்த அரசாங்கத்தைக் கவிழ்த்து விட்டு புதிய அரசாங்கம் அமைக்கப்படவோ வாய்ப்புகள் உள்ளன.

### இன்னும் 20 மாதங்களே

எனவே, தற்போதைய அரசாங்கம் உள்நாட்டிலும், சர்வதேச அரங்கிலும் கொடுத்துள்ள வாக்குறுதிகளைக் காப்பாற்றுவதற்கு இன்னும் எஞ்சியிருப்பது, 20 மாதங்கள் தான்.

அதற்குள் காத்திரமானதொரு பொறுப்புக்கூறல், பொறிமுறைகளை உருவாக்குவதற்கு இந்த அரசாங்கம் எந்த உருப்படியான முயற்சிகளையும் முன்னெடுக்கவில்லை. எனவே, இந்த விவகாரம், குறித்து முடிவெடுக்கும் பொறுப்பு அடுத்த அரசாங்கத்தின் தலையில் கட்டி விடப்படக் கூடிய சாத்தியங்களே உள்ளன.

தற்போதைக்கு இப்படியே சமாளித்துக் கொண்டு போனால் சரி, அடுத்த அரசாங்கம் அமைத்த பின்னர் பார்த்துக் கொள்ளலாம் என்ற அலட்சிய மனோபாவத்தில் அரசாங்கம் இருக்கிறது. இத்தகையதொரு சூழலில் தான், ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 37 ஆவது கூட்டத்தொடரை எதிர்கொள்ளத் தயாராகி வந்தது அரசாங்கம். கேட்டதற்கும் அதிகமான காலஅவகாசத்தைக் கொடுத்த ஐ.நா. மனித உரிமைகள் பேரவையை இலகுவாக சமாளித்து விடலாம் என்றும் அரசாங்கம் கருதியிருந்தது.

### அரசின் தந்திரம் நம்பிக்கையில் மண்

ஒன்றரை ஆண்டுகளுக்கு முன்னர் உருவாக்கியிருக்க வேண்டிய காணாமற் போனோர் பணியகத்தை, இப்போது தான் அரசாங்கம் இயங்க வைப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்திருக்கிறது. இதனைத் தான் பெரிய சாதனையாக, பேரவையில் முன்வைக்கப் போகிறது. அதுமாத்திரமன்றி, காணாமற் போவதில் இருந்து அனைவருக்கும் பாதுகாப்பு அளிப்பதற்கான சர்வதேசப் பிரகடன சட்டத்தையும், அவசர அவசரமாக கடந்த வாரம் நிறைவேற்றியிருக்கிறது.

இந்த இரண்டும் மாத்திரமே, இந்த முறை ஜெனீவாவில் தம்மைக் காப்



## ஆனால் கண்டிக் கலவரத்தால் நெருக்கடி

பாற்றும் என்று அரசாங்கம் நம்பியிருந்தது. இந்த இரண்டையும் காண்பித்து, அரசாங்கம் இம்முறை ஜெனீவாவைச் சமாளித்து விடும் என்றே, பலரும் நம்பியிருந்தனர். ஆனால், எல்லாவற்றையும் மாற்றி யிருக்கிறது கண்டியில் நடந்த வன் முறைகள். கண்டியில் வன்முறைகள் ஆரம்பிக்க முன்னரே, அம்பாறையில் முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைகள் இடம்பெற்றிருந்தன. அது அவ்வளவாக சர்வதேச கவனத்தை ஈர்க்கவில்லை.

எனினும், கண்டியின் வன்முறைகள், உலகெங்கும், மீண்டும் இலங்கையை பதற்றம் நிறைந்த நாடாக அறிமுகப் படுத்தியிருக்கிறது. இதுவரை இலங்கை பற்றி அறியாமல் இருந்தவர்களைக் கூட திரும்பிப் பார்க்க வைத்திருக்கிறது.

கண்டியில் நடந்த வன்முறைகள், இன, மத சிறுபான்மையினருக்கு எதிராக இலங்கையில் காலம்காலமாக நடந்து வரும் தாக்குதல்களின் தொடர்ச்சியாகும்.

தமிழர்களும், முஸ்லிம்களும் மாறி மாறி வன்முறைகளுக்குப் பலிக்கடாவாக்கப்பட்டு வந்துள்ளமை வரலாறு. அரசாங்கத் தின் பொறுப்பின்மை இந்த வன்முறைகளுக்கு முக்கிய காரணம் ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் செயிட் ராட் அல் ஹூசேன், கடந்த வாரம் கருத்து வெளியிட்ட போது, குற்றமிழைத்தவர்களுக்குத் தண்டனை பெற்றுக் கொடுக்கப்படாது என்ற துணிச்சல் தான் இது போன்ற வன்முறைகளுக்குக் காரணம் என்று கூறியிருக்கிறார்.

(11 ஆம் பக்கம் பார்க்க...)






கோண்டாவில் இந்துக் கல்லூரியின் ஓய்வுநிலை உப அதிபர் இ. அருணகிரிவாசனின் மணி விழா நிகழ்வில் யாழ். மாவட்ட செயலர், யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். விழாக்குழுவினருடன் விழா நாயகனும் காணப்படுகின்றார். (இ)









கடந்த வருடம் (2017) மன்னார் மாவட்டத்தில் சிறந்த முறையில் செயல்பட்ட விவசாயிகள், பண்ணையாளர்கள் 161 பேர் கௌரவிக்கப்பட்ட விழா நானாட் டான் பிரதேச சபை கலாசார மண்டபத்தில் அண்மையில் வட மாகாண விவசாயமும் கமநல சேவைகளும், கால்நடை அபிவிருத்தி, நீர்ப்பாசனம், மீன்பிடி, நீர்வழங்கல் மற்றம் சுற்றாடல் அமைச்சினால் நடத்தப்பட்டது.

இதில் வட மாகாண அமைச்சர்கள் ஞா.குணசீலன், க.சிவநேசன், வட மாகாண சபை உறுப்பினர் அ.அலிக்கன் ஷரீப் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

(படப்படிப்பு மன்னார் நிருபர் வாஸ் கூஞ்ஞ)





தொழில் முயற்சியாண்மையில் பெண்கள் பங்களிப்பை ஊக்குவிக்கும் வகையிலும், பெண் தொழில் முயற்சியாளர்களுக்குத் தேவையான வணிக வாய்ப்புகள், வலையமைப்பை ஏற்படுத்தும் வகையிலும் யாழ்ப்பாணம் தொழிற்றுறை வணிக மன்றத்தின் மகளிர் அலகு அங்குரார்ப்பண நிகழ்வு சர்வதேச மகளிர் தினமன்று யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது.

யாழ்ப்பாணம் தொழிற்றுறை வணிக மன்றத்தின் தலைவர் கை.விக்னேஸ் தலைமையில் யாழ்ப்பாணம் ஹற்றன் நஷனல் வங்கி மெற்றோ கிளை மாநாட்டு மண்டபத்தில் இந்த நிகழ்வு இடம்பெற்றது. யாழ்ப்பாணம் தொழிற்றுறை வணிக மன்ற உறுப்பினர்கள், வங்கியாளர்கள், வணிகர்கள் மற்றும் பொதுமக்கள் உட்பட பலரும் நிகழ்வில் கலந்து கொண்டிருந்தனர்.

சுயதொழில், தொழில் முயற்சியாண்மையில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் சுமார் முப்பதுக்கும் மேற்பட்ட பெண்கள் நிகழ்வில் கலந்து கொண்டிருந்தனர். இவர்கள் அனைவரையும் ஸ்தாபக அங்கத்தவர்களாகக் கொண்டியங்கும் வகையில் யாழ்ப்பாணம் தொழிற்றுறை வணிக மன்றத்தின் மகளிர் அலகு அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. (இ)







யாழ். கியூடெக் கரிதாஸ் சர்வமத சகவாழ்வு மன்றத்தின் செயற்பாடுகளின் நிலைமை குறித்த கலந்துரையாடல் இணைப்பாளர் யோசப்பாலா தலைமையில் யாழ். மன்ப உல் உலூம் மதுரஸா மண்டபத்தில் நடைபெற்றபோது பான் ஏஸியா நிறுவனத்தின் மீளாய்வாளர் எஸ். கிருஷ்ணகுமார் மற்றும் பாஸ்கரன் ஆகியோருடன் முதியோர் சங்கத் தலைவர், உறுப்பினர்களும் கலந்து கொண்டனர். (இ - 19)



கியூடெக் கரிதாஸ் சர்வமத சகவாழ்வு மன்றம் மல்லாகம் கோட்டடி கிராமத்திற்குச் சென்று கலாசார நிகழ்வை நடத்தினார்கள். இணைப்பாளரான பாஸ்கரன், யோசப்பாலா ஆகியோரும் நிகழ்வில் கலந்து கொண்டோருடன் காணப்படுகின்றனர். (இ – 19)

# கொலனித்துவ காலத்தில்

# இலங்கையில் முழங்கிய பீரங்கிகள்

திருகோணமலையில் உள்ள ஒஸ்ரென்பேர்க் கோட்டையானது வாய் திறந்து பேசுமேயானால், அது தான் இழந்து நிற்கும் தனது புகழைப் பற்றிப் பெருமையுடன் பேசும். அதாவது இங்கு இடம்பெற்ற போர்கள் மற்றும் இங்கிருந்து சுடப்பட்ட பீரங்கிகள் (கனோன்கள்) போன்றவற்றுக்கு இந்தக் கோட்டை சாட்சியமாக உள்ளது.

இலங்கையை தமது கொலனித்துவத்தின் கீழ் வைத்திருந்த போர்த்துக்கேயர்கள், ஒல்லாந்தர்கள் மற்றும் பிரித்தானியர்கள் தமது கொலனித்துவத்தைத் தக்கவைத்துக் கொள்வதற்கான கரையோரப் பாதுகாப்பை விட்டுக் கொடுக்கவில்லை. இதற்காக பல கோட்டைகளை இவர்கள் உருவாக்கினார்கள். இங்கு வீரர்கள் பணியில் அமர்த்தப்பட்டனர். பீரங்கிகள் நிறுத்தி வைக்கப்பட்டன.

பிரித்தானியர்களால் பயன்படுத்தப்பட்டவை என நம்பப்படும் இரண்டு பீரங்கிகள் அண்மையில் திருகோணமலை வைத்தியசாலைக்கான விபத்து விடுதி ஒன்றைப் புனரமைக்கும் போது கண்டெடுக்கப்பட்டன. இவ்விரு பீரங்கிகளில் ஒன்று கண்டெடுக்கப்பட்டு ஒரு சில நாள்களின் பின்னர் மற்றைய பீரங்கி கண்டெடுக்கப்பட்டது என திருகோணமலைக்கான தொல்பொருள் திணைக்களத்தின் உதவி இயக்குநர் A.H.A சுமணதாச தெரிவித்தார்.





இறுதியாகக் கண்டெடுக்கப்பட்ட பீரங்கி இரண்டு தொன்கள் நிறை கொண்டதாகவும் 11 அடி நீளமானதாகவும் காணப்பட்டது. இது தற்போது, இலங்கைக் கடற்படையினரின் உதவியுடன் திருகோணமலையிலுள்ள கரையோர மற்றும் கடற்படை வரலாற்று அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளது.

இப்பீரங்கியை சுத்தம் செய்து பாதுகாப்பதற்காக தொல்லியல் திணைக்களத்தின் இரசாயன பாதுகாப்புப் பிரிவின் வல்லுநர் குழுவுக்காகக் காத்திருக்கிறோம் எனசுமணதாசதெரிவித்தார்.

கனோன் - cannon- (பீரங்கி) எனப்படும் சொல், இலத்தீன் மற்றும் இத்தாலிய மொழிகளின் ஒரு கலப்புச் சொல்லாகவே காணப்படுகிறது. இதன் அர்த்தம் குழாய், கரும்பு, நாணல் ஆகும். வரலாற்று சான்றாதாரங்களின்படி, இப்பதமானது இலத்தீனில் துப்பாக்கி என்பதைக் குறிப்பதற்காகவும் பயன்படுத்தப்பட்டு, பின்னர் 1326இல் இத்தாலியராலும் 1418இல் பிரித்தானியராலும் கனோன் என்ற வார்த்தை பயன்படுத்தப்பட்டது.

கனோன் என்பது 14ஆம் நூற்றாண்டில் முதன் முதலாக ஐரோப்பாவில் உருவாக்கப் பட்டாலும் கூட, 17ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்திலிருந்து 19 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதி வரை இது தனக்கான உன்னத மான வடிவத்தை எடுத்துக்கொண்டது.

19 ஆம் நூற்றாண்டின் இறுதியிலிருந்து முகவாயில் துப்பாக்கிகளை ஏற்றுகின்ற கனோன்கள் RML பயன்படுத்தப்பட்டன என ஓய்வுபெற்ற லெப்ரினன்ட் கொமாண்டர் சோமசிறி தேவேந்திரா தெரிவித்தார். அண்மையில் திருகோணமலையில் கண்டெடுக்கப்பட்ட கனோனும் RML வகையைச் சார்ந்தது என அவர் கூறினார்.

பிரெடெரிக் கோட்டையிலுள்ள கச்சேரி உட்பட திருகோணமலையின் பல்வேறு இடங்களிலும் RML கனோன்கள் கண்டெடுக்கப்பட்டன என்று கடற்படைத் தளபதி தெரிவித்தார். திருகோணமலையிலுள்ள ஒஸ்றென்பேர்க் றிட்ஜ்ஜில் 1980களில் கண்டெடுக்கப்பட்ட RML கனோன் தொடர்பாக தேவேந்திரா ஆய்வுகளை மேற்கொண்டிருந்தார். சேர் வில்லியம் ஆம்ஸ்ரோங்கின் கண்டுபிடிப்பை அடுத்து RML கனோன்கள் - ஆம்ஸ்ரோங் பீரங்கிகள்-எனவும் வகைப்படுத்தப்படுகின்றன.

## யாழ்ப்பாணத்திலும் தயாரிப்பு



அண்மையில் கண்டெடுக்கப்பட்ட கனோன் எக்காலப்பகுதியில் உற்பத்தி செய்யப்பட்டது என்கின்ற விடயம் இன்னமும் உறுதிப்படுத்தப்படாது விட்டாலும் கூட, இரசாயன பகுப்பாய்வைத் தொடர்ந்து இது பிரித்தானியாவில் தயாரிக்கப்பட்டது என நம்பப்படுகின்றது என தேவேந்திரா தெரிவித்தார்.

யூனிஸி கனோன்கள் 1860இன் பின்னர் பிரித்தானியாவில் உற்பத்தி செய்யப்பட்டமையுடன் 1900இன் பின்னர் இவை மாற்றீடு செய்யப்பட்டன. திருகோணமலை பிரித் தானியர்களின் வசம் வீழ்ந்த பின்னரே பிரித்தானிய பீரங்கிகள் பொருத்தப்பட்டன என தேவேந்திரா தெரிவித்தார்.

பீரங்கியின் குழாய் வடிவப் பகுதி கூட்டிற்குள் (Chamber) முடிவடைகிறது. பீரங்கியின் குண்டானது குழாய்க்குள் செருகப்பட்டு இதன் கூட்டிற்குள் கொண்டு செல்லப்படுகிறது. இந்தக் கூட்டிற்குள் மருந்துத் துகள்கள் காணப்படுகின்றன. இறுதியில் மருந்துத்துகள்களைக் கொண்ட குண்டு கனோனின் குழாய் ஊடாக வெளியில் செலுத்தப்படுகின்றது.

கொழும்பிலுள்ள தேசிய அருங்காட்சியகத்தில் போர்த்துக்கேயர் காலத்தில் பயன்படுத்தப்பட்ட கனோன் ஒன்று வைக்கப்பட்டுள்ளது. சிங்களப் பீரங்கிகள் கூட தயாரிக்கப்பட்டன என்பது சுவாரசியமானதாகும்.

ஒல்லாந்தர் காலத்தில் யாழ்ப்பாணத்தில் தயாரிக்கப்பட்ட பீரங்கி ஒன்று பிரித்தானிய அருங்காட்சியகத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. இப்பீரங்கி மிகவும் நேர்த்தியான முறையில் தயாரிக்கப்பட்டதன் மூலம் புராதன இலங்கை கைவினைஞரின் திறமை வெளிப்படுத்தப்பட்டுள்ளது. உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட பெரும்பாலான பீரங்கிகள் டச்சு கிழக்கிந்திய நிறுவனத்தின் கட்டளைக்கிணங்க தயாரிக்கப்பட்டன என நம்பப்படுகிறது.

கொலனித்துவ காலத்திற்குப் பின்னர் தயாரிக்கப்பட்ட பீரங்கிகள் அனைத்திலும் பிரித்தானிய அரச இலச்சினை பொறிக்கப்பட்டுள்ளது. இந்த பீரங்கிகள் அனைத்தும் பிரித்தானியாவில் தயாரிக்கப் பட்டு கப்பல்களில் இங்கு கொண்டு வரப்பட்டன.

இவை கொலனித்துவத்திற்கு முன்னர் தயாரிக்கப்பட்ட வெண்கல மற்றும் இரும்பு முலாம் பூசப்பட்ட பீரங்கிகள் போலல்லாது, இரும்பு மற்றும் உருக்கு போன்றவற்றால் தயாரிக்கப்பட்டன. இவை கோட்டைகள் மற்றும் கரையோர பாதுகாப்பிற்காகவும் கப்பல்களிலும் பொருத்தப்பட்டன என திருகோணமலைத்துறைமுகத்திலிருந்து பிரித்தானியக் கப்பல் ஒன்று பீரங்கிகளை இறக்கும் ஒளிப்படத்தைக் காண்பித்தவாறு தேவேந்திரா விளக்கினார்.

இன்று இப்பீரங்கிகள் விழாக்களுக்காகவே பெருமளவில் பயன்படுத்தப்படுகின்றன. கொழும்பு வெளிச்சவீட்டில் வைக்கப்பட்டுள்ள பீரங்கிகள் சுதந்திர தின கொண்டாட்டங்களின்போது பயன்படுத்தப்படுகின்றன. இப்பீரங்கிகளுக்கு வர்ணம் தீட்டுவதானது அவற்றின் மீது பொறிக்கப்பட்டுள்ளதும் இதன் வரலாற்றை எடுத்துரைக்கின்ற சின்னங்களை மறைக்கும். இதனால் இந்த வரலாறு நிரந்தரமாகவே அழிந்து போகக் கூடும் என தேவேந்திரா தெரிவித்தார்.

வழி மூலம் - Sunday times
ஆங்கிலத்தில் - Randima Attygalle
மொழியாக்கம் - நித்தியபாரதி



# ஜெனீவாவில் சமாளித்து...

(09 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

இதே கருத்து, பல்வேறு மட்டங்களில் இருந்தும் வந்திருக்கிறது. குற்றவாளிகளுக்கு அரசாங்கமே பாதுகாப்பு அளிக்கின்ற வகையில் செயற்படுகின்ற போக்கின் விளைவு தான் இது. இரா.சம்பந்தன் கடந்த வாரம் நாடாளுமன்றத்தில் உரையாற்றிய போது இந்த விடயத்தை சுட்டிக்காட்டியிருந்தார்.

குற்றங்களை மறைக்கின்ற, அரசாங்கமே தவறுகளை ஏற்றுக்கொள்ள மறுக்கின்ற போக்கு, குற்றமிழைப்பவர்களுக்கு சாதகமாக அமைகிறது, போர்க்கால குற்றங்களுக்கு முறையான தண்டனையை இந்த அரசாங்கம் பெற்றுக் கொடுத்திருந்தால் போருக்குப் பிந்திய காலத்தில் சட்டத்தை யாரும் கையில் எடுக்கத் துணிந்திருக்கமாட்டார்கள்.

**கண்டி கலவரத்தால் ஏற்பட்டுள்ள நெருக்கடி**

இந்தளவு பெரிய வன்முறைகள் வெடித்திருக்காது. ஏனென்றால், குற்றமிழைத்தவர்கள் தண்டிக்கப்படுவார்கள் என்ற அச்சம் அவர்களுக்கு ஏற்பட்டிருக்கும்.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில், இலங்கை அரசாங்கம் பொறுப்புக்கூறலுக்கான வாக்குறுதிகளைக் கொடுத்திருந்தது, ஆனால் அதனை நிறைவேற்றுவதில் காண்பித்த அலட்சியமும், அக்கறையின்மையும், ஒரு தோல்வியுற்ற அரசாங்கமாக வெளியுலகினால் அடையாளப்படுத்தும் நிலைக்குக் கொண்டு சென்றிருக்கிறது.

போர்க்கால மீறல்களுக்குப் பொறுப்புக் கூறுவதற்கு இழுத்தடித்து வந்த அரசாங்கத்துக்கு, கண்டி கலவரங்கள் கடிவாளம் போடுகின்ற நிலையை ஏற்படுத்தக் கூடும். ஐ.நா. மனித உரிமைகள் பேரவையை மேற்குலக ஆதரவுடன், சமாளித்து விடலாம், என்று கருதியிருந்த அரசாங்கத்துக்கு, இம்முறை அமர்வு சோதனை மிக்கதாக அமையலாம். அதற்காக, பெரிய நடவடிக்கைகள் ஏதும் எடுக்கப்படும் என்று அர்த்தமில்லை.

சர்வதேச சமூகத்தின் கடுமையான கேள்விகளுக்குப் பதிலளிக்க வேண்டியிருக்கும். வாக்குறுதிகளைக் காப்பாற்றுவதில் காணப்படும் இழுபறிக்கான காரணங்களை விவரிக்க வேண்டியிருக்கும். பல்வேறு நாடுகளின் எச்சரிக்கைகளை செவிமடுக்க வேண்டியிருக்கும்.

அதற்கும் அப்பால், ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் செயிட் ராட் அல் ஹுசேன், பொறுப்புக்கூறலுக்கான உலகளாவிய சட்டவரம்புடன் கூடிய நடவடிக்கைக்கு உறுப்பு நாடுகளை ஊக்குவிப்பேன் என்றும் கூறியிருக்கிறார். இது மாற்று நடவடிக்கைகளை எடுக்குமாறு விடுக்கப்படும் அழைப்பு. இதற்கு உறுப்பு நாடுகளின் ஆதரவு எந்தளவுக்கு கிடைக்கும் என்று கூற முடியாவிடினும், இராஜதந்திர ரீதியாக அரசாங்கம் கடுமையான அழுத்தங்களுக்கு உள்ளாக நேரிடும்.

மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கம் ஜெனீவாவில் எதிர்கொண்ட நெருக்கடிகளைப் போன்றளவுக்கு இல்லாவிடினும், கிட்டத்தட்ட அதற்கு நெருக்கமான அளவு அழுத்தங்கள் அரசாங்கம் மீது கொடுக்கப்படுவதற்கு வாய்ப்புகள் உள்ளன. ஏற்கனவே கொடுக்கப்பட்ட காலஅவகாசம் இன்னமும் இருக்கும் நிலையில், அதுசார்ந்த சிக்கல்களை அரசாங்கம் எதிர்கொள்ளும் வாய்ப்புகள் இல்லாவிடினும், கண்டியில் வெடித்த கலவரங்களுக்காக, சிறுபான்மையினருக்கு பாதுகாப்பளிக்கத் தவறியதற்காக, வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்குத் தவறியதற்காக ஜெனீவாவில் கூனிக் குறுகிப் பதிலளிக்கும் நிலை அரசுக்கு ஏற்படும்.

ஆனாலும், அது பொறுப்புக் கூறல் கடப்பாடுகளை நிறைவேற்றுவதற்கு ஊக்குவிக்குமா என்பதை இப்போதைக்கு கணிக்க முடியாது (இ

# ஆனமடுவ உணவக தாக்குதல்; சந்தேகநபர்கள் 7 பேர் கைது!

ஆனமடுவ நகரில் உள்ள முஸ்லிம் ஹோட்டல் ஒன்றின் மீது பெற்றோல் குண்டுத் தாக்குதல் மேற்கொண்ட சம்பவத்தின் பேரில் 7 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என ஆனமடுவ பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன்தினம் அதிகாலை 2 மணியளவில் இந்த பெற்றோல் குண்டுத் தாக்குதல் இடம்பெற்றது.

இந்தத் தாக்குதலில் ஹோட்டல் முழுமையாக தீயில் எரிந்தது.

இந்த உணவகத்துக்கு அருகில் பொருத்தப்பட்டிருந்த சீ.சீ.ரி.வி. கமராவில் பதியப்பட்டிருந்த காட்சிகளைக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போது இந்த சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் 19 வயதுக்கும் 25 வயதுக்கும் இடைப்பட்டவர்கள் எனவும், இவர்களுக்கு எதிரான சட்ட நடவடிக்கை அவசரகாலச் சட்டத்தின் கீழ் முன்னெடுக்கப்படவுள்ளது என்றும் பொலிஸார் சுட்டிக்காட்டியுள்ளனர்.




இந்தச் சந்தேகநபர்கள் ஆனமடுவ மஜிஸ்ட்ரேட் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர் என பொலிஸ் தகவல்கள் மேலும் குறிப்பிட்டுள்ளன.

'ஈழத்துத் தமிழ்க் கவிதைக் களஞ்சியம்'

## நூல் வெளியீட்டு விழா

வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் 'ஈழத்துத் தமிழ்க் கவிதைக்களஞ்சியம்'நூல்வெளியீட்டு விழா நாளை மறுதினம் வியாழன் பிற்பகல் 3.30 மணிக்கு–

யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் ஓய்வுநிலை அதிபர் சைவப் புலவர் அ.செல்லத்துரை தலைமையில் இடம்பெறும். இந்நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வடக்கு முதலமைச்சர் நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரன் கலந்து கொள்வார்.

வாழ்த்துரையை வட மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் க. இரவீந்திரன், சிறப்புரையை வட மா காணக் கல்வி அமைச்சர் கலாநிதி க.சர்வேஸ்வரன், நூல் அறிமுகவுரையை வாழ்நாள் பேராசிரியர் அ.சண்முகதாஸ், வெளியீட்டுரையை வட மாகாணபண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் திருமதி அபிராமி பால முரளி, ஆய்வுரையை கவிஞர் சோ.பத்ம நாதன் ஏற்புரையை பேராசிரியர் மனோன்மணி சண்முதாஸ் ஆகியோரும் ஆற்றவுள்ளனர்.

நிகழ்வில் அனை வரையும் பங்கு பற்றுமாறு பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினர் அழைப்பு விடுத்துள்ளனர். (இ

# இலங்கைத் தமிழ் அகதி ஒருவருக்கு நட்டஈடு செலுத்தியது சுவிஸ் அரசு!

கொழும்பு, மார்ச் 13

சுவிற்ஸர்லாந்தில் இலங்கைத் தமிழ் அகதி ஒருவருக்கு சுவிற்ஸர்லாந்து அரசு நட்டஈடு செலுத்தியுள்ளது என அந்த நாட்டின் ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது.

நாடு கடத்தப்படும் இலங்கை அகதிகள், இலங்கையில் கைது செய்யப்பட்டு துன்புறுத்தப்படுகின்றனர் என ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ள போதும், அண் மைக்காலமாக இலங்கையைச் சேர்ந்ததமிழ் அகதிகளின் விண்ணப்பங்களை சுவிற்ஸர்லாந்து நிராகரித்து வருகிறது.

இதன்படி இலங்கைத் தமிழ் அகதி ஒருவரின் விண்ணப்பத்தையும் அண்மையில் நிராகரித்த சுவிற்ஸர்லாந்தின் அதிகாரிகள், அவரை நாடு கடத்தியுள்ளனர்.

நாடு கடத்தலின் பின்னர் தாம் இலங்கையில் கைது செய்யப்பட்டு துன்புறுத்தப்பட்டநிலையில், மீண்டும் சுவிற்ஸர்லாந்துக்கு தப்பிச் சென்று, வழக்குத் தாக்கல் செய்துள்ளார்.

அவர் துன்புறுத்தப்பட்ட மையை உறுதி செய்த நீதிமன்றம், அவருக்கு நட்டஈட்டை வழங்குமாறு அரசுக்கு உத்தரவிட்டுள்ளது. இதன்படி அவருக்கு சுவிற்ஸர்லாந்து அரசு நட்டஈட்டை வழங்கியுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



முல்லைத்தீவு மாவட்ட பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு சங்கங்களின் சமாச கட்டடத் திறப்புவிழா நிகழ்வு புதுக்குடியிருப்பு பகுதியில் நேற்றுக்காலை 9.30 மணிக்கு நடைபெற்றது.

இதில் சிறப்பு விருந்தினராக வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன் கலந்துகொண்டு கட்டடத்தின் பெயர்ப்பலகையினை திரைநீக்கம் செய்துவைத்துள்ளதுடன் கட்டடத்தையும் திறந்து வைத்தார்.

# பரந்தன் விபத்தில் நால்வர் காயம்!



கொழும்பு, மார்ச் 13

பரந்தனில் இடம்பெற்ற விபத்தில், படுகாயமடைந்த நிலையில் நால்வர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

பரந்தனில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்த ஹயஸ் வாகனம் பரந்தன் பூநகரி வீதியில் நேற்றுக் காலை தடம்புரண்டு விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த விபத்தில் வாகனத்தில் பயணித்த சாரதி உட்பட நான்கு பேர் காயமடைந்துள்ளனர். மேலும், காயமடைந்தவர்கள் கிளிநொச்சி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்த விபத்து அதி வேகத்தால் இடம்பெற்றுள்ளது என பொலிஸார்தெரிவிக்கின்றனர்.

அத்துடன், மேலதிக விசாரணைகளை கிளிநொச்சிப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# 'வாழ்வோம் வளம் பெறுவோம்'; 30 பயனாளிகள் உள்ளீர்ப்பு

முல்லைத்தீவு , மார்ச் 13

வடமாகாணசபைஉறுப்பினர் துரைராசா ரவிகரனால் முன்னெடுக்கப்படும் 'வாழ்வோம் வளம்பெறுவோம்'செயற்றிட்டத்தின் பதினைந்தாம் கட்டமானது கடந்த 10 ஆம் திகதி அவரது மக்கள் தொடர்பகத்தில் நடைபெற்றது.

புலம்பெயர் அன்பர்களின் பங்களிப்பில் முன்னெடுக்கப்பட்ட இந்த செயற்றிட்டத்தின் பதினைந்தாம் கட்டத்தில்தாயகத்தை சேர்ந்த முப்பது குடும்பங்கள் உள்ளீர்க்கப்பட்டுள்ளன.

குறுங்கால வாழ்வுடைமை ஊக்குவிப்பை நோக்காகக் கொண்டு நாளாந்த உணவுத் தேவைக்கு இடர்படும் குடும்பங்களுக்கான ஒத்துழைப்பாக 'வாழ்வோம் வளம் பெறுவோம்' என்ற செயற் றிட்டமானது வட மாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரனால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இது தொடர்பில் துரைராசா ரவிகரன் தெரிவித்தவை வருமாறு:–

புலம்பெயர்ந்து வாழும் அன்பர்களின் பணப்பங்களிப்பில் நடைபெற்று முடிந்த பதினைந்தாம் கட்டத்துடன் இதுவரையில் ஐந்நூற்று அறுபத்தேழு குடும்பங்கள் உள்ளீர்க்கப்பட்டுள்ளனர்.



இந்தக் கட்டத்திற்காக புலம்பெயர்ந்து பிரித்தானியாவில் வாழும் சுபாசுகரனின் குடும்பமும், புலம்பெயர்ந்து கனடாவில் வாழும் ஜெகதீஸின் குடும்பமும், வாழ்வோம்பெறுவோம் செயற்றிட்டத்தின் பதினைந்தாம் கட்டத்தில் முப்பத்தி ஆறாயிரம் ரூபா பெறுமதியில் தமிழ் உறவுகளுக்கு இந்த உதவிகளை வழங்கியுள்ளனர்என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த உதவிகளாக முப்பது குடும்பங்களுக்கு 540 கிலோ அரிசி வழங்கப்பட்டது. இந்த வாழ்வுடைமை ஊக்குவிப்பானது வடமாகாணசபைஉறுப்பினர் துரைராசா ரவி கரனால் அவரது மக்கள் தொடர்பகத்தில் வைத்து வழங்கப்பட்டது. (க–8)

**04) பின்வரும் தொடர்களுக்குரிய தனிச் சொல்லை எழுதுக.**

1) அரண்மனையில் பெண்கள் வசிக்கும் இடம் ..........................................................................................

**05) கீழே தரப்பட்டுள்ள பழமொழிகளைப் பூரணப்படுத்துக.**

1) காற்றுள்ளே போதே ..............................................................

2) சீரைத் தேடின் ..............................................................

(2 x1= 2 புள்ளிகள்)

**06) கீழே தரப்பட்டுள்ள சொற்களை ஒழுங்குபடுத்தி வாக்கியமாக்குக.**

1) அனைவரும் / பிள்ளைகள் / கற்க / கல்வி / வேண்டும்

..........................................................................................................................

2) நின்றனர் / எல்லோரும் / வானத்தைப் /கொண்டு / பார்த்துக்

..........................................................................................................................

(2 x 1= 2 புள்ளிகள்)

**07) இடைவெளிக்குப் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்து எழுதுக.**

1) " கேடில் விழுச் செல்வம் கல்வி " என்று பாடியவர் ............................................... ஆவார். (பாரதியார், திருவள்ளுவர், ஔவையார்)

2) "மன்னனும் மாசறக் கற்றோனும்......" என்னும் பாடல் இடம் பெறும் நூல் ....................................... ஆகும். ( மூதுரை, திருக்குறள், நல்வழி)

3) மகாபாரதத்தில் நன்றி மறவாமைக்கு ................................................... எடுத்துக் கூறப்பட்டான். ( கும்பகர்ணன் , ஏகலைவன், கர்ணன்)

(3 x 1 = 3 புள்ளிகள்)

**08) மிகச்சரியாக எழுதப்பட்டுள்ள சொல்லின் கீழ் கோடிடுக.**

1) 1. செய்நன்றி 2. செய்ந்நண்றி 3. செய்ந்நன்றி 4. செய்னன்றி

2) 1. இங்ஙணம் 2. இங்ஙனம் 3. இங்கனம் 4. இங்கணம்

(2 x 1 = 2 புள்ளிகள்)

**09) வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொல்லை எழுதி திருக்குறளைப் பூரணப்படுத்துக.**

1) இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண
................................................... செய்து விடல்.

2) காலத்தினாற் செய்த நன்றி சிறிதெனினும்
.............................................. மாணப் பெரிது.

(2 x 1 = 2 புள்ளிகள்)

**10) "நான் ஒரு விளையாட்டு வீரனானால் ......" என்ற தலைப்பில் மூன்று வாக்கியங்கள் எழுதுக.**
**( ஒவ்வொரு வாக்கியத்திலும் ஐந்து சொற்களுக்கு மேல் இடம் பெறவேண்டும். எழுவாய் பயனிலைத் தொடர்புகள் சரியாக இருக்கவேண்டும்.**

1) ..........................................................................................................................

2) ..........................................................................................................................

3) ..........................................................................................................................

(3 x 2 = 6 புள்ளிகள்)





31. சரியான ஒழுங்குமுறையில் எழுதப்பட்ட விடையைத் தெரிவு செய்க.

1. கிராமம் → நகரம் → மாகாணம் → மாவட்டம் → நாடு
2. கிராமம் → நகரம் → மாவட்டம் → மாகாணம் → நாடு
3. கிராமம் → மாவட்டம் → நகரம் → மாகாணம் → நாடு

✧ **32 ஆம், 33 ஆம் வினாக்களில இடைவெளிக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**


32. விகாரை → விகாராதிபதி ஆயின் பாடசாலை → ....................................

1. ஆசிரியர் 2. அதிபர் 3. மாணவன்

33. தொழிற் பெயரைக் குறிக்கும் சொல்லைத் தெரிவு செய்க. → ....................................

1. படித்தல் 2. வடிவம் 3. தை மாதம்

34. முதலாம் உருவில் உள்ள சதுரவடிவமான கடதாசியை இரண்டாம் உருவில் உள்ளவாறு இரண்டாக மடித்து மூன்றாம் உருவில் உள்ளபடி நிறந்தீட்டிய பகுதி வெட்டியெடுக்கப்பட்டது. பின் அதை விரித்துப் பார்க்கும் போது தோன்றும் சரியான உரு



உரு. 1 உரு. 2 உரு. 3 1. 2. 3.

35. 20 ஆவது ஒற்றை எண்ணுடன் மிகப் பெரிய ஈரிலக்க இரட்டை எண்ணைக் கூட்டும் போது கிடைக்கும் விடை யாது?

1. 138 2. 140 3. 137

✧ **மின் அலங்காரச் சரம் ஒன்றில் இருந்த மின்குமிழ்களின் எண்ணிக்கைகள் பற்றிய தகவல்கள் பின்வருமாறு குறியீடுகள் மூலம் காட்டப்பட்டுள்ளன. இதை அவதானித்து 36 ஆம், 37 ஆம் வினாக்களுக்குரிய விடையைத் தெரிவு செய்க.**

குறைவு → கூட
கூட ← குறைவு




36. இங்கு எந்த நிற மின்குமிழ்கள் அதிக எண்ணிக்கையில் உள்ளன?

1. மஞ்சள் 2. நீலம் 3. சிவப்பு


37. மின்குமிழ்களின் எண்ணிக்கைகளை குறைந்த எண்ணிக்கையில் இருந்து கூடிய எண்ணிக்கை வரை ஒழுங்குபடுத்தும்போது கிடைக்கும் விடை யாது?

1. மஞ்சள், நீலம், பச்சை, சிவப்பு    2. சிவப்பு, பச்சை, நீலம், மஞ்சள்
3. பச்சை, சிவப்பு, நீலம், மஞ்சள்

38. ஒரு பாடசாலையில் ஆரம்பப்பிரிவில் 20 நிமிடத்திற்கு ஒரு மணியும், இடைநிலைப் பிரிவில் 15 நிமிடத்திற்கு ஒரு மணியும் ஒலித்தது. காலை 7.30 மணிக்கு இரண்டு மணியும் ஒன்றாக ஒலித்தது எனின் அடுத்து இரண்டு மணிகளும் ஒன்றாக ஒலிக்கும் நேரம் எது?

1. மு.ப. 8.30    2. மு.ப. 9.10    3. மு.ப 8.15


39. கட்டத்திற்குள் தரப்பட்டுள்ள வடிவங்களை அவதானித்து பிழையான விடை உள்ள கூற்றைத் தெரிவு செய்க.



1. வட்டங்களின் எண்ணிக்கையும் சதுரங்களின் எண்ணிக்கையும் சமன்.
2. சதுரங்களை விட முக்கோணங்கள் கூடுதலாக உள்ளன.
3. வட்டங்களை விட முக்கோணங்கள் குறைவாக உள்ளன.

40. ஒரு சம்பவம் தொடர்பான ஐந்து உருக்கள் கீழே தரப்பட்டுள்ளன. இவ் உருக்களை சம்பவத் திற்கேற்ப ஒழுங்குப்படுத்தும் போது சரியாக அமையும் விடையைத் தெரிவு செய்க.


A


B


C


D


E

1. DEBCA    2. DEACB    3. CDEAB

(40 x 2 $\frac{1}{2}$ = 100 புள்ளிகள்)





# கல்விக் கதிர் வெளியீடு

## புலமைப்பரிசில் மாதிரி வினாத்தாள்

வினாத்தாள் **20**

தரம்-5    பகுதி – II    நேரம்- 1 மணித்தியாலம் 45 நிமிடம்

✦ **பின்வரும் பந்தியை நன்றாக வாசிக்குக.**

**01)** பரந்த அவ் வயல் வெளியின் மத்தியில் குளம் ஒன்று அமைந்திருந்தது. அதிகாலை எழுந்து வந்த சூரியனின் பொன் நிறக்கதிர்களால் குளத்தில் நீர் தங்கத்தகடு போல பளபளத்துக் கொண்டிருந்தது.குளக்கரையில் ஆங்காங்கே பெரிய பெரிய மருத மரங்கள் நின்றன. அவற்றில் அமர்ந்திருந்த பட்சிகள் ஒலி எழுப்பிக் கொண்டிருந்தன. இவை பார்ப்பதற்கு அழகையும் கேட்பதற்கு இனிமையையும் தரும் இயற்கை தந்த கொடையாகும்.

✦ **கீழே தரப்படும் 1 தொடக்கம் 6 வரையான வினாக்களுக்கான விடையைப் பந்தியிலிருந்து தெரிவு செய்து எழுதுக.**

01. பறவைகள் என்பதன் ஒத்த சொல்லை எழுதுக.

.......................................................................................................................

02. செயற்கை என்ற சொல்லின் எதிர்க்கருத்துச் சொல்லை எழுதுக.

.......................................................................................................................

03. இங்கு வந்துள்ள உவமானத்தை எழுதுக.

.......................................................................................................................

04. பந்தியில் இடம்பெறும் இரட்டைக்கிளவிச் சொல்லை எழுதுக.

.......................................................................................................................

05. இங்கு வந்துள்ள அடுக்குமொழிச் சொல்லை எழுதுக.

.......................................................................................................................

06. கீழ்க்காலும் சுழியும் காணப்படும் சொல்லை எழுதுக.

.......................................................................................................................

(6 x 1 = 6 புள்ளிகள்)

**02)** **இடைவெளிக்குப் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்து வெற்றிடத்தில் எழுதுக.**

1) கீரியைக்கண்ட பாம்பு ............................... யினுள் புகுந்தது. (அலை, அளை, அழை)
2) இன்று கிராமியக் கலைஞர்களைக் காண்பது ........................... காரியம் ஆகும். (அரிய, அறிய)
3) நீண்ட நாட்கள் நோய் நொடியின்றி உயிர் வாழ வேண்டுமானால் .............................. உணவுகளைத் தவிர்த்தல் வேண்டும். (ஊன்,ஊண்)

(3 x 1 = 3 புள்ளிகள்)

**03)** **முதலில் தரப்பட்டுள்ள சொல்லுடன் பொருந்தாத சொல்லின் கீழ் கோடிடுக.**

1) துன்பம் : இன்னல், அல்லல், உவகை, இடர்
2) அழகு : எழில், வனப்பு, சுந்தரம், அலங்கோலம்

(2 x 1 = 2 புள்ளிகள்)

# ஈரானில் விமான விபத்து; 11 பேர் சாவு

தெஹ்ரான்,மார்ச் 13

ஐக்கிய அரபு எமிரேட்சில் இருந்து துருக்கி சென்ற விமானம் ஈரான் மலைப்பகுதியில் கீழே விழுந்து நொருங்கியதில் அதில் பயணம் செய்த 11 பேரும் பலியாகினர்.




துருக்கி நாட்டைச் சேர்ந்த தனியார் விமானம் ஐக்கிய அரபு எமிரேட்ஸில் இருந்து இஸ்தான்புல் நோக்கிச் சென்றது. அதில் 11 பேர் பயணம் செய்து கொண்டிருந்தனர். அந்த விமானம் ஈரான் நாட்டு மலைப்பகுதியில் சென்றபோது கீழே விழுந்து நொருங்கியது.

இந்த விபத்தில் விமானத்தில் பயணம் செய்த 11 பேரும் பலியாகினர் எனவும், ஈரான் மலைப்பகுதியில் பலத்த காற்று மற்றும் மழை பெய்து வருவதால் இந்த விபத்து நடந்திருக்கலாம் எனவும் அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஈரான் மலைப்பகுதியில் கீழே விழுந்து விமானம் தீப்பிடித்து எரிவதைக் கண்ட அப்பகுதி மக்கள் உடனடியாக உள்ளூர் பொலிஸுக்குத் தகவல் கொடுத்தனர். அவர்கள் மீட்புப் படையினருடன் அங்கு விரைந்து சென்று சிதறிக் கிடந்த 11 பேரின் உடல்களை மீட்டனர் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஏற்கனவே, கடந்த மாதம் ஈரானில் நடந்த விமான விபத்தில் 66 பேர் பலியாகினர் என்பது குறிப்பிடத்தக்கது.

சீனா — சுவிஸ் அரசுகளுக்கு எதிராக

# திபெத்தியர்கள் ஆர்ப்பாட்டம்




சீனாவில் திபெத்தியர்களுக்கு எதிரான மனித உரிமை மீறல்களுக்கு முடிவு கொண்டு வர வேண்டும் என 5 ஆயிரம் திபெத் மக்கள் சுவிற்ஸர்லாந்தில் போராட்டம் நடத்தினர்.

திபெத் நாடானது சீனாவின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ளது. திபெத் மக்கள் சீனாவை தவிர இந்தியா, நேபாளம் மற்றும் சுவிற்ஸர்லாந்து போன்ற பகுதிகளிலும் வசித்து வருகின்றனர். திபெத் மக்கள் தங்களுக்கு தனி நாடு வேண்டும் என போராடி வருகின்றனர். ஆனால், சீனா இதற்கு எதிர்ப்பு தெரிவித்து வருகிறது.

சுவிற்ஸர்லாந்தில் மட்டும் 7ஆயிரத்து 500 திபெத்திய மக்கள் உள்ளனர். அவர்கள் சுவிற்ஸர்லாந்தில் திபெத்திய மக்களுக்கு எதிராக நடைபெற்று வரும் மனித உரிமை மீறல்களுக்கு எதிராக போராடி வருகின்றனர். மேலும் சீனாவிடமிருந்து திபெத்திற்கு விடுதலை வேண்டும் எனவும் கூறி வருகின்றனர்.

சுவிற்ஸர்லாந்தில் சீனாவின் ஆதிக்கம் அதிகமாகி விட்டது. இரு நாடுகளும் நட்பு நாடாக உள்ளன. இதனால் திபெத் மக்களுக்கு எதிராக மனித உரிமைகள் மீறல் நடைபெறுகிறது. சுவிற்ஸர்லாந்திலிருந்து வெளியே செல்ல விரும்பும் திபெத் மக்களுக்கு கடவுச்சீட்டு மறுக்கப்படுகின்றது எனக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இந்த நிலையில், ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்த 5 ஆயிரத்திற்கும் அதிகமாக திபெத்திய மக்கள் ஜெனீவாவில் உள்ள மனித உரிமைகள் ஆணையம் நோக்கி நேற்று பேரணியில் ஈடுபட்டனர். திபெத்திய மக்களுக்கு எதிரான மனித உரிமைகள் மீறலுக்கு முடிவு கட்ட வேண்டும். எனவும் கோரிக்கை விடுத்தனர்.

# சிரியாவில் 20 நாள் நடந்த தாக்குதலில் 219 குழந்தைகள் உட்பட 1,031 பேர் பலி!

டமாஸ்கஸ்,மார்ச் 13

சிரியாவில் கிளர்ச்சியாளர்கள் வசமிருந்து கிழக்கு கூட்டாப் பகுதியை முழுமையாக மீட்டெடுப்பதற்காக அதிபர் பஷர் அல் ஆசாத் ஆதரவு படைகள், கடந்த 20 நாள்களாகக் கடும் தாக்குதலில் ஈடுபட்டு வருகின்றன.



தாக்குதலில் பலியான அப்பாவி மக்களின் எண்ணிக்கை ஆயிரத்து 31 ஆகியுள்ளது. அவர்களில் 219 பேர் குழந்தைகள் என்பது நெஞ்சை உருக்குவதாக அமைந்துள்ளது. இது மட்டுமின்றி 4 ஆயிரத்து 350 பேர் படுகாயம் அடைந்துள்ளனர்.


ஆனாலும் சர்வதேச சமுதாயத்தின் வேண்டுகோளை ஏற்காமல் அதிபர் ஆதரவு படைகள் தொடர்ந்து தாக்குதல்களில் ஈடுபட்டு வருகின்றன. நேற்று முன்தினம் நடந்த தாக்குதல்களில் மட்டுமே 20 அப்பாவிமக்கள் பலியாகினர். அவர்களில் 4 பேர் ஏதுமறியாத அப்பாவி குழந்தைகள். படுகாயம் அடைந்தவர்களை சிகிச்சைக்காக எடுத்துச் செல்லவும் முடியாத அளவுக்கு வீதிகள் சிதைந்து போயுள்ளன.

தற்போது கிழக்கு கூட்டாவின் முக்கிய நகரங்களான டூமா மற்றும் ஹராஸ்தா நகரங்களை கிளர்ச்சியாளர்கள் வசமுள்ள மற்ற பகுதிகளுடன் இணைக்கும் வீதிகளை அதிபர் படைகள் கைப்பற்றியுள்ளன. இதனால் கிழக்கு கூட்டா இப்போது டூமா, ஹரஸ்தா, எஞ்சிய நகரங்கள் என மூன்று துண்டுகளாகி விட்டன என்று சிரிய மனித உரிமைகள் கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

# வடகொரியாவுடன் சமாதானம்: ட்ரம்பை எச்சரிக்கும் ஹிலாரி

அம்ஸ்டர்டாம்,மார்ச் 13

அணு ஆயுதங்களைவைத்து மிரட்டிவரும் வடகொரியாவுடன் சமாதானம் பேச நினைக்கும் அமெரிக்க அதிபர் ட்ரம்பின் முயற்சி ஆபத்தில் முடியும் என ஹிலாரி கிளிண்டன் எச்சரித்துள்ளார்.



அணு ஆயுதங்கள் மற்றும் ஏவுகணைகளை வைத்து அமெரிக்கா உள்ளிட்ட வல்லரசு நாடுகளை மிரட்டிவரும் வடகொரியா அதிபர் கிம் ஜாங் உன்னுடன் அமர்ந்து சமாதானம் பேசுவதற்குத் தயாராக உள்ளேன் என சமீபத் தில் அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில் இது தொடர்பாக ஹிலாரி கிளிண்டன் தெரிவித்தவை வருமாறு:–

ராஜதந்திர அணுகுமுறைகளை அறிந்த மூத்த அதிகாரிகள் யாரும் இல்லாமல் ராஜதந்திர முறையின் மூலம் வடகொரியாவுடன் சமாதானம் காண நினைக்கும் டொனால்ட் ட்ரம்பின் நடவடிக்கை ஆபத்தில் முடியும் என எச்சரித்துள்ளார்.

# பயணிகள் சென்ற விமானத்தைச் சுடுவதற்கு உத்தரவிட்டேன்!

### – விளாடிமீர் புடின்

மொஸ்கோ,மார்ச் 13


பயணிகள் விமானம் ஒன்றை சுட்டு வீழ்த்த தான் உத்தரவிட்டேன் என ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடின் தெரிவித்துள்ளார்.

2014 ஆம் ஆண்டு உக்ரைனிலிருந்து துருக்கி சென்ற பயணிகள் விமானம் ஒன்று கடத்தப்பட்டுள்ளது எனவும், அந்த விமானத்தைக் கொண்டு குளிர் கால ஒலிம்பிக் தொடரை தாக்குவதற்காக கடத்தல்காரர்கள் திட்டமிட்டிருக்கின்றனர் எனவும் தகவல் கிடைத்தது. இந்தத் தாக்குதலைத் தடுக்க அவ்விமானத்தை சுட்டு வீழ்த்த உத்தரவிட்டேன். ஆனால், அத்தகவல் பொய்யான ஒன்று ஊர்ஜிதமானமையால் அவ்விமானம் சுட்டு வீழ்த்தப்படவில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

# உலகின் மிகவும் ஆபத்தான 50 நகரங்கள் பட்டியல் வெளியீடு

மெக்சிகன்சிற்றி,மார்ச் 13

உலகில் கொலை, கொள்ளை மற்றும் துப்பாக்கிச் சூடு என மிக மோசமான 50 நகரங்கள் பட்டியலில் மெக்சிக்கோவின் லொஸ் கபோஸ் நகரம் முதலிடத்தில் இருக்கிறது.



உலகில் கொலை, கொள்ளை, பாலியல் துஷ்பிரயோகம் மற்றும் துப்பாக்கிச் சூடு என மிக மோசமான சம்பவங்கள் நடைபெறும் 50 நகரங்களின் பட்டியல் சமீபத்தில் வெளியிடப்பட்டது.

அதில் மெக்சிக்கோவின் லொஸ் கபோஸ் நகரம் முதலிடம் வகிக்கிறது. உலகின் போதை மருந்துக்கு அது ஊற்றுக்கண்ணாக விளங்குகிறது. இங்கு போதைப் பொருள் கடத்தல் கும்பலின் மோதல்கள் தினசரி நடைபெறுகின்றன.

இதற்கு அடுத்தபடியாக வெனிசுலாவின் கராகஸ் நகரம் 2ஆவது இடத்தில் உள்ளது. மெக்சிக்கோவின் துறைமுக நகரமான அகாபுல்கோ 3ஆவது இடத்திலும், பிரேஸிலின் நடால் நகரம் 4ஆவது இடத்திலும், மெக்சிக்கோவின் டிஜுவானா 5ஆவது இடத்திலும் உள்ளன.

இவை தவிர லாபாஷ் (மெக்சிக்கோ), 6ஆவது இடத்திலும், போர்டாலிா (பிரேஸில்) 7ஆவது இடத்திலும், விக்டோரியா (மெக்ஸிகோ) 8ஆவது இடத்திலும், குயானா (பிரேஸில்) 9ஆவது இடத்திலும், பிலீம் (பிரேஸில்) 10ஆவது இடத்திலும் உள்ளன.

மிகவும் ஆபத்தான நகரங்களின் பட்டியலில் அமெரிக்காவின் மிசோரி மாகாணத்தில் உள்ள செயிண்ட் லூயிஸ் நகரம் 13ஆவது இடத்தில் உள்ளது. கடந்த ஆண்டு மட்டும் இங்கு சுமார் 205 கொலைக் குற்றங்கள் நடந்துள்ளன.

2017ஆம் ஆண்டு அதிக குற்றச்செயல்கள் நடந்த நகரங்களின் பட்டியலில் மெக்சிக்கோவின் 12 நகரங்கள் முன்னிலையில் உள்ளன. ஆனால் ஐரோப்பிய, ஆசிய, ஆஸ்திரேலிய மற்றும் கனடா நகரங்கள் ஆபத்தான நகரங்கள் பட்டியலில் இடம் பெறவில்லை. (ப)

# ராகுல் மன்னித்து விட்டமையால் பேரறிவாளன் விடுதலையாவார்

ராகுல்காந்தி மன்னித்து விட்டமையால் பேரறிவாளனை விடுதலை செய்ய மத்திய-மாநில அரசுகள் உடனே ஆவன செய்ய வேண்டும் என்று பேரறிவாளனின் பெற்றோர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

சிங்கப்பூரில் ஐ.ஐ.எம். முன்னாள் மாணவர்களுடன் நடந்த கலந்துரையாடல் நிகழ்ச்சியில் ராஜீவ்காந்தி கொலையாளிகளை மன்னித்துவிட்டேன் என காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி பேட்டி அளித்துள்ளார்.

இது பற்றி, ராஜீவ்காந்தி கொலை வழக்கில் ஆயுள் தண்டனை அனுபவிக்கும் பேரறிவாளனின் தாய் அற்புதம்மாள் கூறியவை வருமாறு:-

என் மகன் 27 ஆண்டுகளுக்கும் மேலாக சிறைத் தண்டனை அனுபவித்து வருகிறார். ராஜீவ் காந்தி கொலை வழக்கில் மரண தண்டனை விதிக்கப்பட்ட போது, சோனியா கடுமையாக தண்டிக்க வேண்டும் என்றார். அவரது குடும்பத்தினரும் அதையே விரும்புகின்றனர் என சோனியா கூறினார்.

இந்த நிலையில், நீண்ட இடைவெளிக்கு பிறகு சோனியா காந்தி மகன் காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி, ராஜீவ்காந்தி கொலையாளிகளை மன்னித்து விட்டோம் எனக் கூறியுள்ளமை சற்று மன நிறைவைத் தந்துள்ளது.




ஆனாலும் காலதாமதமாக கருத்து கூறி இருப்பதால் எனக்குள் இருந்த வருத்தம் குறையவில்லை. இதுபற்றி முன்பாகவே ராகுல்காந்தி கூறி இருக்கலாம். ஏனெனில், வாழ்வு என்பது சாதாரணமானது அல்ல. எனது மகனின் இளமை போய்விட்டது.

இந்த நிலையில் வெளிப்படையாக ராகுல் காந்தி தற்போது கூறி இருப்பதை அரசியல் கட்சித் தலைவர்கள் வரவேற்றுள்ளனர். ராகுல்காந்தியின் கூற்று பேறிவாளன் விடுதலைக்கு பெரிய பலமாக அமைந்துள்ளதால் நானும் வரவேற்கிறேன் என்று தெரிவித்துள்ளார்.

## சிறையில் சாதாரண உடை: மீண்டும் சர்ச்சையில் சசி

பெங்களூர் பரப்பன அக்ரஹாரா சிறையில் தேசிய மகளிர் ஆணையத் தலைவி ஆய்வு செய்தார். அப்போது, சாதாரண உடையில் சசிகலா இருந்தார் என மீண்டும் சர்ச்சை ஏற்பட்டுள்ளது.

சொத்துக்குவிப்பு வழக்கில் தண்டனை பெற்ற சசிகலா, இளவரசி, சுதாகரன் ஆகியோர் பெங்களூர் பரப்பன அக்ரஹாரா சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். சிறையில் 2 கோடி ரூபா லஞ்சமாகப் பெறப்பட்டு சசிகலாவுக்கு சொகுசு வசதிகள் செய்யப்பட்டன எனக் குற்றச்சாட்டு எழுந்தது.

இது தொடர்பாக கர்நாடக ஊழல் தடுப்பு படை பொலிஸார் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் தேசிய மகளிர் ஆணையத்தின் தலைவி ரேகா சர்மா திடீரென பெங்களூர் பரப்பன அக்ரஹாரா சிறைக்கு சென்று ஆய்வு செய்தார். அப்போது, பெண் கைதிகள் அடைக்கப்பட்டு இருக்கும் பகுதியில் சசிகலா, இளவரசி ஆகியோர் சிறைச் சீருடை அணியாமல் சாதாரண ஆடைகள் அணிந்திருந்தமையை அவர் பார்த்து கோபம் அடைந்தார்.



மேலும், சசிகலா, இளவரசி ஆகியோர் சாதாரண ஆடைகள் அணிவதற்கு எப்படி அனுமதி வழங்கினீர்கள்? என்று அங்கு உள்ள சிறை அதிகாரிகளை கடிந்து கொண்டு கேட்டார்.

அதைத்தொடர்ந்து சாதாரண உடைகள் உங்களுக்கு எங்கிருந்து கிடைத்தன என்று ரேகா சர்மா, சசிகலாவிடம் கேட்டார். இந்தக் கேள்விக்குப் பதில் அளிக்காமல் சசிகலா அமைதியாக இருந்தார் எனக் கூறப்படுகிறது. இதனால் சசிகலா இருந்த சிறை அறைக்குள் சென்று ரேகா சோதனையிட்டார். அப்போது, ஒரு பையில் பல்வேறு வகையான வண்ண, வண்ண ஆடைகள் இருந்தமை கண்டுபிடிக்கப்பட்டன.

# தேனி குரங்கணி காட்டில் தீ விபத்து; 9 பேர் சாவு!

### 6 பேர் கவலைக்கிடமான நிலையில்

தேனி,மார்ச்.13

தேனி மாவட்டம் குரங்கணியில் நேற்று ஏற்பட்ட காட்டுத்தீயில் மலையேற்ற பயிற்சிக்கு சென்ற 36 பேர் சிக்கிக்கொண்டனர். இரு குழுவினராக இருந்த அவர்கள் தீயில் மாட்டிக்கொண்டனர். உள்ளூர் மக்கள், வனத்துறை, இராணுவவீரர்கள், விமானப்படை என மீட்புப்பணிகள் துரித வேகத்தில் நடந்து வருகின்றன.

தற்போது வரை 27 பேர் மீட்கப்பட்டுள்ளனர். இவர்களில் 10 பேர் காயங்கள் இன்றி மீட்கப்பட்டனர். 17 பேர் காயங்களுடன் தேனி மற்றும் மதுரை மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். 6 பெண்கள் உட்பட 9 பேர் பலியாகியுள்ளனர் என வருவாய் நிர்வாக ஆணையர் தெரிவித்துள்ளார்.


சிகிச்சை பெற்று வருபவர்களில் 6 பேரின் நிலை கவலைக்கிடமாகவுள்ளது எனத் தகவல்கள் வெளியாகியுள்ளது. இதனை அடுத்து, அவர்கள் தீவிர கண்காணிப்பில் வைக்கப்பட்டுள்ளனர். பலியானவர்களில் ஒருவரின் உடல் மட்டுமே தற்போது மீட்கப்பட்டுள்ளது, மீதமுள்ள 8 பேரின் உடல்களும் 50 அடி பள்ளத்தில் உள்ளமையால் மீட்பதில் சிக்கல் உள்ளது எனக் கூறப்படுகிறது.

உரிய அனுமதி இல்லாமல் மாணவர்கள் மலையேற்ற பயிற்சி மேற்கொண்டிருந்தனர் என்று வனத்துறை அமைச்சர் சீனிவாசன் கூறியுள்ளார். முறையான அனுமதி பெற்றிருந்தால், பாதுகாப்பு அளிக்கப்பட்டிருக்கும் எனவும் அவர் தெரிவித்தார்.





(ப)





இமயமலை சென்றுள்ள நடிகர் ரஜனிகாந்த் பாரதிய ஜனதா தலைவரும், இமாச்சல பிரதேச முன்னாள் முதலமைச்சருமான பிரேம்குமார் துமாலை சந்தித்துப் பேசினார்.

# ராஜீவ் கொலையாளிகளுக்கு மன்னிப்பு: ராகுல் காந்தி மீது தமிழிசை பாய்ச்சல்

சென்னை,மார்ச்.13

ராஜீவ் காந்தி கொலையாளிகளை மன்னித்து விட்டேன் என ராகுல் காந்தி கருத்து தெரிவித்துள்ளதை தமிழக பா. ஜனதா தலைவர் டாக்டர் தமிழிசை கடுமையாக விமர்சித்துள்ளார்.

ராகுல் காந்திக்கு, யாரும் எதிர்பாராத நேரத்தில் எதிர்பாராத வகையில் இப்படி ஓர் எண்ணம் தோன்றி இருப்பது ஆச்சரியமாக உள்ளது.

ராஜீவ் கொலைக்கு பழி வாங்க வேண்டும் என்ற ஒரே குரூர உணர்வோடு மத்தியில் காங்கிரஸ் ஆண்டபோது செயற்பட்டது. இலங்கையில் மிகப் பெரிய இனப்படுகொலையை நடத்தி முடித்தார்கள்.

முழுக்க முழுக்க இந்திய அரசு துணை நின்று தமிழினத்தை அழித்தனர். இந்திய அரசின் துணையோடுதான் தமிழர்களை அழிக்க முடிந்தது என இலங்கை இராணுவத் தளபதி வெளிப்படையாகக் கூறினார்.



அன்று வராத உணர்வு இன்று எப்படித் திடீரென்று வந்தது? அதே உணர்வை அன்று வெளிப்படுத்தி இருந்தால் 2 லட்சம் தமிழர்கள் அநியாயமாகக் கொல்லப்பட்டு இருக்க மாட்டார்களே? தமிழர்களை அழித்த பிறகு இப்படி ஒரு போலி நடிப்பு ஏன்?

பிரியங்கா காந்தி வேலூர் ஜெயிலில் நளினியை இரகசியமாக சந்தித்துப் பேசினாரே, அது என்ன நோக்கத்துக்காக? அதன் பிறகுதானே இலங்கையில் தமிழர்களை கொன்று குவிக்க மத்திய அரசு துணை போனது.

அதன் வெளிப் பாடுதானே பிரபாகரனின் மரணமும், இப்போது பிரபாகரன் கொடூரமாகக் கொல்லப்பட்டது வருத்தமாக உள்ளது என்றால் மக்கள் ஏற்பார்களா?



# 239 ஓட்டங்களில் சுருண்ட ஆஸி.

## தென்னாபிரிக்கா அதிரடி வெற்றி



போர்ட் எலிசபெத்தில் நடைபெற்று வரும் 2ஆவது டெஸ்டில் தென்னாபிரிக்கா 239 ஓட்டங்களில் ஆஸியைச்சுருட்டி வெற்றியைத் தனதாக்கிக்கொண்டது.

தென்னாபிரிக்கா – ஆஸ்திரேலியா இடையி லான 2ஆவது டெஸ்ட் போர்ட் எலிசபெத்தில் நடைபெற்று வருகிறது. முதலில் துடுப்பாட்டத் தைத் தேர்வு செய்த ஆஸ்திரேலியா முதல் இன்னிங்ஸில் 243 ஓட்டங்கள் எடுத்து ஆட்ட மிழந்தது. வோர்னர் 63ஓட்டங்கள் அடிக்க, ரபாடா ஐந்து விக்கெட்டுகள் கைப்பற்றினார்.

பின்னர் முதல் இன்னிங்ஸைத் தொடங்கிய தென்னாபிரிக்கா டி வில்லியர்ஸின் அபார சதம் (126 ஓட்டங்கள் ஆட்டமிழக்காமல்), டீன் எல்கர் (57 ஓட்டங்கள்), அம்லா (56 ஓட்டங்கள்) அரை சதங்களால் 382ஓட்டங்கள் குவித்தது. ஆஸ் திரேலியா அணி சார்பில் கம்மின்ஸ் அதிகபட்ச மாக 3 விக்கெட்டுக்கள் வீழ்த்தினார்.

பின்னர் 139 ஓட்டங்கள் பின்தங்கிய நிலை யுடன் ஆஸ்திரேலியா 2ஆவது இன்னிங்ஸைத் தொடங்கியது. வோர்னர் 13 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ரபாடா பந்தில் ஸ்டம்பை பறிகொடுத் தார். பான்கிராப்ட் 24 ஓட்டங்கள் எடுத்த நிலையில் நிகிடி பந்தில் போல்டானார்.

நட்சத்திர வீரர் ஸ்மித் 11 ஓட்டங்களிலும், ஷேன் மார்ஷ் ஓர் ஓட்டத்துடனும் வெளியேற, ஆஸ்திரே லியா 86 ஓட்டங்கள் எடுப்பதற்குள் 4 விக்கெட்டுக் களை இழந்து திணறியது. 3ஆவது வீரராக களம் இறங்கிய கவாஜா ஓரளவிற்கு தாக்குப்பிடித்து 75 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ஆட்டமிழந்தார்.

6ஆவது விக்கெட்டுக்கு மிட்செல் மார்ஷ் உடன் விக்கெட் கீப்பர் பெய்ன் ஜோடி சேர்ந்தார். இந்த ஜோடி நேற்றுமுன்தினம் 3ஆவது நாள் ஆட்ட முடி வில் 5 விக்கெட்டுகள் இழப்பிற்கு 180 ஓட்டங்கள் எடுத்திருந்தது. மார்ஷ் 39 ஓட்டங்களுடனும், பெய்ன் 5 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர்.

நேற்று 4ஆவது நாள் ஆட்டம் தொடங்கியது. ஆஸ்திரேலியா 211 ஓட்டங்கள் எடுப்பதற்குள் 9 விக்கெட்டுக்களை இழந்தது. கடைசி விக்கெட்டாக களமிறங்கிய ஹசில்வுட் 17 ஓட்டங்கள் எடுக்க ஆஸ்திரேலியா 239 ஓட்டங்களுடன் ஆட்டமி ழந்தது.

முதல் இன்னிங்ஸில் ஆஸ்திரேலியா 139 ஓட்டங்கள் பின்தங்கியிருந்ததால், ஒட்டுமொத்த மாக சரியான 100 ஓட்டங்கள் முன்னிலை பெற் றுள்ளது. இதனால் தென்னாபிரிக்காவின் வெற்றி 101 ஓட்டங்கள் வெற்றி இலக்காக நிர்ணயித் தது.

தொடர்ந்து களம் இறங்கிய தென்னாபிரிக்க அணி அதிரடியான ஆட்டத்தை வெளிப்படுத்த 4 விக்கெட்டுகளை இழந்து 6 விக்கெட்டுகளால் அபார வெற்றி பெற்றது.

# சந்திமலுக்கு 2 போட்டிகளில் தடை!



பங்களாதேஷிற்கு எதிரான ரி-20 போட்டியில் மெதுவாக பந்து வீசியமையால் இலங்கை கப்டன் சந்திமலுக்கு இரண்டு போட்டியில் விளையாடத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் நிதாஹாஸ் முத்தரப்பு ரி-20 கிரிக்கெட் தொடர் நடைபெற்று வருகிறது. நடைபெற்ற 3ஆவது போட்டியில் இலங்கை - பங்களாதேஷ் அணிகள் மோதின.

இதில் பங்களாதேஷ் 19.4 ஓவரில் 5 விக்கெட்டுக்களை மட்டுமே இழந்து 215 ஓட்டங்கள் எடுத்து அபார வெற்றி பெற்றது.

இரு அணிகளும் பவுண்ரிகள், சிக்ஸராகப் பறக்க விட்டமையால் பந்து வீச்சாளர்கள் திணறினார்கள். அடிக்கடி ஆலோசனை கேட்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது. இதனால் இலங்கை அணி குறிப்பிட்ட நேரத்திற்குள் நான்கு ஓவர்கள் குறைவாக வீசியது கண்டறியப்பட்டது.

ஐ.சி.சி. விதிமுறைப்படி நான்கு ஓவர்கள் என்பது அதிகப்படியான குற்றமாகும். இதனால் இலங்கை அணி கப்டனுக்கு இரண்டு டிமெரிட் புள்ளிகள் வழங்கப்பட் டன. இரண்டு டிமெரிட் புள்ளி கள் பெற்றால், ஒரு டெஸ்ட் அல் லது இரண்டு ஒருநாள் அல்லது இரண்டு ரி-20 ஆகியவற்றில் பங்கேற்க முடியாது.

மற்ற இலங்கை வீரர்களுக்கு 60 வீதம் அபராதம் விதிக்கப்பட் டுள்ளது. பங்களாதேஷ் அணி ஒரு ஓவர் குறைவாக வீசியதால் வீரர்களுக்கு 10 வீதம் அபராதமும், கப்டனுக்கு 20 வீதம் அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது.

## இண்டியன்வெல்ஸ் டெனிஸ்:

# 3ஆவது சுற்றில் செரீனா - வீனஸ்

இண்டியன்வெல்ஸ் டென்னிஸ் போட்டி யின் 3ஆவது சுற்றில் செரீனா – வீனஸ் மோத வுள்ளனர்.

அமெரிக்காவின் இண்டியன்வெல்ஸ் நகரில் சர்வதேச டென்னிஸ் போட்டி நடந்து வருகிறது. இதில் பெண்கள் ஒற்றையர் பிரிவில் நேற்று நடந்த 2ஆவது சுற்றில் அமெரிக்காவின் செரீனா வில்லியம்ஸ் 7:6 (5), 7:5 என்ற நேர் செட் கணக் கில் கிகி பெர்டென்ஸை (நெதர்லாந்து) தோற்கடித் தார்.

மற்றோர் ஆட்டத்தில் வீனஸ் வில்லியம்ஸ் (அமெ ரிக்கா) 6:3, 6:4 என்ற நேர் செட்டில் சோரனா கிர்ஸ்டியாவை (ருமேனியா) விரட்டினார்.


இதனால் 3ஆவது சுற்றில் நீண்ட இடை வெளிக்கு பிறகு சகோதரிகள் செரீனாவும், வீனஸும் மல்லுக்கட்ட இருக்கிறார்கள். இருவரும் இதுவரை 28 முறை நேருக்கு நேர் மோதியுள்ளனர். இதில் செரீனா 17போட்டிகளிலும், வீனஸ் 11போட்டிக ளிலும் வெற்றி கண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# பாம்பு நடனம் ஆடிய பங்களாதேஷ் வீரர்

சுதந்திரக்கிண்ணத் தொடரில் இலங்கைக்கு எதிரான ஆட்டத்தில் பங்களாதேஷ் வெற்றி பெற்ற மகிழ்ச்சியில் முஷ்பிகுர் ரஹிம் வித்தியாசமாக பாம்புநடனம் ஆடியமை சமூக வலைத்தளங்களில் வேகமாக பரவி வருகிறது.

முத்தரப்பு 20 ஓவர் கிரிக்கெட் தொடரில் நடந்த 3ஆவது லீக் ஆட்டத்தில் இலங்கை அணி நிர்ண யித்த 215 ஓட்டங்கள் இலக்கைப் பங்களாதேஷ் அணி 19.4 ஓவர்களில் எட்டிப்பிடித்து 5விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று வியக்க வைத்தது.



20 ஓவர் போட்டி வரலாற்றில் 4 ஆவது அதிகபட்ச சேசிங் இதுவாகும். விக்கெட்காப்பாளர் முஷ் பிகுர் ரஹிம் 72ஓட்டங்கள்எடுத்து இறுதி வரை களத் தில் இருந் தார்.

பங்களாதேஷ் தரப்பில் மொத்தம் 12 சிக்ஸர்கள் பறந் தன. ஓர் இன்னிங் ஸில் பங்களாதேஷ் அடித்த அதிகபட்ச சிக்ஸர் எண்ணிக்கை இது தான். அதேசமயம் இலங்கை அணி, 20 ஓவர் கிரிக்கெட்டில் சந்தித்த 50ஆவது தோல்வி இதுவாகும். 20 ஓவர் போட்டியில் 50 தோல்விகளை தழுவிய முதல் அணி என்ற மோசமான சாதனை அவர்கள் வசம் சென்றுள் ளது.

வெற்றிக்குரிய ஓட்டங்களை எடுத்ததும், மகிழ்ச்சி வெள்ளத்தில் ஆர்ப்பரித்த 30 வயதான முஷ்பிகுர் ரஹிம், இரண்டு கைகளையும் தலைக்கு மேல் கூப்பி வைத்து சில வினாடிகள் பாம்பு நடனம் ஆடினார். இது சமூக வலைத்தளங்களில் வைரல் ஆகி வருகின்றது .

## இரு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துள்ளது.

16 வயதுக்குட்பட்ட சிறுமியை வன்புணர்ந்த குற்றவாளிக்கு 10 ஆண்டுகள் கடூழியச் சிறைத் தண்டனை வழங்கி யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றம் நேற்றுத் தீர்ப்பளித்தது.

2013ஆம் ஆண்டு நவம்பர் முதலாம் திகதிக்கும் 2014ஆம் ஆண்டு பெப்ரவரி முதலாம் திகதிக்கும் இடைப்பட்ட காலப் பகுதியில் யாழ்ப்பாணம், கொட்டடிப் பகுதியில் 16 வயதுக்குட்பட்ட சிறுமி ஒருவர் 3 தடவைகள் வன்புணர் வுக்குட்படுத்தப்பட்டார் என்று யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

சிறுமி வழங்கிய தகவலின் அடிப்படையில் சந்தேகநபர் கைது செய்யப்பட்டார். அவருக்கு எதிரான சுருக்கமுறையற்ற விசாரணை யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் இடம்பெற்றது. விசாரணைகளின் நிறைவில் சந்தேகநபர் பிணையில் விடுவிக்கப்பட்டார். வழக்கேடுகள் சட்டமா அதிபர் திணைக்களத்திடம் பாரப்படுத்தப்பட்டன.

சந்தேகநபருக்கு எதிராக 3 குற்றச் சாட்டுக்களை முன்வைத்துச் சட்டமா அதிபரால், யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது.

யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி மா. இளஞ்செழியன் முன்னிலையில் இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு வந்தது.

எதிரி குற்றத்தை ஏற்றுக்கொள்கிறார். அந்தக் குற்றத்துக்காக அவர் இன்று வருந்துகிறார். அவரது குடும்ப நிலையைக் கருத்திற்கொண்டு குறைந்தபட்ச தண்டனை வழங்குமாறு எதிரியின் சட்டத்தரணி மன்றில் கருணை விண்ணப்பம் செய்தார்.

எதிரி தாமாக முன்வந்து குற்றத்தை ஏற்றுக்கொண்டுள்ளார். அவருக்கு அதிகபட்ச தண்டனைவழங்கப்படுவதுடன், பாதிக்கப்பட்ட சிறுமிக்கு இழப்பீடும் பெற்றுக்கொடுக்க மன்று உத்தரவிடவேண்டும் என்று அரச சட்டவாதி சுகந்தி கந்தசாமி மன்றில் விண்ணப்பம் செய்தார்.

எதிரி குற்றச் சாட்டுக்களை தாமாக முன்வந்து ஏற்றுக்கொண்டுள்ளார். 3 குற்றங்களுக்கும் எதிரிக்கு 10 ஆண்டுகள் கடூழியச் சிறைத் தண்டனை வழங்கப்படுகிறது. பாதிக்கப்பட்ட சிறுமிக்கு 2 லட்சம் ரூபா இழப்பீட்டை வழங்கவேண்டும். அதனை வழங்கத் தவறின் ஓர்ஆண்டு சிறைத் தண்டனையை அனுபவிக்க நேரிடும். 15 ஆயிரம் ரூபா தண்டமாகச் செலுத்தவேண்டும். அதனைச் செலுத்தத்தவறின் 3 மாதங்கள் சிறைத் தண்டனையை அனுபவிக்க நேரிடும் என்று மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் தண்டனைத் தீர்ப்பை வழங்கினார்.

இதேவேளை, 16 வயதுக்குட்பட்ட சிறுமியைக் கடத்திச் சென்று வன்புணர்வுக்குட்படுத்திய இளைஞனுக்கு 15 ஆண்டுகள் கடூழியச் சிறைத் தண்டனை வழங்கி நீதிபதி நேற்றுத் தீர்ப்பளித்தார்.

குற்றவாளியின் இந்தக் குற்றத்துக்கு உதவிய அவரது நண்பருக்கு 5 ஆண்டுகள் ஒத்திவைக்கப்பட்ட 2 ஆண்டுகள் கடூழியச்சிறைத்தண்டனை வழங்கி மேல் நீதிமன்றம் உத்தரவிட்டது.

வடமராட்சி, வல்வெட்டித்துறையில் 2014ஆம் ஆண்டு செம்ரெம்பர் மாதம் 13 வயதுச் சிறுமி ஒருவர் கடத்திச் செல்லப்பட்டு வன்புணர்வுக்குட் படுத்தப்பட்டார். சிறுமி வழங்கிய வாக்கு மூலத்தின் அடிப்படையில் 22 வயதுடைய (குற்றம் இடம் பெற்றபோது) இளைஞர்கள் இருவர் கைது செய்யப்பட்டனர்.

அவர்களுக்கு எதிராகப் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் சுருக்கமுறையற்ற விசாரணைகள் இடம்பெற்றன. அதன் நிறைவில் சந்தேகநபர்கள் பிணையில் விடுவிக்கப்பட்டனர். வழக்குக் கோவைகள் சட்டமா அதிபர் திணைக்களத்திடம் பாரப்படுத்தப்பட்டன.

முதலாவது சந்தேநபர் மீது கடத்தல் மற்றும் வன்புணர்வுக் குற்றச் சாட்டும் இரண்டாவது சந்தேகநபர் மீது கடத்தல் குற்றச் சாட்டும் முன்வைக்கப்பட்டு சட்ட மா அதிபரால் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது.

யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் முன்னிலையில் வழக்கு நேற்று விசாரணைக்கு வந்தது.

சந்தேகநபர்கள் இருவரும் குற்றத்தை ஏற்றுக்கொள்கின்றனர். தமது குற்றத்துக்காக அவர்கள் தற்போது மனம் வருந்துகின்றனர். அவர்கள் இருவரினதும் குடும்ப நிலையைக் கருத்திற்கொண்டு குறைந்தபட்ச தண்டனையை வழங்குமாறு மன்றிடம் கோருகின்றேன் என்று எதிரிகளின் சட்டத்தரணி மன்றில் கருணை விண்ணப்பம் செய்தார்.

எதிரிகள் குற்றத்தை ஏற்றுக்கொண்டமையால் அவர்களுக்கு அதிகபட்ச தண்டனை வழங்கவேண்டும். பாதிக்கப்பட்ட சிறுமிக்கு இழப்பீடு பெற்றுக்கொடுக்க மன்று உத்தரவிட வேண்டும் அரச சட்டவாதி சுகந்தி கந்தசாமி மன்றில் விண்ணப்பம் செய்தார்.

குற்றவாளிகள் இருவரும் குற்றத்தை ஏற்றுக்கொண்டுள்ளனர். முதலாவது எதிரி சிறுமியைக் கடத்திச் சென்று வன்புணர்ந்துள்ளார். இரண்டு குற்றங்களுக்காகவும் முதலாவது எதிரிக்கு 15 ஆண்டுகள் கடூழியச் சிறைத் தண்டனை வழங்கப்படுகிறது.

முதலாவது எதிரி, பாதிக்கப்பட்ட சிறுமிக்கு 5 லட்சம் ரூபா இழப்பீட்டை வழங்கவேண்டும். அதனை வழங்கத் தவறின் 2 ஆண்டுகள் சிறைத் தண்டனையை அனுபவிக்க வேண்டும். தண்டமாக 5 ஆயிரம் ரூபா செலுத்தவேண்டும். அதனை செலுத்தத் தவறின் ஒரு மாதச் சிறைத் தண்டனையை அனுபவிக்க நேரிடும்.

இரண்டாவது எதிரி, சிறுமியைக் கடத்திச் செல்ல முதலாவது எதிரிக்குத் துணை நின்றுள்ளார். அதற்கு அவருக்கு 2 ஆண்டுகள் கடூழியச் சிறைத் தண்டனை வழங்கப்படுகிறது. அந்தத் தண்டனை 5 ஆண்டுகளுக்கு ஒத்திவைக்கப்படுகிறது. அத்துடன், 5 ஆயிரம் ரூபா தண்டம் செலுத்தவேண்டும். அதனைச் செலுத்தத் தவறின் ஒருமாத சிறைத்தண்டனையை அனுபவிக்கவேண்டும் என்று மேல் நீதிமன்ற நீதிபதி தண்டனைத் தீர்ப்பை வழங்கினார். (ஐ - 7)

## மன்னார்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேலாகக் கடமை புரிந்த எம்.வை.எஸ்.தேசப்பிரிய இட மாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

தேசிய சகவாழ்வு நல்லிணக்கம் மற்றும் அரச கரும மொழி அமைச்சின் செயலாளராக அவர் நியமிக்கப்பட்டுள்ளார். அவர் நாளை அங்கு தனதுகடமையைப்பொறுப்பேற்கவுள்ளார். (ஐ-112)

## சமூக ஊடகக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குழுவின் தலைவருமான ஒஸ்ரின் பெர்னாண்டோவின் கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளார்

இது தொடர்பில் ஜனாதிபதியுடன் பேசிச் சமூக ஊடகங்களுக்கான தடையை நீக்க நடவடிக்கை எடுப்பதாக ஒஸ்ரின் பெர்னாண்டோ தெரிவித்தார் என்று இராஜாங்க அமைச்சர் ஹர்ஷா டி சில்வா கூறினார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஜப்பானுக்குப் பயணமாகி உள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, சமூக ஊடகங்கள் மீதான தடை நேற்றிரவு நீக்கப்படும் எனத் தொலைத் தொடர்பு அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்தார்.(ஐ)

## யாழ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முடக்கும் போராட்டத்தை இன்று ஆரம்பிக்கவுள்ளனர்.

நேற்றுத் திங்கட்கிழமை முதல் பல்கலைக்கழகத்தின் மின்குமிழ்கள் அணைக்கப்படல், நீர் விநியோகம் துண்டிக்கப்படல், பிரதான வாயிற் கதவுகளை மூடல் ஆகிய எதிர்ப்பு நடவடிக்கைகளை வெளிப்படுத்தி ஊழியர்கள் நேற்று முதல் போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

இந்தப் போராட்டத்துக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நிர்வாக உத்தியோகத்தர்களும் ஆதரவளிக்கின்றனர் என அறிவித்துள்ளனர். இதனால் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கல்வி நடவடிக்கைகள் முற்றாகத் தடைப்படும் எனக் கூறப்பட்டது.

உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் செயலாளர் மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவரால் கையெழுத்திட்டு வழங்கப்பட்ட உடன்பாட்டுக்கு அமைய உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளாமை, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் உயர்மட்ட பதவிகள் நிரப்பப்படுவதற்கான எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படாமை என்பனவற்றோடு, அந்தப் பதவிகள் மூலம் நிறைவேற்றப்படவேண்டிய கடமைகளில் காணப்படும் சீரற்ற தன்மையை நிவர்த்தி செய்யும்படி கல்விசாரா ஊழியர்களால் வழங்கப்பட்ட அழுத்தத்தைக் கவனத்திற் கொள்ளாமை ஆகியவற்றுக்கு எதிர்ப்புத் தெரிவித்து அனைத்துப் பல்கலைக் கழகங்கள் மற்றும் உயர்கல்வி நிறுவனங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் 24 தொழிற் சங்கங்கள் ஒருங்கிணைந்து இந்தத் தொடர் பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## சாவகச்சேரியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சாவகச்சேரி டச்சு வீதி, மருதடி பகுதியில் இவை மீட்கப்பட்டன எனத் தெரிவிக்கப்பட்டது.

டச்சு வீதியில் நீர்க் குழாய்கள் புதைக்கும் பணிகள் இடம்பெற்று வருகின்றன. இதற்காக மண் அகழும்போதே மண்ணில் புதையுண்ட நிலையில் இவை தென்பட்டுள்ளன.

இதுதொடர்பாக நீர்ப்பாசனத் திணைக்கள உத்தியோகத்தர்கள் சாவகச்சேரிப் பொலிஸாருக்குத் தகவல் வழங்கினர். அங்கு சென்ற பொலிஸார் சீருடையை மீட்டுச் சென்றுள்ளனர்.

மேலதிக விசாரணைகளைச் சாவகச்சேரிப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-21)

## ஜப்பானில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மொன்றை மேற்கொண்டு நேற்று முற்பகல் ஜப்பான் சென்றார்.

இந்தியாவுக்கான இரண்டு நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை வெற்றிகரமாக முடித்துக்கொண்டு அங்கிருந்து ஜனாதிபதி ஜப்பானுக்கான பயணத்தை மேற்கொண்டு டோக்கியோவில் உள்ள நரிடா சர்வதேச விமான நிலையத்தைச் சென்றடைந்தார். ஜனாதிபதியை அந்நாட்டு அரசின் விசேட பிரதிநிதிகள் வரவேற்றனர்.

இந்த அரச முறைப் பயணத்தில் ஜனாதிபதி ஜப்பான் நாட்டின் மன்னர் அகிஹினோ பேரரசரையும் மிசிகோ மகா ராணியையும் சந்திக்கவுள்ளார். அத்துடன் ஜனாதிபதிக்கு அந்த நாட்டின் உயர் கௌரவத்தை வழங்கி உத்தியோகபூர்வமாக வரவேற்கும் நிகழ்வு இன்று செவ்வாய்க் கிழமை பிரதமர் அலுவலகத்தில் இடம்பெறவுள்ளது.

இதனைத் தொடர்ந்து ஜனாதிபதிக்கும் ஜப்பான் பிரதமர் ஷின்சோ அபேக்கும் இடையில் இரு தரப்பு பேச்சு நடைபெறவுள்ளது. இதன்போது இரு நாடுகளுக்கும் இடையிலான பொருளாதார, வர்த்தக மற்றும் கலாசார உறவுகளைப் பலப்படுத்துவது குறித்து விரிவாகக் கவனம் செலுத்தப்படவுள்ளது.

விசேட வர்த்தக, முதலீட்டு மாநாட்டிலும் ஜனாதிபதி பங்குபற்றவுள்ளமையுடன், ஜெய்க்கா நிறுவனத்தின் தலைவர், ஜப்பான் வர்த்தக சங்கம் மற்றும் ஜப்பான் வெளிநாட்டு வர்த்தக சங்கம் உள்ளிட்ட நிறுவனங்களின் பிரதிநிதிகளையும் அவர் சந்திக்கவுள்ளார்.

ஜப்பான் விஜயத்தின்போது ஜப்பானில் உள்ள இலங்கை பௌத்த நிலையத்தின் தலைமை நாயக்க தேரரையும் ஜனாதிபதி சந்திக்கவுள்ளார், அந்நாட்டின் நவீன கழிவு முகாமைத்துவ நிலையத்தையும் அவர் பார்வையிடவுள்ளார்.

வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் திலக் மாரப்பன, அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலரும் இந்தப் பயணத்தில் ஜனாதிபதியுடன் இணைந்துகொண்டுள்ளனர். (ஐ)

## மகாநாயக்கர்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்பட்டுள்ள சூழ்நிலை தொடர்பில் நேற்று ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

அரசு வெறுமனே அரச சார்பற்ற நிறுவனங்களின் ஆலோசனையை கேட்டுச் செயற்படாமல், மகாநாயக்க தேரர்களின் ஆலோசனையைப் பெற்றுச் செயற்பட்டால் பிரச்சினைகளுக்குச் சரியான தீர்வைப் பெற்றுக்கொள்ள முடியும்.

அத்துடன் அரசு மத விழுமியங்களைத் தற்போது உதாசீனம் செய்து வருகின்றது. நான் பதவியிலிருக்கும்போது நெருக்கடியான நிலைமைகளில் அவர்களின் ஆலோசனைகளைப் பெற்றே செயற்பட்டேன்.

அரசமைப்பில் பௌத்த மதத்துக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது எனக் கூறுவதில் எந்தவொரு பயனுமில்லை. - என்றார். (ஐ)

## மஹிந்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒருபோதும் முடியாத காரியம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஊடகவியலாளர் சந்திப்பு கொழும்பில் நேற்று இடம்பெற்றது. இதன்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர்மேலும்தெரிவித்தவை வருமாறு:-

உள்ளூராட்சிச் சபைத் தேர்தலின் ஊடாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனை நிராகரித்துவிட்டு எதிர்க்கட்சித் தலைவராக முன்னாள் ஜனாதிபதி மஹிந்தவையே மக்கள் ஏற்றுக்கொண்டுள்ளார்கள்.

இந்த நாட்டு எதிர்க்கட்சி நாங்களே. அதனை பெப்ரவரி 10ஆம் திகதி இந்த நாட்டு மக்களே கூறிவிட்டார்கள். எதிர்க்கட்சியாக சிறிசேனவையா, சம்பந்தனையா அல்லது ஜே.வி.பியையா மக்கள் ஏற்றுக்கொண்டார்கள்? மஹிந்தவையே உண்மையான எதிர்க்கட்சியை வழிநடத்துகின்றார் என்பதை மக்களே கூறிவிட்டார்கள். வேறு எதிர்க்கட்சி இங்கு இல்லை. ஏனைய எதிர்க்கட்சிகள் என்பது போலியானவையாகும்.

இன்று நாங்கள் எதிர்க்கட்சி, விரைவில் நாங்கள் ஆளுங்கட்சியாவோம். பலம் வாய்ந்த எதிர்க்கட்சியாக இருந்துதான் ஆளுங்கட்சியாக மாறமுடியும். ஆனால் சம்பந்தனுக்கு ஆட்சியைக் கைப்பற்ற முடியுமா? அவர் பெயரளவில் எதிர்க்கட்சித் தலைவர். எதிர்கட்சித் தலைவர் என்பவர் யார்? எதிர்காலத் தலைவராக வரக்கூடியவராவார். ஆனால் சம்பந்தன் அல்லர், மஹிந்ததான் எதிர்காலத் தலைவர்.

இந்தநாட்டைச்சர்வதேசமே ஆட்சி செய்கிறது. இலங்கையின் வெளிவிவகாரக் கொள்கைகள் வெளிநாடுகளிலுள்ள தலைநகரங்களிலும், வெளிநாட்டு அமைச்சுக்களிலுமே வகுக்கப்படுகின்றன. இந்த நிலைமையை நாங்கள் ஏற்றுக்கொள்ள மாட்டோம்.

2016ஆம் ஆண்டில் முத்தரப்பு ஒப்பந்தமொன்று இருந்ததாகச் சம்பந்தன் கூறியிருக்கின்றார். ஐக்கிய நாடுகள் - இலங்கை அரசு மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே அந்த முத்தரப்பிலுள்ள பிரிவினர்கள். தமிழ்த்தேசியக்கூட்டமைப்புடன் இணைந்து ஐ.நாவுக்கு உறுதிமொழிகளை வழங்க இலங்கை அரசுக்கு அதிகாரம் வழங்கியவர் யார்? வழங்கப்பட்ட வாக்குறுதிகளை நிறைவேற்றும்படி அரசை வலியுறுத்தும்படி ஜெனீவா மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு இரா. சம்பந்தன் கடிதம் எழுதியிருக்கின்றார். எனவே முழுமையான அளவில் சர்வதேசமே செயற்படுத்துகின்றஒன்றாக இலங்கை அரசு மாறிவிட்டது.

கண்டிக் கலவரம் மற்றும் நாட்டில் எழுந்துள்ள நெருக்கடிகளுக்கு மத்தியில் காணாமல் ஆக்கப்படுவதைக் குற்றமாக்கும் சட்டத்தை அரச நாடாளுமன்றத்தில் நிறைவேற்றியதைப் போன்று, குழப்பகரமான சூழ்நிலைக்கு மத்தியில் புதிய அரசமைப்பையும் நிறைவேற்றும் தந்திரத்தை நல்லாட்சி மேற்கொள்ளும் சாத்தியம் உள்ளது. -என்றார். (ஐ)

# கண்டிக் கலவரத்தை விமர்சித்துள்ளார் முன்னாள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை

கொழும்பு, மார்ச் 13

இலங்கை அரசின் தற்போதைய செயற்பாடுகள் நம்பிக்கையை குறையச்செய்துள்ளன என மனித உரிமைகளுக்கான ஐ.நாவின் முன்னாள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை அதிருப்தி வெளியிட்டுள்ளார்.

ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கண்டியில் அண்மையில் இடம்பெற்ற கலவரம் தொடர்பிலும் அவர் கருத்து வெளியிட்டுள்ளார்.



இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கண்டியில் அண்மையில் இடம்பெற்ற வன்முறைகளை மதக்கலவரம் என்று எடுத்துக் கொள்ள முடியாது.

அது கிளர்ச்சி மற்றும் போர் அனுபவங்களை கொண்ட ஒரு சமூகத்தில் ஒரு மிருகத்தனமான செயற்பாடு.

கண்டியில் இடம்பெற்ற கலவரங்கள் தொடர்பில் குற்றவாளிகள் தண்டிக்கப்படா விட்டால் நாளை ஏனையவர்கள் சட்டத்தை தமது கைகளில் எடுக்கத் தயங்கமாட்டார்கள்.

புதிய அரசு, ஐக்கிய நாடுகளுக்கு வழங்கிய உறுதிமொழிகளை அடுத்து இந்த அரசு உறுதிமொழிகளை முழுமையாக நிறைவேற்றும் என நம்பிக்கை வைத்திருந்தோம்

எனினும், அரசின் தற்போதைய செயற்பாடுகள் நம்பிக்கையை குறையச் செய்துள்ளன.

ஐக்கிய நாடுகளுக்கு வழங்கிய உறுதிமொழிகளை நிறைவேற்றாமல் இலங்கையால் நம்பிக்கையை கட்டியெழுப்ப முடியாது என்றும் நவநீதம்பிள்ளை அரசின் கவனத்துக்கு கொண்டு வந்துள்ளார். (க)

## பாதிக்கப்பட்ட வீடுகளின் புனரமைப்பு ஆரம்பம்

கொழும்பு, மார்ச் 13

சமீபத்திய கண்டி அசம்பாவிதத்தால் பாதிக்கப்பட்ட வீடுகளை மீள் புனரமைப்புச் செய்யும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் லக்விஜய சாகர பலான்சூரிய தெரிவித்துள்ளார்.

இதேவேளை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கடந்த சனிக்கிழமை இப்பகுதிக்கு விஜயம் செய்திருந்தபோது பாதிக்கப்பட்டவர்களுக்கும் சொத்துக்களுக்கு சேதம் ஏற்பட்டவர்களுக்கும் விரைவாக இழப்பீடு வழங்கப்படும் என்று தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## மீண்டும் டெங்கு அபாயம்

கொழும்பு, மார்ச் 13

மழையுடன் கூடிய கால நிலை காரணமாக மீண்டும் டெங்கு நோய் பரவக்கூடிய சாத்தியம் காணப்படுகிறது என டெங்கு ஒழிப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதேவேளை, கடந்த வருடங்களுடன் ஒப்பிடுகையில் இவ்வருடத்தில் டெங்கு நோய் குறைவடைந்துள்ளது என டெங்கு ஒழிப்பு பிரிவின் விசேட வைத்தியர் ப்ரஷிலா சமரவீர தெரிவித்துள்ளார்.

டெங்கு நோய் தொடர்பில் பொதுமக்களின் அவதானம் மற்றும் விழிப்புணர்வு காரணமாக டெங்கு நோய் நூற்றுக்கு 40 வீதமாக குறைவடைந்துள்ளது என அவர் மேலும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பிரதேச அபிவிருத்திக்கான கூட்டம் புதுக்குடியிருப்பில் இடம்பெற்றது





முல்லைத்தீவு, மார்ச் 13

புதுக்குடியிருப்பு பிரதேச அபிவிருத்திக்குழுக் கூட்டம் நேற்று நடைபெற்றது.

இந்த நிகழ்வானது இணைத் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் சி. சிவமோகன் தலையில் ஆரம்பமாகி நடைபெற்றது.

இந்த கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி சாந்தி சிறிஸ்கந்தராஜா, வட மாகாண விவசாய அமைச்சர் க.சிவநேசன், வடமாகாண சபை பிரதி அவைத்தலைவர் வ.கமலேஸ்வரன், வட மாகாணசபை உறுப்பினர்கள் து.ரவிகரன், ஆ.புவனேஸ்வரன், திணைக்களத் தலைவர்கள், பிரதேச செயலாளர் உள்ளிட்ட அதிகாரிகள் மற்றும் சமூக மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (க81)

## கர்ப்பிணித் தாய்க்கு உதவி காப்பாற்றிய காவலருக்கு மகளிர் விழாவில் கௌரவம்




கர்ப்பிணிப் பெண்ணை காப்பாற்றி பாதுகாப்பான பிரசவத்திற்கு உதவி புரிந்த இலங்கை காவல்துறையைச் சேர்ந்த ஒருவர் வட மாகாண மகளிர் விவகாரம், புனர்வாழ்வளித்தல் அமைச்சின் ஏற்பாட்டில் கடந்த 8 ஆம் திகதி கிளிநொச்சியில் நடைபெற்ற மகளிர் தின விழாவில் கௌரவிக்கப்பட்டுள்ளார்.

சுழிபுரம் பகுதியைச் சேரந்த கர்ப்பிணித் தாயொருவர் பிரசவத்திற்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்குச் சென்று கொண்டிருந்த வேளை பயணித்த ஓட்டோ இயந்திரக் கோளாறு ஏற்பட்டு இடைநடுவில் நின்றிருந்தது.

இரவு வேளையென்பதால் பயணத்தை தொடரமுடியாது பரிதவித்து நின்றவர்களுக்கு அப்போது வட்டுக்கோட்டை காவல் நிலையத்தில் கடமையில் இருந்த செனிவிரட்ண என்ற காவலர் உதவியிருந்தார்.

நான்கு மாதங்களுக்கு முன்னர் நடைபெற்றிருந்த இந்தச் சம்பவத்தின்போது, வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் கடமையில் இருந்த செனிவிரட்ண(அமில) என்ற காவலர் வாகனத்தில் இரவுநேர வீதிக் காவல் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த வேளையில் இவ்வாறு ஓட்டோ பழுதடைந்து நின்றவர்களை கண்டுள்ளார்.

உடனடியாக தனது வாகனத்தில் ஏற்றி யாழ்.போதனா வைத்தியசாலைக்கு கொண்டு சென்று சேர்ப்பிக்க உதவியிருந்தார். வைத்தியசாலைக்கு செல்லும் வழியிலேயே வாகனத்தில் குழந்தை பிறந்திருந்தது. குறித்த நேரத்தில் இவரின் உதவி கிடைத்தமையால் தாயும் சேயும் பாதுகாக்கப்பட்டிருந்தனர்.

தற்போது பொலநறுவை பகுதியில் கடமையாற்றிவரும் இந்தக் காவலரின் மனிதநேய செயற்பாட்டை மதிப்பளிக்கும் வகையில் கௌரவ வட மாகாண மகளிர் விவகார அமைச்சர் திருமதி அனந்தி சசிதரனின் அறிவுறுத்தலின் பிரகாரம் அந்தப் பொலிஸ் உத்தியோகத்தர் வரவழைக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டுள்ளார்.

வட மாகாண மகளிர் விவகார அமைச்சின் ஏற்பாட்டில் கடந்த 8 ஆம் திகதி கண்டி வீதி, கிளிநொச்சியில் அமைந்துள்ள கூட்டுறவு மண்டபத்தில் நடைபெற்ற சர்வதேச மகளிர் தின விழாவின் போது இவரது மனிதநேய செயற்பாட்டை கௌரவிக்கும் முகமாக வட மாகாண மகளிர் விவகாரம், புனர்வாழ்வளித்தல் அமைச் சின் செயலாளர் ஆர். வரதீஸ்வரன் பொன்னாடை அணி விக்க, வடமாகாண அமைச்சர் திருமதி அனந்தி சசிதரன் நினைவுப் பரிசை வழங்கி சிறப்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## இன வன்முறையால் அர்ஜுன் மகேந்திரனை அரசு மறந்துள்ளது என்கிறார் மஹிந்த!

கொழும்பு, மார்ச் 13

மத்திய வங்கி பிணை முறி மோசடியில் தொடர்புடைய முக்கிய சந்தேகநபரான அர்ஜுன் மஹேந்திரனை தற்பொழுது அனைவரும் மறந்துள்ளனர் என முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார்.

அர்ஜுன் மகேந்திரன் குறித்து பொறுப்புச் சொல்ல வேண்டியவர்கள் தற்பொழுது அமைதியாக இருக்கின்றனர் எனவும் மகேந்திரனைக் கைது செய்ய தற்பொழுது எந்தவித அவசரமும் இல்லாமல் உள்ளது எனவும் மஹிந்த ராஜபக்ஷ எம்.பி. சுட்டிக் காட்டியுள்ளார்.

கண்டி சம்பவம் மற்றும் நாட்டில் ஏற்பட்ட பதற்றமான நிலைவரம் என்பவற்றால், அர்ஜுன் மகேந்திரனை பொறுப்பிலுள்ளவர்கள் மறந்துள்ளனர்.

இருப்பினும், மகேந்திரனின் நடவடிக்கைகள் குறித்து மக்கள் ஒருபோதும் மறக்க மாட்டார்கள் எனவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

## மாடுகளைக் கடத்தி இறைச்சியாக்குவதை நிறுத்தக்கோரி மக்களால் ஆர்ப்பாட்டம்!

யாழ்ப்பாணம்,மார்ச் 13

தீவகம் புங்குடுதீவுப் பகுதிகளில் மாடுகளைக் கடத்தி இறைச்சியாக்குவதனை நிறுத்தக்கோரி பிரதேச மக்களால் ஆர்ப்பாட்டமொன்று நேற்று முன்னெடுக்கப்பட்டது.

தீவகத்தின் பல பகுதிகளில் இனந்தெரியாதவர்களால் தொடர்ச்சியாக பசுக்கள் மற்றும் இளங்கன்றுகள் கடத்தப்பட்டு இறைச்சி ஆக்கப்படுகின்றமையை நிறுத்துமாறு கோரி, ஊர்காவற்றுறை பிரதான வீதியில் இந்த ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளப்பட்டது.

புங்குடுதீவுப் பிரதேசத்தில் நேற்றுக் அதிகாலை வளர்ப்பு மாடுகளை கடத்தும் முயற்சியில் இனந்தெரியாத சிலர் ஈடுபட்டிருந்த வேளை, ஊர்கா வற்றுறை பொலிஸாரால் ஒருவர் கைது செய்யப்பட்டமையுடன், கடத்தப்பட்ட மாடுகளும் கைப்பற்றப்பட்டன.

மீட்கப்பட்ட மாடுகள் ஊர்காவற்றுறை பொலிஸ் பாதுகாப்பில் கட்டப்பட்டுள்ளன. இந்த மாடுகளின் உரிமையாளர்களும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதுடன், மாடுகள் பிடிப்பவர்களை இனங்கண்டு உரிய தண்டனை வழங்க வேண்டும் என கோரி ஆர்ப்பாட்டத்தை மேற்கொண்டனர்.

# நேபாளத்தில் கோர விமான விபத்து 38 பேர் பலி; 23 பேர் படுகாயம்

## மேலும் பத்துப் பேரைக் காணவில்லை





நேபாளத் தலைநகர் காத்மண்டுவிலுள்ள சர்வதேச விமான நிலையத்தில் இடம்பெற்ற விமான விபத்தில் 38 பேர் உயிரிழந்துள்ளனர் எனவும் 23 பேர் காயமடைந்துள்ளனர் எனவும் 10 பேர் காணாமல் போயுள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

நேற்றுக் காலை பங்களாதேஷின் டாக்கா நகரில் இருந்து புறப்பட்ட விமானம் நேபாளம் விமான நிலையத்தில் தரையிறங்கும் போதே இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்த விமானத்தில் விபத்து இடம்பெறும் போது 67 பயணிகளும் 4 விமான சிப்பந்திகளும் இருந்துள்ளனர் எனச்செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்நிலையில், விமான விபத்தில் சிக்கி இதுவரை 38 பேர் உயிரிழந்துள்ளமையுடன், 23 பேர் காயமடைந்துள்ளனர். காணாமல் போனோரைத் தேடும் பணிகள் நடைபெற்று வருகின்றன எனவும் சர்வதேச செய்திகள் தெரிவித்துள்ளன.

# பேஸ்புக்குக்காக வீதிக்கு வருவேன்

## கம்மன்பில எச்சரிக்கை

கொழும்பு, மார்ச் 13

பேஸ்புக் சமூக வலைத்தளத்தின் ஊடாகக் கருத்து வெளியிடும் சுதந்திரத்தை உறுதிப்படுத்துவதற்காக ஆயிரக்கணக்கான இளைஞர், யுவதிகளுடன் வீதியில் இறங்கத் தயார் என நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

கண்டியில் ஏற்பட்ட மோதல்கள் தற்போது முடிவுக்கு வந்துள்ளன. இதற்கமைய அவசரகாலச் சட்டம் முடிவுக்கு வந்துள்ளது. நாளை அவசரகாலச் சட்டம் இரத்தாகின்றது. எனினும் பேஸ்புக் தடை இன்னும் நீக்கப்படவில்லை.

இனவாதத்தைத் தடுப்பதாகக் கூறி அரச விரோத ஊற்றாக இருக்கும் சமூகத் வலைத்தளங்களை முடக்கும் நடவடிக்கையில் அரசு ஈடுபட்டுள்ளது.

இந்தத் தடையானது செயற்பாட்டு ரீதியானது அல்ல. இளைஞர், யுவதிகள் வீ.பீ.என். வழியாகத் திருட்டுத்தனமாக பேஸ்புக் பார்க்கும்போது ஜனாதிபதியும் பிரதமரும் திருட்டுத்தனமாக பேஸ்புக்கில் வந்துள்ளனர்.

பகையுணர்வைப் பரப்ப பேஸ்புக்கை பயன்படுத்துகின்றனர் எனக் கூறி, அதனைத் தடை செய்வது கேலிக்குரியது.

உலகத்துக்கு நகைச்சுவையை வழங்காது உடனடியாக பேஸ்புக் தடையை நீக்குமாறு அரசை வலியுறுத்துகிறோம் – என்றார். (ஐ)

# பேச்சுச் சுதந்திரத்தை முடக்கியுள்ளதாம் அரசு!

## நாமல் குற்றச்சாட்டு



கொழும்பு, மார்ச் 13

அரசின் வெளிப்படைத்தன்மையை அதிகரிக்கும் விதத்தில் தகவலறியும் உரிமைச் சட்டத்தை அமுல்படுத்தியதாக மார்தட்டிக்கொள்ளும் அரசு, சமூக வலைத்தளங்களை முடக்கிப் பேச்சுச் சுதந்திரத்தை இல்லாமல் செய்துள்ளதென நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ சாடியுள்ளார்.

சமூக வலைத்தளங்கள் முடக்கப்பட்டுள்ளமை தொடர்பாக, அவர் நேற்றுத் திங்கட்கிழமை வெளியிட்டுள்ள டுவிட்டர் பதிவிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில் –

வரலாற்றில் எந்த அரசும் செய்யாத வகையில் தற்போதைய அரசு சமூக வலைத்தளங்களை முடக்கி வைத்துள்ளது.

தமக்குச் சாதகமான நிலைப்பாட்டில் சமூக வலைத்தளங்கள் செயற்பட்டபோது அவற்றைப் புகழ்ந்த ஜனாதிபதி மைத்திரியும் பிரதமர் ரணிலும், அவர்களுக்கு எதிரான நிலைப்பாடு ஏற்பட்டபோது ஏன் தடை செய்தனர்? – என்றார். (ஐ)












இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள நியூ சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 13.03.2018 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.